பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 26 வெள்ளிக்கிழமை (08.04.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :133

# வீதிகளை விஸ்தரிக்க வசதியாக காணி சுவீகரிக்க நடவடிக்கை

## வீதியோரக் கட்டடங்கள், மதில்கள் அகற்றப்படும் பூர்வாங்கப் பணிகள் விரைவில் தொடங்கும்

யாழ்ப்பாணம்,ஏப்ரல் 8

**ஏ-9 கண்டி வீதி உட்பட குடாநாட்டின் 6 பிரதான வீதிகள் அகலமாக்கி - விஸ்தரித்து - புனரமைக்கப்படவுள்ளன. இந்த வீதி விஸ்தரிப்புத் திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கையாக 6 வீதிகளினதும் இரு மருங்கிலும் - தலா 10 மீற்றர் அகலத்துக்கு காணி சுவீகரிக்கப்படும்.**

**அத்துடன், வீதிப்புனரமைப்புக்குத் தடையாகவுள்ள கட்டடங்கள், மதில்கள் என்பனவும் இடித்து அகற்றப்படும்.**

**இரண்டு பிரதான ஓடுபாதைகளைக் கொண்டதாக இந்த வீதிகள் மாற்றியமைக்கப்படும். அத்துடன், சைக்கிள்களில் செல்வோர் பயணிக்க வசதியாக வீதியின் இரு மருங்கிலும் தனியான - சிறிய ஓடுபாதைகளும் அமையும்.**

நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் - குடாநாட்டின் பிரதான வீதிகளை அகலமாக்கிப் புனரமைப்பது குறித்த கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ். செயலகத்தில் அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.கே.சிவாஜிலிங்கம், யாழ். செயலக உயர் அதிகாரிகள், பிரதேச செயலர்கள், மாநகரசபை அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் என்பவற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

இதில் ஏ-9 கண்டி வீதி, யாழ். - பருத்தித்துறை வீதி, யாழ். -பலாலி வீதி, யாழ். - காங்கேசன்

(18ஆம் பக்கம் பார்க்க)

## பாப்பரசருக்கு அஞ்சலி செலுத்த கிளிநொச்சியில் இன்று துக்கம்

பாப்பரசருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இன்று துக்கதினம் அனுஷ்டிக்குமாறு கிளிநொச்சி வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் கோரியுள்ளது.

இயல்பு நிலையைப் பாதிக்காத வகையில் அரச, தனியார் நிறுவனங்களில் கறுப்பு, வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டு துக்கதினம் அனுஷ்டிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (3)

## முதற் தடவையாக புலிகள் நெதர்லாந்துக்கு விஜயம்

லண்டன்,ஏப்.8

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக் குழுவினர் முதற் தடவையாக நெதர்லாந்து நாட்டுக்குச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் அங்குசென்ற அவர்கள்

(18ஆம் பக்கம் பார்க்க)

## இம்முறை 16 மாணவர்களே பத்து 'ஏ' சித்தி பெற்றனர்

யாழ்ப்பாணம்,ஏப்.8

கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்தன.

நேற்றுமுன்தினம் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட பரீட்சைப்பெறுபேறுகள் நேற்றையதினமே இங்கு பாடசாலைகளுக்குக் கிடைத்தன. நேற்று மாலை யாழ். கல்வி வலயப் பாடசாலைக்குப் பெறுபேறுகள் வழங்கப்பட்டன.

நேற்று மாலையிலேயே பேறுபேறுகள் கிடைக்கப்பெற்றதால், பாடசாலைகளின் சிறந்த பெறுபேறுகளை உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்னும் முற்கொண்டு திரட்டிய பெறுபேறுகளின் அடிப்படையில் முன்னணிப்

(02ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊடக நிர்வாகக் குழப்பம் ஜனாதிபதி தலையீட்டால் தணிந்தது

கொழும்பு,ஏப்.8

அரச ஊடகங்களின் நிர்வாகப் பொறுப்புக்கள் இரு அமைச்சர்களிடம் வழங்கப்பட்டதால் ஏற்பட்ட குழப்பங்கள், ஜனாதிபதியின் தலையீட்டை அடுத்துத் தணிந்துள்ளன.

ஊடகத்துறை அமைச்சராக மங்கள சமரவீர இருக்கின்றபோதும் அரசின் 'லேக் ஹவுஸ்' நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பைத் திடீரென நிதியமைச்சரிடம் வழங்கினார் ஜனாதிபதி.

இதனையடுத்து, அரச ஊடகங்கள் மறுசீரமைப்புத் தொடர்பாக அவற்றின் தலைவர்களுடன் நிதியமைச்சர் சரத் அமுனுகமவும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவும் ஒரே நேரத்தில் வெவ்வேறாகச் சந்திப்புகளை நடத்தப்போகிறார்கள் என அறிவித்தல் விடுத்திருந்த

(18ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி அனர்த்தத்தில் இறந்த மாணவனின் பெறுபேறு 9ஏ,சி

யாழ்ப்பாணம், ஏப்.8

கடந்த வருட இறுதியில் இடம்பெற்ற சுனாமி பேரலை அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்த யாழ். இந்துக் கல்லூரி மாணவன் ஒருவருக்கு ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் 9 ஏ. சி பெறுபேறு கிடைத்திருக்கிறது.

கீரிமலைக்கு நீராடச் சென்றவேளை அனர்த்தத்தில் சிக்கி உயிரிழந்த விமலநாதன் தர்சன் என்ற மாணவனுக்கே இந்தப் பெறுபேறு கிடைத்திருக்கிறது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை இடம்பெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் இந்த மாணவன் தோற்றியிருந்தார். அதே மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற ஆழிப்பேரலை இவரது உயிரையும் காவுகொண்டது. (கு-13)

## சிறுவர் இல்லங்களில் புதியவர்களைச் சேர்க்க நீதிமன்றிடம் முன் அனுமதி பெறப்படவேண்டும்

### யாழ். மேலதிக நீதிவான் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.8

குடாநாட்டில் இயங்கும் சிறுவர் இல்லங்களில் புதியவர்களைச் சேர்க்கும்போது நீதிமன்றத்திடம் முன்அனுமதி பெறப்படவேண்டும் என்று யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்களுடனான சந்திப்பொன்று யாழ்.நீதிமன்றில் நேற்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு அறிவுறுத்தல் ஒன்றைவிடுத்தார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை. மாணவர் 10 'ஏ' சித்திபெற்றார்

முல்லைத்தீவு,ஏப்.8

நேற்று வன்னியில் வெளியான ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை முடிவுகளின்படி முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி மாணவர் சி.பிரசாத் பத்துப் பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளார்.

இதேவேளை - மேற்படி கல்லூரியைச்சேர்ந்த ஜெ.சேதாரன் (9ஏ.சி), லோ.துஷ்யந்தி (7ஏ.2பி.சி),

(18ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்குள் ஐக்கியமாகிறது இ.தொ.கா.!

கொழும்பு,ஏப்.8

அரசுக்கு வெளியில் இருந்துகொண்டு அதற்கு ஆதரவு கொடுத்துவரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விரைவில் அரசுக் கூட்டமைப்புக்குள் முழுமையாக ஐக்கியமாகப் போகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இ.தொ.கா.தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுகளின்போது இதற்கான இணக்கம் காணப்பட்டதாகத் தெரிகின்றது.

அரசுக்குள் இ.தொ.கா. ஐக்கியமாவதற்கு வெகுமதியாக அக்கட்சியின் பிரதிநிதி ஒருவருக்கு - பெரும்பாலும் அதன் தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கு - அமைச்சரவை அந்தஸ்துள்ள உயர்மட்ட அமைச்சுப் பொறுப்பு ஒன்றை வழங்கவும் இணக்கம் காணப்பட்டதாக அறியவந்தது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வெளியிலிருந்து ஆதரவு வழங்காமல், அரசின் முழுமையான பங்காளியாக மாறி ஆதரவு வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இ.தொ.கா.தலைவர் ஆறுமுகன் தொண்டமானைக் கேட்டிருக்கிறார் எனக் கூறப்படுகின்றது.

இதற்குப் பரிசாக அமைச்சரவை அந்தஸ்

(18ஆம் பக்கம் பார்க்க)

## சீனப் பிரதமர் இன்று வருகிறார்

கொழும்பு,ஏப்.8

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சீனப் பிரதமர் வென் ஜியாபோ இன்று இலங்கை வருகிறார்.

கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோருடன் சீனப் பிரதமர் பேச்சுகளை நடத்துவார். (எ-க)

## மின்சாரசபை மறுசீரமைப்பு விடயத்தில் ஜே.வி.பியின் நிபந்தனைக்கு பணிந்தது அரசு

கொழும்பு,ஏப்.8

இலங்கை மின்சாரசபையை மறுசீரமைப்பது தொடர்பான விடயத்தில் ஜே.வி.பி. விதித்த புதிய நிபந்தனைக்கு அரசு அடிபணிந்துள்ளது.

மறுசீரமைப்பு நடவடிக்கையானது மின்சார சபையைத் தனியார்மயமாக்காது என்று உறுதிப்படுத்தும் சட்டம் ஒன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு வசதியாகப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

நேற்று மாலை அமைச்சர் டி.எம்.ஜயரத்ன தலைமையில் அமைச்சரவை கூடியது. அதில் இந்த விடயம் பற்றி விரிவாக ஆராயப்பட்டது. இறுதியில் மின்சாரசபை தனியார் மயப்படுத்தப்படாது என்பதை உறுதிப்படுத்தும் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த இந்த அமைச்சரவைக் கூட்டம் இறுதி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டது. நேற்றைய கூட்டத்திலும் ஜனா

(18ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எந்த நேரமும் யுத்தம் வெடிக்கலாம்! அபாயச் சங்கு ஊதுகிறது ஐ.தே.க.

## செய்தியாளர் சந்திப்பில் பிரஸ்தாபிப்பு

கொழும்பு,ஏப்.8

நாட்டின் பாதுகாப்பு நிலைமை கேள்விக் குறியாகிவிட்டது. வடக்கு - கிழக்கு மாகாணத் தில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்துள்ளன. கிழக்கு மாகாணத்தில் தினசரி படுகொலைகள் இடம்பெற்ற வண்ணமே இருக்கின்றன. எந்த நேரமும் யுத்தநிறுத்த ஒப்பந்தம் கிழித்து எறியப் பட்டலாம். அரசின் பொறுப்பற்ற செயல்களி னால் எந்த நேரத்திலும் யுத்தம் வெடிக்கலாம் என அபாயச்சங்கு ஊதுகின்றது ஐக்கிய தேசி யக் கட்சி.

ஐ.தே.கவின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத் தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசில் பொது மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை. நாட்டின் இறைமைக்கே அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. திருகோணமலைத் துறைமுகத்தைச் சூழப் புலிகள் 40 புதிய முகாம்களை அமைத்துள்ள னர். மணிராசா குளத்தில் புலிகளின் பாரிய பயிற்சிப் பாசறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்றெல்லாம் குற்றஞ்சாட்டியே ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று அமைச் சுக்களைப் பலாத்காரமாகத் தட்டிப்பறித்தார்.

தாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் இவற்றை எல்லாம் அழித்து, ஒழித்து விடுவார்கள் என்றும் அவர்கள் தம்பட்டம் அடித்தனர்.

இப்பொழுது இவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஒருவருடம் பூர்த்தியாகிவிட்டது. இன்று வரை எத்தனை முகாம்களை அழித்துவிட்டனர் என்று கூறமுடியுமா? - என்றும் ஜீ.எல்.பீரிஸ் கேள்வி எழுப்பினார்.

இல்லாத ஒன்றைக் கூறுவதுதான் ஜனாதி பதியின் வழமை. கடந்த ஒரு வருட காலத்தில் பொதுமக்கள் மேல் பல்வேறு சுமைகள் பலவந்தமாகத் திணிக்கப்பட்டுள்ளன. வாழ்க் கைச் செலவு 18 வீதத்தால் அதிகரித்துள்ளது. வருமானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

மின்சாரத்துறை, பெற்றோலியக் கூட்டுத்தா பனம், ரயில்வே மற்றும் போக்குவரத்துத் துறை யினரின் போராட்டம் நாட்டைச் சீர்குலைத்து விட்டது. இவர்கள் அனைவரும் முன்பு ஜே.வி. பியினராலும் ஸ்ரீ.ல.சு.கட்சியினராலும் உசுப்பி விடப்பட்டவர்கள். இப்பொழுது அவர்களை சமா ளிக்க முடியாமல் தடுமாறுகின்றனர்.

பாதுகாப்புத் துறையிலும் ஸ்திரமற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்புக்கு உத்தரவா தம் இல்லை. பொதுமக்களுக்கு வழங்கிய வாக் குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

வடக்கு - கிழக்கில் சட்டமும் ஒழுங்கும் கேலிக் கூத்தாக்கப்பட்டுள்ளன.

கிழக்குப் பிராந்தியத்தில் தினசரி படுகொலை கள் இடம்பெறுகின்றன. அரசியல்வாதிகள், இயக்க உறுப்பினர்கள், அரச அதிகாரிகள், பொலீஸார், பொதுமக்கள் எனத் தொடர்ச்சி யாகக் கொல்லப்படுகின்றனர். இன்றுவரை இவற றுக்குப் பொறுப்பான் ஒருவரையாவது கைது செய்து சட்டத்தின்முன் நிறுத்த முடியவில்லை.

எந்த நேரத்திலும் யுத்தநிறுத்த ஒப்பந்தம் கிழித்து ஏறியப்பட்டலாம். ஒரு யுத்தமே ஏற் படக்கூடிய சகுனம் தெரிகின்றது. இதனால், ஏற் படும் விபரீதங்களுக்கு ஜனாதிபதியும் அரசுமே பொறுப்பேற்கவேண்டும் - எனப் பேராசியர் பீரிஸ் வலியுறுத்தினர். (எ-க)

## பாப்பரசருக்கு அனுதாபம்

கொழும்புத்துறை,ஏப்,8

புனித பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் மறைவுக்கு அனுதாப அஞ்சலி தெரி விக்கும் வகையில் யாழ் குடாநாட்டின் அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களில் பாப்பரசர் கொடி, கறுப்புக்கொடி என்பன அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளன.

திருத்தந்தையின் திருவுருவப் படங்களை வைத்து மக்கள் அஞ்சலி செலுத்தி வருகின் றனர். அதேவேளை, இன்று பாப்பரசர் அடக்கம் செய்யப்படும் நேரத்தில் (இலங்கை நேரப்படி பப. 3.30 மணி) அனைத்து கத்தோலிக்கத் தேவா லயங்களிலும் இரங்கல் திருப்பலிகள் நிறை வேற்றப்படவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (த-30-51)

# இம்முறை 16 மாணவர்களே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளில் 16 மாணவர்கள் பத்துப் பாடங் களிலும் அதி விசேட சித்தி ('ஏ'சித்தி) பெற்றி ருப்பது தெரியவந்துள்ளது.

இவர்களில் யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆறு பேரும், வேம்படி மகளிர் கல்லூ ரியைச் சேர்ந்த ஐந்து பேரும், சென். ஜோனஸ் கல்லூரியைச் சேர்ந்த இருவரும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஒருவரும் அடங் குவர்.

மேற்படி பாடசாலைகளில் 10 'ஏ' சித்தி பெற்ற மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களான, சாந்தநாயகம் நிஷாந்தன், சிவகுருநாதன் தேஜோமயானந்தா, சகாதேவன் விதுஷன், சிவநாதன் யோகானந்த், குணசிங்கம் அமரேஷ, தளையசிங்கம் அஜந்தன் -

வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளான, பூர்ணிமா கதிரவேலு, தர்சிகா அருணா சலம், கிருத்திகா கோபாலசுதந்திரன், சிவமங்கை சண்முகலிங்கம், சசிகலா சுப்பிரமணியம் -

சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களான, சத்தியமூர்த்தி சாருஜன், குலதாஸ் டில்சன் - யாழ். மத்திய கல்லூரி மாணவரான, சண்முக ராஜா தவக்குமரன் - ஆகியோரே 10 'ஏ' சித்தி பெற்றவர்களாவர்.

யாழ். நகரத்துக்கு வெளியே வேறு சில பாடசாலைகளிலும் ஒரு சில மாணவர்கள் 10 'ஏ' சித்திபெற்றிருப்பது தெரியவந்துள்ளது.

குறிப்பாக, வடமராட்சி இந்து மகளிர் கல் லூரியைச் சேர்ந்த தியாகராஜா தாரணி, வட மராட்சி மத்திய மகளிர் கல்லூரியைச் சேர்ந்த நிஷாந்தி விக்னேஸ்வரமூர்த்தி ஆகியோர் 10 'ஏ' சித்தி பெற்றுள்ளனர்.

பாடசாலைகளில் இருந்து நேற்றுமாலை திரட்டமுடிந்த பெறுபேற்று விவரம் பாடசாலை ரீதியாக வருமாறு:-

### கொக்குவில் இந்து

வதனி சிவகுமார் (9ஏ,பி), வலஜி சிவஞா னராஜா (8ஏ,2பி), நடராஜமணி சிவாஸ்கர் (8ஏ,சி, எஸ்), முருகவேல் மயூரன் (7ஏ,2பி,சி), யோக ராஜா டினேஸ்சாந் (6ஏ,பி,சி), சிறிஸ்கந்தராஜா பார்த்தீபன் (6ஏ,3பி.எஸ்), வரதராஜா தனுஜன் (6ஏ,2பி,2சி), ஜனனி பரமநாதன் (6ஏ,4சி), ரம்யா ஸ்ரீகாந்தன் (6ஏ,3பி,சி), சர்வானந்தி ஞானானந்தா (6ஏ,பி,3சி).

### ஸ்கந்தா

பா.கோபி (8ஏ), வி.சயந்தன் (6ஏ), ம.கவிதா (6ஏ).

### யாழ். இந்து மகளிர்

பரஞ்சோதி பாமினி (9ஏ,பி), தனராஜா கீர்த்திகா (8ஏ,பி.சி), தேவராஜா கௌசிகா (8ஏ,2பி), பூபாலசிங்கம் தர்சிகா (8ஏ,பி.சி), ஜெய ராமன் சயந்தவி (7ஏ,பி,2சி), பூபாலசிங்கம் ரோகினி (7ஏ,2பி,சி), சிவானந்தன் சிவரூபினி (7ஏ,2பி,சி), சுந்தரலிங்கம் கஜானா (7ஏ,2பி,சி).

### வடமராட்சி இந்து மகளிர்

வேலாயுதம் சுகன்ஜா (9ஏ,சி), ராஜமோகன் சுஜிதா (9ஏ,பி), பத்மநாதன் பாரதி (9ஏ,சி), பரஞ்சோதி சுபேந்தினி (8ஏ,பி.எஸ்), செல்வராஜா செல்வராஜிதா (8ஏ,2பி), பாலேந்திரன் மயூரி (8ஏ,பி,சி), தனிநாயகம் விநோதினி (8ஏ,2பி), மகேந்திரன் போசனா (7ஏ,பி,2சி).

### சுண்டுக்குளி மகளிர்

இராஜேந்திரன் சுபா (9ஏ,சி), குணரட்ணம் தர்சிகா (8ஏ,2பி), ஞானப்பிரகாசம் துவாரகா அஃனேஸ் (8ஏ,பி,சி), சிவகுமார் சயந்திகா (7ஏ,3பி), வண்ணமயில் டயானி (7ஏ,2பி,சி), கேசவன் துள சிகா (7ஏ,பி,சி), சிவரட்ணம் காருன்ஜா (7ஏ,பி, 2சி), காராளசிங்கம் மனோசிகா (7ஏ,3பி).

### யாழ். மத்திய கல்லூரி

கணேசலிங்கம் விஜயராஜ் (9ஏ,பி), பேரின்ப நாதன் ரவிக்குமார் (7ஏ,பி,2எஸ்), சண்முகம் சொலமன் (7ஏ,2பி,எஸ்), பரமலிங்கம் தர்சானந் (6ஏ,2பி,2சி), இராஜரட்ணம் ஏபிரகாம் பிரசாத் (6ஏ,4பி), வை.எல்.சுரேந்தர் (6ஏ,3சி).

### வேம்படி மகளிர்

இவாஞ்சலின் மிருணாளினி ஜெயராஜா (9ஏ,சி), கஜித்தா இராஜேந்திரம் (9ஏ,பி), கோபிகா குணராஜா (9ஏ,பி), கஜனி நித்தியானந்தராஜா (9ஏ,சி), மாதுரி ஸ்ரீபாலன் (9ஏ,பி), துஷ்யந்தி யாதவகுலசிங்கம் (9ஏ,சி), சாலினி நடேசலிங் கம் (9ஏ,சி), சங்கதா திருச்செல்வராஜா (9ஏ,சி), சிந்துரேகா லோகேஸ்வரன் (9ஏ,சி), காயத்திரி அரியரட்ணம் (9ஏ,சி), யசோதா இராசையா (9ஏ,பி), தர்மிகா திஸ்ஸநாயகம்பிள்ளை (8ஏ,2சி), அபி ராமி சந்திரகாந்தன் (8ஏ,பி,சி), கௌசினி இரா சையா (8ஏ,பி,சி), நிரோஷிகா யோகநாதன் (8ஏ,2பி), கல்யாணி தியாகராசா (8ஏ,2சி), காயத் திரி யோகதாஸ் (8ஏ,2பி), மஞ்சுளா துரைராஜா (8ஏ,2பி), தட்சாயினி விஜயநாதன் (8ஏ,பி,சி), வனஜா கிருஷ்ணதாசன் (8ஏ,பி,சி).

மைதிலி சிவசுப்பிரமணியம் (7ஏ,2பி,சி), துஷ் யந்தி அம்பிகைபாலன் (7ஏ,2பி,சி), பிருந்தா இரா ஜரட்ணம் (7ஏ,2பி,சி), ஜெனனி சர்வானந்தன் (7ஏ,2பி,சி), லிங்காஜினி சண்முகலிங்கம் (7ஏ, 3பி), விஜித்தா முத்துலிங்கம் (7ஏ,பி,சி,எஸ்), செந்தூரி ஜெயராஜா (7ஏ,2பி), சத்தியகலா கோமஸ்வரநாதன் (7ஏ,3பி), சிவரூபினி தணிகா சலம் (7ஏ,பி,2சி), ஆரணி சிவபாலசுந்தரம் (7ஏ,2பி,சி), லக்சிதா கனகேஸ்வரன் (7ஏ,3பி), மயூரதி துரைராஜசிங்கம் (7ஏ,3பி), கௌந்திகா பாலசூரியன் (7ஏ,3பி), மேகலா ஜெகதீசன் (7ஏ, 2பி,சி), வேகலா ஜெயதரன் (7ஏ,3பி), அபிராமி துரைராஜா (7ஏ,பி,2சி), ஜபிந்தா மகேந்திர ராஜா (7ஏ,2பி,சி), கஜித்தா வசீகரன் (7ஏ,3பி).

காமலிட்டா மரியநாயகம் (6ஏ,3பி,சி), பவித் திரா சகாதேவன் (6ஏ,3பி,சி), கஜித்தா சச்சிதா னந்தம் (6ஏ,4பி), மீரா குமாரசாமி (6ஏ,3பி,சி), சிவதேவி தங்கவேல் (6ஏ,3பி,எஸ்), கம்சினி கேதீஸ்வரசர்மா (6ஏ,பி,2சி,எஸ்), லாவண்யா மகேந்திரராஜா (6ஏ,4சி), சிந்துஜா சத்திய பாலன் (6ஏ,3பி,எஸ்), சுபாங்கி செந்தில்குமரன் (6ஏ,2பி,சி,எஸ்), தனுஷா தர்மலிங்கம் (6ஏ,பி, 2சி,எஸ்), அபிராமி மகேந்திரன் (6ஏ,3பி,சி), லிபித்தா பத்மநாதன் (6ஏ,4பி), மலர்மதி ஜெயரட் ணம் (6ஏ,2பி,2சி), புவி விஸ்வலிங்கம் (6ஏ, 3பி,சி), சஜித்தா வேதாரணியம் (6ஏ,2பி,2சி), சாலினி புஸ்பநாதன் (6ஏ,2பி,சி,எஸ்), கஸ்தூரி சிவராஜசுந்தரம் (6ஏ,4பி), மேனகா ஜெகதீசன் (6ஏ,பி,3சி), துளசி தர்மகுலசிங்கம் (6ஏ,2பி,2சி), வேம்பா ஜெயதரன் (6ஏ,3பி,சி).

### சென்.ஜோன்ஸ்

நிவோ றுவோஸ் ராஜ்குமார் (9ஏ,பி), தன பாலசிங்கம் சஜீவன் (9ஏ,பி), குகதாசன் சஞ் ஜீவா (9ஏ,எஸ்), கணபதிப்பிள்ளை மாதேவத னன் (9ஏ,சி), ஸ்ரீகாந்தன் ஜனார்த்தனன் (9ஏ,பி), சிவலோகநாதன் ஜனகன் முத்துக்குமார் (8ஏ,2பி), மரீநோசுகீந்திரன் அருள்ராஜா (8ஏ, பி,சி), ரவீந்திரராஜா அனுசாந்தன் (7ஏ,2பி,சி), வேலாயுதம்பிள்ளை பிரணவன் (7ஏ,2பி,சி), இரா ஜநாயகம் கஜானன் (7ஏ,பி,சி), அருணகிரி நாதன் கரிஸ் (7ஏ,சி.எஸ்), பாலகுருநாதன் சக்திநாதன் (7ஏ,3பி).

### வடமராட்சி மத்திய பெண்கள் கல்லூரி

நிஷாந்தி தர்மகுலசிங்கம் (9ஏ,பி), நிவே திகா வடிவேலு (9ஏ,பி), கம்சிகா கருணராஜா (8ஏ,2பி), யுசித்தா சிவப்பிரகாசம் (8ஏ,2பி), அனுஷா சுப்பிரமணியம் (8ஏ,2பி), ரேகா அருமை நாயகம் (8ஏ,பி,சி), மிதுலா தனபாலசிங்கம் (7ஏ,2பி,சி), மேனகா நவரட்ணம் (7ஏ,2பி,சி).

### ஹாட்லி

விமலநாதன் ரஜீபன் (9ஏ,சி), தர்மானந்தா தயாபரன் (9ஏ,பி), நித்தியானந்தம் வசீகரன் (9ஏ,பி), செல்வரத்தினம் வசீகரன் (9ஏ,பி), கருணானந்தன் அலன்ஜெரோசன் (9ஏ,பி), சிறி சோதிநாதன் நிமலன் (8ஏ,பி,சி), கணபதிப் பிள்ளை நிதர்சன் (8ஏ,2பி), ஜெயக்குமார் பூங் குன்றன் (8ஏ,2பி), குலேந்திரன் ரகுராம் (8ஏ,2பி), ரட்ணகுமார் ரஜீபன் (8ஏ,2பி).

பாலசுப்பிரமணியம் ஞானராஜ் (8ஏ,பி,சி), நந்தகுமார் கார்த்திக் (7ஏ,2பி,சி), சிவசிதம்பரம் அகிலன் (7ஏ,பி,2சி), செல்வராசா பிரதீபன் (7ஏ, 3பி), சிவகுமார் பிரதீபன் (7ஏ,3பி), கணநாதன் ரஜீபன் (7ஏ,பி,2சி), சிதம்பரநாதன் அச்சுதன் (7ஏ,பி,சி,எஸ்), சிவபுத்திரன் தசபுத்திரன் (7ஏ, பி,2சி), திரவியராஜா துவாரகன் (7ஏ,2பி,எஸ்), தேவநாயகம் ஜோன்மேரி (7ஏ,2பி,சி), சிதம் பரப்பிள்ளை நெடுமாறன் (7ஏ,2பி,எஸ்).

### சண்டிலிப்பாய் இந்து

கு.குகானந் (8ஏ,2பி), ச.கஜநீதன் (7ஏ,3பி).

### யாழ். இந்து

திருநாவுக்கரசு பிரசாந் (9ஏ,பி), கிருஸ் ணராஜன் யாதவராஜன் (9ஏ,சி), தனபாலசிங்கம் பாலரூபன் (9ஏ,சி), பாலசுப்பிரமணியம் ஜனார்த் தன் (9ஏ,சி), அருளானந்தம் சுலக்ஷன் (9ஏ,பி), தர்மலிங்கம் திவாகரன் (9ஏ,சி), சிவரட்ணம் சுலக் ஷன் (9ஏ,சி), நடராஜா பிரகாஸ் (9ஏ,எஸ்), தர் மகுலசிங்கம் கோகுலன் (9ஏ,சி), விமலநாதன் தர்சன் (9ஏ,சி), ஈஸ்வரநாதன் துவாரகன் (9ஏ,பி), காந்தரூபன் முகிலன் (9ஏ,சி), சுந்தரராஜா தனு ராஜ் (9ஏ,பி).

இராஜேஸ்வரன் அர்ஜீன் (8ஏ,சி,எஸ்.), ஜெய ராஜசிங்கம் ஜெயசுதன் (8ஏ,பி,சி), கமலநாதன் கஜீபன் (8ஏ,பி,சி), வினோத்ராஜ் அன்ரனியுவ ராஜ் (8ஏ,2பி), கிருஷ்ணகாந்தன் கிரிசன் (8ஏ,பி,சி), கனகசபாபதி ஜனகன் (8ஏ,பி,எஸ்), தவராசா ஜனந்தன் (8ஏ,பி,சி).

துரைசிங்கம் ஜெயந்தன் (8ஏ,பி,சி), நவ ரட்ணம் நவராஜகுமரன் (8ஏ,2பி), பரமேஸ்வரன் அரிராம் (8ஏ,பி,சி), சிவநாதன் அருணன் (8ஏ, பி,எஸ்), இராஜேஸ்வரன் நிருஷன் (8ஏ,பி,சி), கணேசலிங்கம் நிஷாந் (8ஏ,பி,எஸ்), மகேந் திரன் பிருந்தாபன் (8ஏ,சி,எஸ்), ராஜலிங்கம் சுகிராஜ் (8ஏ,2சி).

செந்தில்நாதன் சொமிஷன் (8ஏ,சி,எஸ்), யோகேஸ்வரன் தினேஸ்வரன் (8ஏ,2சி), குல ராஜசிங்கம் விஜிக்குமார் (8ஏ;2பி), வரதராஜா யோகதீஸன் (8ஏ,2பி), சிவமூர்த்தி மதீசன் (8ஏ, பி,எஸ்), பாலசந்திரன பிரதீப் (8ஏ,2பி), சத்திய சீலன் சஜீரதன் (8ஏ,சி,எஸ்), கமலநாதன் பிரண வரூபன் (7ஏ,2பி,எஸ்), சிறிபதி சிறிதேபவன் (7ஏ,3பி), மகாலிங்கம் அருளினியன் (7ஏ,2பி, எஸ்), சிவராசா பாரதன் (7ஏ,2பி,எஸ்), யோகரா ஜன் கஜந்தன் (7ஏ,பி,2சி), சிவலிங்கம் இளமா றன் (7ஏ,2பி,சி), தில்லைநாதன் கிசோக்குமார் (7ஏ,பி,2சி), சிவலிங்கமூர்த்தி சஜிந்திரன் (7ஏ,2பி,சி), விஜயகாந்தன் அஜந் (7ஏ,பி,2சி), பக்தகுணசீலன் அருண்புஜன் (7ஏ,2பி,சி), சிவ பாலசற்குணம் மோகனராஜ் (7ஏ,3பி), நவரட் ணம் நவசாந்தன் (7ஏ,2பி,சி), குணரத்தினம் பிர சாந் (7ஏ,2பி.சி).

### வேலணை மத்திய கல்லூரி

விஜிதா குலேந்திரன் (7ஏ,2பி,எஸ்), வக்சினி சூரியகுமார் (6ஏ,2பி,சி,எஸ்).

### சாவகச்சேரி மகளிர்

தாட்சாயினி கோபாலகிருஷ்ணன் (7ஏ,3பி), சுஜிதா சுந்தரலிங்கம் (7ஏ,2பி).

### மீசாலை வீரசிங்கம்

பஞ்சாட்சரம் ஜனனி (9ஏ,எஸ்).

### யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் ம.வி

இராஜதுரை பானோஜா (8ஏ,பி,சி), ஜேசுதா சன் நிரோஜா (7ஏ,பி,சி,எஸ்).

(ஜ-எ-த-7-12-13)

# கிளிநொச்சி கல்வி வலய ஜி.சீ.ஈ.சாதாரணதர முடிவுகள்

கிளிநொச்சி,ஏப்.8

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளின் ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் நேற்றுப் பிற் பகல் அங்கு வெளியாகின.

முதற்கொண்டு கிடைத்த முடிவுகளின் படி கிளிநொச்சி இந்துக்கல்லூரியைச் சேர்ந்த பஞ்சாட்சரம் கோகுலன் 9ஏ,பி பெற்று மாவட் டத்தில் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளின் பெறு பேறுகள் பாடசாலைகள் ரீதியாக வருமாறு :-

### கிளிநொச்சி இந்து

பஞ்சாட்சரம் கோகுலன் (9ஏ,பி), இலட்சு மணன் சுரணுதா (6ஏ,3பி,எஸ்), தங்கராசா ஜெய ரூபி (5ஏ,2பி,2சி), நிர்மலஜீவா நிருத்திகா (4ஏ, 4பி,2சி), இராமலிங்கம் சிறிசாந்திலதா (4ஏ,2பி, சி,3எஸ்),

### கிளிநொச்சி சென். திரேசா

ஆன்டனுஷா குலேந்திரன் (8ஏ,2பி), ஆச் சனா திரிஞானகமூர்த்தி (8ஏ,2பி), திவ்வியா விநாயகமூர்த்தி (4ஏ,4பி,2சி), மெடோனா சயந் தினி தேவசகாயம் (4ஏ,4பி,சி,எஸ்).

### கிளிநொச்சி ம.வி.

பசுபதிப்பிள்ளை நிருத்திகா (8ஏ,பி,சி), நாகராசா டிசெந்தினி (4ஏ,2பி,சி,எஸ்),

### முழங்காவில் ம.வி.

குகனேஸ்வரன் நிஷாந்தி (8ஏ,பி,சி), சச்சி தானந்தன் நளினி (7ஏ,பி,சி,எஸ்), உதய சூரியன் சோபனா (4ஏ,6சி), நித்தியானந்தன் நிஷாந்தன் (4ஏ,3பி,சி), நற்குணானந்தன் தர்சிகா (5ஏ,2பி,3சி),

### வட்டக்கச்சி ம.வி.

ஞானசுதன் கஜன் (8ஏ,பி,எஸ்), செல்வராசா சோபனா (4ஏ,பி,3சி,2எஸ்),

### கிளிநொச்சி மத்திய கல்லூரி

வேணுகோபன் மயூரி (6ஏ,3பி,எஸ்), ஆனந் தராஜன் அபிராஜ் (5ஏ,3பி,2சி), பாலச்சந்திரன் நிஷாந்தினி (5ஏ,3பி,சி,எஸ்), சரவணானந்தன் அனுஷா (4ஏ,3பி,2சி,எஸ்),

### திருவையாறு ம.வி.

சண்முகநாதன் சுஜீவன் (7ஏ,2பி,சி), சண் முகரட்ணம் கிரிஜாந் (6ஏ,3பி,எஸ்), பரமேஸ் சுவரன் கெஜந்தினி (4ஏ,5பி,எஸ்),

### உருத்திரபுரம் ம.வி.

மாணிக்கவாசகர் அருளினி (6ஏ,3பி,சி), மாயன கார்த்திகா (5ஏ,4பி,சி), ரமணன் விதுஷா (4ஏ, பி,3சி).

### இர்ாமநாதபுரம் மேற்கு வித்தியாலயம்

துஷாந்தி மகேந்திரன் (7ஏ,2பி,சி),

### அக்கராயன் ம.வி.

றொசிஸ்ரா செபஸ்தீன் (4ஏ,2பி,3சி,எஸ்), துவாரகா இராசையா (5ஏ,2பி,2சி,எஸ்),

### பளை மத்திய கல்லூரி

பாலசுப்பிரமணியம் உதயேந்திரன் (4ஏ, 3பி,சி,எஸ்),

### கறுக்காய்த்தீவு அ.த.க.பாடசாலை

புவனராசா மோகனராஜ் (5ஏ,3பி,சி), சதாசிவம் சிவரூபன் (4ஏ,3பி,2சி),

### கனகபுரம் ம.வி.

கதிரேசுத்தம்பி பஞ்சன் (4ஏ,4பி,சி,எஸ்), நாஜல் கோனேசன் (4ஏ,3பி,3சி), பெருமாள் சதா சிவம் (4ஏ,பி,4சி), பூநகரி மகாவித்தியாலயம் ஆறுமுகநாதன் லோபன் (8ஏ,பி), அருந்ததி துரைசிங்கம் (5ஏ,3பி,2சி),

### இராமநாதபுரம் ம.வி.

கீர்த்திகா றெஜிசனால் நிர்மலன் (4ஏ,பி, 4சி,எஸ்),

### கண்டாவளை ம.வி.

கதிர்காமு சுஜித்தா (5ஏ,4சி,எஸ்), பஞ்சநா தன் சுஜநாத் (4ஏ,பி,5சி).

(எ-305)

# பாப்பரசரின் பூதவுடலுக்கு நேற்று அமெ.ஜனாதிபதி நேரில் அஞ்சலி

## முன்னாள் ஜனாதிபதிகளும் தரிசித்தனர்

ரோம்,ஏப்.8

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷும், அவரது மனைவி லாரா புஷ்ஷும் மறைந்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் திருவுடலுக்கு நேற்று வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

இவர்களுடன் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான பில் கிளின்ரன், எச்.டபிள்யூ. புஷ், வெளிவிவகார அமைச்சர் கொண்டோலிசா ரைஸ் மற்றும் புஷ்ஷின் குடும்பத்தினர் ஆகியோர் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

இதற்காக வத்திக்கான் முழுவதிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதேவேளை, அமெரிக்க ஜனாதிபதியின் மேற்படி வத்திக்கான் வருகை, அமெரிக்காவுக்கும் வத்திக்கானுக்கும் இடையிலான உறவில் வலுசேர்ப்பதாய் அமைந்துள்ளது என்று அவதானிகளும் செய்தியாளர்களும் தெரிவித்துள்ளனர்.

ஈராக் மீது அமெரிக்காவின் படையெடுப்பை, மறைந்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் விமர்சித்தார்; எதிர்த்துக் குரலெழுப்பியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து அமெரிக்க - வத்திக்கான் உறவுகளில் விரிசல் ஏற்பட்டது. பின்னர், ஜனாதிபதி புஷ் வத்திக்கான் சென்று பாப்பரசரைச் சந்தித்து மீளவும் இரு நாட்டு உறவுகளிலும் வலுச்சேர்த்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதன் பின்னர் அமெரிக்க நிர்வாகத்தின் உயர் பிரதிநிதிகளின் மேற்படி வத்திக்கான் வருகை பெரும் எதிர்பார்க்கப்பட்ட விடயமாக இருந்தது.

இதேவேளை, பாப்பரசின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தவரும் மக்களின் தொகை அதிகரித்துள்ளது. இதனால், வத்திக்கான் சன நெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறுகிறது. பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு, ஆகாயத்தில் பாதுகாப்பு விமானங்கள் பறக்க விடப்பட்டுள்ளன. (ஐ-க)



*அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், லாரா புஷ் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான பில்கிளின்ரன், எச்.டபிள்யூ.புஷ், வெளிவிவகார அமைச்சர் கொண்டோலிசா ரைஸ் ஆகியோர் பாப்பரசருக்கு அஞ்சலி செலுத்தும் காட்சி.*

# பாப்பரசர் மரணிப்பதற்கு முன்னதாக ஆவணமொன்றை விட்டுச் சென்றார்

## இன்னமும் அது திறக்கப்படவில்லை

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் உயிர்நீப்பதற்கு முன்னதாக - தனது இறுதி விருப்பமாக - ஒரு ஆவணத்தில் கையெழுத்திட்டு அதனை மூடி, முத்திரையிட்டுவிட்டுச் சென்றுள்ளார். இதனை வத்திக்கான் உறுதிசெய்தது.

ஆனால், பாப்பரசர் உயிர்நீத்த தினத்தில் இருந்து அந்த ஆவணம் திறக்கப்படவில்லை எனத் தெரிகிறது. கர்தினால்கள் மூன்றுமுறை இரகசியமாக கூடியுள்ளனர் என்றும் அந்தக் கூட்டங்களில் இந்த ஆவணம் தொடர்பாகப் பேசப்பட்டது என்றும் -

ஆனாலும், அந்த ஆவணம் திறக்கப்படவில்லை என்றும் - வத்திக்கான் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இந்த ஆவணத்தில் 2003 ஆம் ஆண்டு இரகசியமான முறையில் நியமிக்கப்பட்ட ஒரு கர்தினாலின் பெயர் இடம்பெற்றுள்ளது எனவும் -

அவர் ஒரு சீனராக இருப்பார் எனப் பலர் நம்புகின்றனர் எனவும் -

ஆனால், அவருடைய பெயர் இரகசியமாக வைக்கப்பட்டிருப்பதற்கான காரணம் தெரியவில்லை எனவும் - தெரிவிக்கப்படுகிறது.

ஒருவேளை, அவரின் பாதுகாப்புக்கருதி இவ்விடயம் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

"அந்த ஆவணம் பற்றி எவருக்கும் இந்தக் கணத்தில் ஒன்றும் தெரியாது. பாப்பரசின் மரணத்திற்கு முன்னதாக இது பற்றிய செய்திகள் வெளியிடப்படவில்லை. பாப்பரசரினால் விட்டுச்செல்லப்பட்ட ஆவணத்தில் எழுத்துருவில் ஏதாவது ஒன்று உள்ளதா என்று எமக்குத் தெரியாது. அவ்வாறு ஏதாவது இருந்தால் அது வாசிக்கப்படும் பொழுது நாம் வெளிப்படுத்துவோம்."

இவ்வாறு வத்திக்கான் பேச்சாளர் டாக்டர் ஜோஜே குயின் நவரோவால்ஸ் தெரிவித்தார்.

இதேவேளை, பிலிப்பைன்ஸ் மணிலா கர்தினால ஜெய்மிசின் உடல் நலக் குறைவில் உள்ளதால் அவர் வத்திக்கான் செல்லவில்லை. இதனால், புதிய பாப்பரசரை தெரிவு செய்யும் 117 கர்தினால்களின் எண்ணிக்கை 116 ஆகக் குறைந்துள்ளது. (க-8)

# பாப்பரசரின் இறுதிச்சடங்கில் ஒஸாமா பின்லேடன்?



ரோம்,ஏப்.8

மறைந்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் இறுதிச் சடங்குகள் இன்று நடைபெறவுள்ளன. இதில் சர்வதேச பயங்கரவாதி என்றழைக்கப்படுபவரும் அல்கெய்டா கிளர்ச்சிவாத அமைப்பின் தலைவருமான ஒஸாமா பின்லேடன் கலந்துகொள்ளவுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானில் இருந்து அவர் விமானம் மூலம் ரோம் நகருக்குச் சென்று அங்கிருந்து வத்திகான் சென்று பாப்பரசரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வார் என்று இணையத்தளங்கள் பல செய்தி வெளியிட்டுள்ளன. மேற்படி செய்தி உண்மைக்குப் புறம்பானது என இத்தாலிய செய்தி நிறுவனங்கள் கூறியுள்ளன. (ஐ-க)

# அமெரிக்க இராணுவ ஹெலி விபத்து: ஆப்கானில் 16 படையினர் மரணம்!

லண்டன்,ஏப்.8

ஆப்கானிஸ்தான் தென்கிழக்குப் பகுதியில் அமெரிக்க இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று விபத்துக்குள்ளானதில் 16 படையினர் உயிரிழந்தனர் என்றும் -

இருவரைக் காணவில்லை என்றும் - அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆப்கான் தலைநகர் காபூலுக்கு தெற்கே வழமையான சேவையில் ஈடுபட்டிருந்த இரு ஹெலிகொப்டர்களில் சி.எச்.47 ரக ஹெலிகொப்டர் ஒன்றே நேற்றுமுன்தினம் இரவு விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளான சமயம் அப்பகுதியில் காலநிலை மிகமோசமாக இருந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது. விபத்து இடமபெற்றமைக்கான காரணம் காலநிலைச் சீர்கேடே என்றும் வேறு எவ்விதமான காரணமும் இல்லை என்றும் அதிகாரிகள் கூறினர்.

அமெரிக்கப் படையினர் ஆப்கானிஸ்தானில் நிலைகொண்ட பின்னர் இடம்பெற்றுள்ள மிக மோசமான எட்டாவது ஹெலிகொப்டர் விபத்து இதுவாகும்.

விபத்துக்குள்ளான ஹெலிகொப்டருடன் சென்ற மற்றைய ஹெலிகொப்டர் பாதுகாப்பாக பக்ராம் விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளது என விமான அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விபத்தின்போது காணாமற்போன இருவரையும் உயிருடன் மீட்கும் நம்பிக்கை தம்மிடம் இல்லை. இருள் மற்றும் மோசமான காலநிலை காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றது என்று இராணுவப் பேச்சாளர் சின்டி முவர் தெரிவித்தார். (க-8)






# புதிய பாப்பரசர் தெரிவு இம்மாதம் 18 ஆம் திகதி

வத்திக்கான்,ஏப்.8

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் மறைவையடுத்து, புதிய பாபபரசரைத் தெரிவுசெய்யும் வத்திக்கான் கர்தினால்கள் கூட்டம் இம்மாதம் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என வத்திக்கான் அறிவித்துள்ளது.

117 கர்தினால்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு அடுத்த பாப்பரசரைத் தெரிவுசெய்வர்.

சிஸ்டின் தேவாலயத்தில் இந்தக் கூட்டம் நடைபெறும். இரகசியமாக நடைபெறும் இந்தக் கூட்டத்தில் வெளியார் எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

உலகில் 183 கர்தினால்கள் உள்ளனர். அவர்களில் 80 வயதுக்குக் குறைவானவர்கள் மட்டுமே புதிய பாப்பரசைத் தெரிவு செய்யும் கூட்டத்தில் கலந்துகொள்ளமுடியும். அதன்படி 80 வயதுக்குக் குறைவான கர்தினால்கள் இப்போது உலகில் 117 பேரே உள்ளனர்.

புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்வதில் இந்த 117 கர்தினால்களும் ஒருமித்த முடிவை எடுத்த பின்னரே அவர்கள் வெளியே வருவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய பாப்பரசரைத் தெரிவுசெய்யும் வாக்கெடுப்பு நடவடிக்கைகள் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளன. (க-8)

# கிளர்ச்சிவாதிகளின் திடீர்த் தாக்குதலில் 17 கொலம்பியப் படையினர் உயிரிழப்பு!

லண்டன்,ஏப்.8

கொலம்பியாவின் எண்ணெய் வளம்மிக்க அரா்வுகா மாநிலத்தில் படையினர் மீது மார்க்சிய கிளர்ச்சிவாதிகள் மறைந்திருந்து நடத்திய திடீர் தாக்குதலில் 17 கொலம்பியப்படையினர் உயிரிழந்தனர் என இராணுவ உயரதிகாரிகள் தெரிவித்தனர்.

வெனிசுலா நாட்டின் எல்லையில் போதைப்பொருள் கடத்தல், ஆயுதக் கடத்தல் என்பவற்றில் ஈடுபட்டுள்ள கிளர்ச்சிவாதிகளே மேற்படி திடீர் தாக்குதலை நேற்று நடத்தினர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கொலம்பிய தலைநகர் பொகோடாவுக்கு வடகிழக்கே சும... 0 கிலோமீற்றர் தொலைவில் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதலின்போது இராணுவ உயரதிகாரி ஒருவரும், மேலும் 3 அதிகாரிகளும் உயிரிழந்துள்ளனர் எனவும் -

பலத்த காயங்களுக்குட்பட்டு உயிருடனிருந்த சிப்பாய்களின் தலைகளில் மீண்டும் துப்பாக்கியால் சுட்டு கிளர்ச்சிவாதிகள் கொன்றனர் எனவும் - இராணுவப் பேச்சாளர் ஜென் ரீனால்டோ தெரிவித்தார்.

மார்க்சிய கிளர்ச்சிவாதிகள் தொடர்ந்து நடத்திவரும் இவ்வாறான தாக்குதல்கள் கொலம்பிய அரசுக்குப் பெரும் அச்சுறுத்தலாகவே இருக்கின்றன என்று அவர் மேலும் கூறினார். (க-8)

# சீனா மீதான ஆயுதத்தடையை நீக்கினால் கடும் நடவடிக்கை

## ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அமெரிக்கா எச்சரிக்கை

நியூயோர்க்,ஏப்.8

சீனாவுக்கு எதிரான ஆயுத விற்பனைத் தடையை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் நீக்குமானால், அதற்குப் பதிலடி கொடுக்கநேரிடும் என அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

பிரான்ஸ் - அட்லாண்டிக் உறவை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மிகவும் சாதாரணமாகக் கணக்கிடுகின்றன. இதன் மூலம் கடுமையான விளைவை அவை சந்திக்க நேரிடும் எனவும் அமெரிக்கா மேலும் எச்சரித்துள்ளது.

உலக அரங்கில்

இத்தகவலை அமெரிக்க வெளிவிவகார இணையமைச்சர் ரொபட் ஜோலிக் தெரிவித்தார் என பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உலகின் வலுவான அமைப்பாக இருக்கும் ஐரோப்பிய ஒன்றியம் தனது பொறுப்பை உணர்ந்துகொள்ள வேண்டும். சீனாவுக்கு எதிரான ஆயுதத்தடையை அவ்வமைப்பு நீக்குமானால், பிரான்ஸ் - அட்லாண்டிக் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாட்டுக்கு எதிராக அது அமைந்துவிடும் என்றும் அவர் கூறினார் என மேற்படி செய்திகள் மேலும் தெரிவித்தன.

1989 ஆம் ஆண்டு நடைபெற்ற தியானென்மன் சதுக்கப் படுகொலைகளைத் தொடர்ந்து, சீனாவுக்கு ஆயுதங்களை விற்பனை செய்ய ஐரோப்பிய ஒன்றிய நர்டுகள் தடைவிதித்தன. தற்போது ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகள் அத்தடையை நீக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளன என்று கூறப்படுகிறது. (க-8)

# கிளர்ச்சிவாதத் தலைவர் சவூதி அரேபியாவில் பலி!

ரியாத்,ஏப்.8

சவூதி அரேபியாவில் தேடப்பட்டு வந்த இஸ்லாமிய கிளர்ச்சிவாதத் தலைவர் ஒருவரை அந்நாட்டுப் பொலீஸார் சுட்டுக்கொலை செய்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் ரியாத்துக்கு தெற்குப் பகுதியிலேயே மேற்படி கிளர்ச்சிவாதியைச் சுட்டுக் கொலை செய்தனர் எனப் பொலீஸ் அதிகாரிகள் கூறினர்.

அப்துல் ரஹ்மான் அல்-யஸ்ஜி என்பவரே இவ்வாறு சுட்டுக்கொலை செய்யப்பட்டவராவார். இவர் வீடொன்றில் மறைந்திருக்கிறார் என்று தகவல் கிடைத்தவுடன் பொலீஸார் அப்பகுதிக்குச சென்றனர். அப்போது ரஹ்மான் பொலீஸாரை நோக்கிச் சுட்டுள்ளார். இதனையடுத்து, பதிலுக்குப் பொலீஸார் சுட்டதில் அவர் உயிரிழந்தார்.

சவூதி அரேபியப் பொலீஸார் தேடிய 26 கிளர்ச்சிவாதியில் இவர் முக்கியமானவர் என்றும்-

இதுவரை 24 கிளர்ச்சிவாதத் தலைவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என்றும் -

இன்னமும் இருவரே உயிருடன் இருக்கின்றனர் என்றும் - உள்துறை அமைச்சு தெரிவித்தது. (க-8)

# அமைதிப் பேச்சு மீளத் தொடங்குவதை எதிர்ப்பவர்கள் மடையர்கள்; இவர்களின் தலையீடே எனக்குப் பெரியதடை

## சந்திரிகாவின் காட்டமான பேச்சு

"பெருங்குழப்பத்திலிருந்து நாட்டை மீட்பதற்கான கடைசிச் சந்தர்ப்பம் இது. எனவே, சமாதானத்தை எட்டுவதற்காகக் கட்சி வேறுபாடுகளைக் களைந்துவிட்டு ஐக்கியமாகச் செயற்பட முன்வருமாறு சகல கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

"அமைதிப் பேச்சுக்களை மீளத் தொடங்குவதை எதிர்ப்பவர்கள் மடையர்கள். அரசியலில் இத்தகைய முட்டாள்களின் தலையீடே நான் எதிர்நோக்கும் பெரிய தடையாகும்."

- இப்படிக் கூறுகின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நேற்றுமுன்தினம் செவனகலை பிரதேச செயலகக் கட்டடம், குடிதண்ணீர் விநியோகத் திட்டம் மற்றும் சமுர்த்தி கிராமிய மேம்பாட்டுத்திட்டம் என்பனவற்றை வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்துவைத்தபின் அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே இப்படிக் காட்டமாகக் கூறினார் ஜனாதிபதி.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:

நாடு இன்று பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

என்னுடைய அரசு பொறுப்பேற்ற சமயத்தில் உலக சந்தையில் எரிபொருள்களின் விலை முன்னெப்போதும் இல்லாத வகையில் அதிகரித்தது. அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் உயர்வதையும் தவிர்க்க முடியாதநிலை ஏற்பட்டது. இது நாம் திட்டமிட்டு செய்தவை அல்ல.

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல் சமாதானப் பேச்சுகளும் தடைப்பட்டு விட்டன. இது ஒரு தேசியப் பிரச்சினை. நாட்டை அபிவிருத்தி செய்யவும், சமாதானப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிக்கவும், அரசியல் கட்சி பேதங்களை மறந்து சகல கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படவும், அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆதரவளிக்கவும் முன்வரவேண்டும்.

நாட்டில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமானால், முதலில் சமாதானம் ஏற்படவேண்டும். மீண்டும் ஒரு யுத்தம் வெடிக்குமேயானால், நமது அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்துமே அர்த்தமற்றவையாகி விடும். வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கும், இனப் பிரச்சினைக்கும் தீர்வுகாணவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

சமாதான முன்னெடுப்புகளுக்கும், சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் நாம் எதிரானவர்கள் அல்லர் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், சமாதான நடவடிக்கைகளில் நோர்வே தலையிடக் கூடாது. நோர்வேயை முற்றாக அப்புறப்படுத்தி விடவேண்டும் என்று அவர்கள் நிபந்தனை விதிக்கின்றனர்.

நோர்வேயை ஓரம்கட்டிவிட்டு நடைபெறும் எந்தவொரு பேச்சுக்களிலும் புலிகள் கலந்து கொள்ளமாட்டார்கள். அப்படி ஒருநிலை ஏற்பட்டால் புலிகள் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகிக்கொள்வார்கள். இதனால், மீண்டும் ஒரு யுத்தம் வெடிக்கும். குண்டுகள் வெடிக்க ஆரமபித்துவிட்டால் நாட்டை அபிவிருத்தி செயவது என்பது நினைத்துப் பார்க்க முடியாத காரியமாகிவிடும்.

இன்றைய இக்கட்டான நிலையிலும் நாம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டுள்ளோம். ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் கைவிடப்படப் பல்வேறு அபிவிருத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கியுள்ளோம். 42 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கியுள்ளோம்.

முப்படைகளைச் சேர்ந்தவர்களுக்கும், பொலீஸாருக்கும் சம்பள உயர்வுகளை வழங்கியுள்ளோம்

ஆனால், ஐக்கிய தேசிய முன்னணியினர் நமது அரசுக்கு எதிரான பிரசாரங்களைத் தீவிரப்படுத்தி வருகின்றனர். அவர்கள் கூறுவதில் எந்த உண்மையும் இல்லை.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணமாகக் கிடைத்த நிதியில் மோசடி இடம்பெற்றுள்ளதாகக் குறைகூறிக்கொண்டு திரிகின்றனர். அவர்களால் இத்தகைய ஏதாவது ஒரு விடயத்தை ஆதாரங்களுடன் உறுதிப்படுத்த முடியுமா? பொறாமையால் இப்படிச் செய்கிறார்கள் அவர்கள்.

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டபின் புனர்நிர்மாண, மீள்கட்டமைப்புப் பணிகளுக்காக 15 ஆயிரம் கோடி ரூபா உதவியை எம்மால் திரட்டக்கூடியதாக இருந்தது. ஆனால், இப்பணம் எங்களுடைய 'பொக்கட்டுக்கு' நேரடியாக வரவில்லை.

இது தொடர்பான திட்டங்களுக்கான நிதி உதவியை உதவி வழங்கும் நாடுகளே நேரடியாகக் கையாளும். ஆனால், திட்டச் செயற்பாட்டை அரசு கண்காணிக்கும். அது தான் உண்மைநிலை.

ஆனால், ஒரு சில சக்திகள் தமதுவாக்கு வங்கியைப் பலப்படுத்திக் கொள்வதற்காகவே விசமத்தனமான பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளன.

ஐக்கிய தேசிய முன்னணி அரசும், புலிகளும் ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொள்ள முடியும் என்றால் நாட்டின் நன்மைக்காக ஸ்ரீ.ல.சு. கட்சியும், ஜே.வி.பியும் இணைந்து செயற்படுவதில் என்ன தவறு இருக்க முடியும்? - என்றார் ஜனாதிபதி.

இந்த வைபவத்தில் அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, ஏ.எச்.எம்.பௌஸி, பவித்ராதேவி வன்னிஆராய்ச்சி, சுமேதா ஜயசேன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## ஜி.சீ.ஈ. உயர்தரம்

# தனிப்பட்ட பரீட்சார்த்திகளை பதிவுசெய்யுமாறு கோரிக்கை

அச்சுவேலி,ஏப்.8

2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ.உயர்தர பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் தாம் வதியும் பிரதேச மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பதிவுசெய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவித்தலை கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் வெளியிட்டுள்ளார்.

2006 ஆம் ஆண்டில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகளுக்கு பாடங்கள் ஒவ்வொன்றுக்கும் 100 ரூபாவும் பதிவுக் கட்டணமாக 100 ரூபாவும் செயற்றிட்டக்கட்டணமாக 100 ரூபாவும் மேற்பார்வைக் கட்டணமாக 75 ரூபாவும் அறவிடப்படும். இதற்கான காசுக்கட்டளையை மாகாண கல்விப் பணிப்பாளரின் பெயருக்கு அனுப்பிப் பதிவுசெய்ய வேண்டும்.

பரீட்சார்த்திகள் விரும்பி விண்ணப்பிக்கும் பாடசாலையுடன் பரீட்சார்த்திகளை இணைத்து வாழ்க்கைத் தகைமை விருத்திச் செயற்றிட்டம் மற்றும் கணிப்பீட்டு வேலைத் திட்டங்களை அப்பாடசாலையின் ஊடாகப் பூர்த்திசெய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

மேற்படி வேலைத்திட்டங்களை நிறைவு செய்யும் பரீட்சார்த்திகள் 2006 ஆம் ஆண்டு பரீட்சைக்கான விண்ணப்பங்களை, தாம் செயற்றிட்டங்களை நிறைவுசெய்த பாடசாலை அதிபரின் சிபாரிசுடன் அனுப்பி வைக்கமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (8-11-202)

## நட்சத்திரப் பாடகர் போட்டி அரியாலையில்

யாழ்ப்பாணம்,ஏப்.8

அரியாலை 86 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை ஒட்டிய சிறந்த நட்சத்திரப் பாடகர் போட்டி நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றது.

இப்போட்டிக்கு விண்ணப்பித்த அனைவரையும் இப்போட்டியில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-190)

## உடுபுடைவைகள் அன்பளிப்பு

தென்மராட்சி,ஏப்.8

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கவென பிரிட்டனில் சேகரிக்கப்பட்ட உடுபுடைவைகள் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினூடாக வழங்கப்படவுள்ளன. அத்துடன், சாவகச்சேரி மருத்துமனைக்கு ஒரு தொகுதி மருந்து வகைகளும் வழங்கப்படவுள்ளன.

மீசாலை மேற்கைச் சேர்ந்த ஜெயசன் ஸ்ரீரஞ்சினி என்பவர் இப்பொருள்களை பிரிட்டனில் இருந்து எடுத்து வந்துள்ளார்.

இப் பொருள்கள் இன்று வெள்ளிக்கிழமை சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவரிடமும், சாவகச்சேரி ஆஸ்பத்திரி பொறுப்பதிகாரியிடமும் கையளிக்கப்படவுள்ளதாக லயன் சி.சற்குணநாதன் தெரிவித்தார். (ஒ-117)


**D.A.M.வைத்தியசங்க அவசரப் பொதுக் கூட்டம்**

D.A.M.பட்டதாரிகள் சங்க அவசரப் பொதுக்கூட்டம் 10.04.2005 ஞாயிறு நண்பகல் 2.00 மணிக்கு லங்கா சித்த ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

சங்க அங்கத்தவர்கள் அனைவரும் மருந்துகள் பெறும் பொருட்டு ஆலோசனை பெறுவதற்காகத் தவறாது சமுகம் தரவும்.

Dr.க.தங்கத்தாமரைச்செல்வன் செயலாளர். Dr.க.நவரத்தினம் தலைவர்.

(43650)(42-14)



**ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்**




இந்தியாவிலிருந்து வந்துள்ள

**ராமகிருஸ்ண சாஸ்திரிகள்**

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளி நாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள் ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது

அறை எண் 5, பிள்ளையார் இன்,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

Room No.5, Pillaiyar Inn
31, Manipay Road, Jaffna.
Phone: 021 222 2839 Mobile: 0776 923623

(C/42170) (21-14-42)



சித்திர விநாயகர் துணை

வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுதப் பெருமானின் திருவருட் செல்வர்

**மார்க்கண்டு கந்தையா**

கோப்பாய் மத்தி அவர்களின் சிவபதப்பேறு குறித்த 31ஆம் நாள் நினைவஞ்சலிப் பிரார்த்தனை

மலர்வு 1929 - 11 - 12



நிறைவு 2005 - 03 - 09

**அமரர் மார்க்கண்டு கந்தையா**

*இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்*
*பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே*
*குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா*
*கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே*

ஸ்ரீ சித்திரவேலாயுதப் பெருமானது ஆழ்ந்த பக்தராகவும், ஆலயத்தில் திருமுறைகளை இசை நயத்தோடு நீண்டகாலம் ஓதி அடியவர் பெருமக்களை தெய்வீக இன்பத்திற்குள் ஆழ்த்தி 'தேவாரம் கந்தையா' என அனைவராலும் அழைக்கப்பட்டவர். கந்தபுராணப் படிப்பையும் முறைப்படி பாடி தெய்வீக உணர்வை வளர்த்தவர். ஆலய தரும பரிபாலன சபை, ஞான பண்டித சைவ விருத்திச் சங்கம், சைவ நற்சிந்தனைக் கழகம் ஆகியவற்றின் உறுப்பினராகவும் அமர்ந்து அருந்தொண்டுகளாற்றினார். அவரது புனித ஆன்மா சித்திர வேலவர் பாதக்கமலங்களில் சரண்புகுந்து பேரானந்த ஒளிபெற வேண் டியும், அவரது ஆன்ம ஒளி குடும்பத்தினர்க்கும், உறவினர்க்கும் திருவருள் வழிகாட்ட வேண்டும் எனவும் வேலவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலய தரும பரிபாலன சபை,
ஞானபண்டித சைவ விருத்திச் சங்கம்,
வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில் சைவ நற்சிந்தனைக்கழகம்,
கோப்பாய்.

(43948)(42-14)



**இலவசம்**

**இளைஞர்களுக்கான பயிற்சி**

150. நாடுகளில் பயிற்சி நடத்தும்

(வாழும் கலைப்பயிற்சி அறநிலையம் இந்துகலாசார அமைச்சின் அனுசரணையுடன் அளிக்கிறது)

இதில் கிடைக்கும் பயன்கள்:

- ★ மன இறுக்கம் மன உளைச்சல் நீக்கி, ஆத்ம சக்தியை உணர்ந்து ஆன்மீகவழியில் ஊக்கம்பொண்டு செவ்வனே பணிசெய்ய
- ★ நினைவாற்றல் பெருக
- ★ உடல் ஆரோக்கியமும் புத்துணர்ச்சியும் பெற
- ★ நேர்மை, வாய்மை, மனிதநேயத்துடன் மகிழ்ச்சியான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள

18 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட இருபாலாருக்கும் 16.04.2005 ஆம் திகதி முதல் 22.04.2005 ஆம் திகதிவரை 7 நாள்களுக்கு காலை 7.30 மணிமுதல் மாலை 7.00 மணிவரை. இலவச காலை, மதிய, மாலை உணவுடன் சாவகச்சேரி, யா.நகர், சுழிபுரம், நெல்லியடி ஆகிய நான்கு முகாம்களில் பயிற்சி நடக்கும். குறைந்த இடமே உள்ளதால் இலவச அனுமதிச்சீட்டு பெற்றுக்கொள்ள உடன் தொடர்புகொள்ள:

**பதிவு இடம் நேரம்**

| | |
|---|---|
| யா/ டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி<br>நெல்லியடி மத்திய ம. வி, நெல்லியடி.<br>தினமும் காலை 9.00 முதல் மாலை 1.00 வரை | பாடசாலை அபிவிருத்திச் சங்கம்<br>யா/வேலாயுதம் ம.வி.,<br>பருத்தித்துறை.<br>காலை 9.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை. திங்கள் முதல் வெள்ளி வரை. |
| அன்னதான மண்டபம் பராளாய் முருகன் கோயில் சுழிபுரம். 8. 4. 05 முதல் 11. 4. 05 வரை காலை 10.00 மணி முதல் 5.00 மணி வரை | |

குறிப்பு: ஒவ்வொரு முகாமிலிருந்தும் திறமைமிக்க பத்து நபர்கள் மேற்பயிற்சிக்காக வெளிநாடு அனுப்பப்படுவர். பரீட்சை எதுவும் இல்லை. காலை, மதிய, மாலை உணவு இலவசம்.



**திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு**



★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமானசெலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777-903090, 077-3086939, 0777-246117, 077-6018467.

தொடர்பு: [illegible],
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22,சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(26-14-42) (43613)



வங்கியில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான வங்கியியல் கற்கைநெறிகள்

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**ACBF, CBF**

அடிப்படைத் தகைமைகள்

G.C.E.(A/L) 2 passes and G.C.E.(O/L) 6 PASSES WITH 5 credits including Maths/Commerce & Accounts, and Language (Tamil/English)

விரிவுரைகள் ஆரம்பம்: 09.04.2005 (8.30a.m)

INQUIRIES/REGISTRATION

**DIRECTOR**
**JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT.**
**464, Hospital Road, Jaffna.**

(சி.42772)(42-14)



சகல பொதுப்பரீட்சைகளுக்குமுரிய

**IQ,gk புதிய நூல்கள்**

*கலாநிதி க.குணராசா, பிரியா பாலேந்திரன், செந்தில்வடிவேல் ஆகியோர் ஆக்கியவை*



(1). உங்கள் பொது உளச்சார்பு -IQ,
(2). உங்கள் பொதுஅறிவு -gk
(3). பொது நுண்மதி (நுண்ணறிவியல்)-IQ & gk
(4). பொது உளச்சார்பு -IQ
(5). பொதுஅறிவு - gk
(6). அறிவுத்திற அளவெண் - IQ
(7). கிரகித்தல்
(8). நுண்ணறிவியல் (சஞ்சிகைத்தொகுப்பு)

பிரபல புத்தக சாலைகளில் கிடைக்கும்

கமலம் பதிப்பகம், 75/10 A,
பிறவுண் வீதி, யாழ்ப்பபாணம்

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# தவறிப் போகுமா கடைசிச் சந்தர்ப்பம்?

இந்த நாட்டின் இரண்டு பெரிய இனத்தவர்களான சிங்களவர்களும் தமிழர்களும் தமக்கு இடையிலான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னர் பெரும்பான்மை இனத்தவரான சிங்களவர்கள் தமக்குள்ளான பிரச்சினையைத் தீர்த்து இவ்விடயத்தில் ஒரு முடிவுக்கு வருவது அவசியமானது. இப்போது நடைபெறும் சம்பவங்கள், இழுபறிகளைப் பார்க்கும்போது அது மிக அவசியம் என்று தோன்றுகிறது.

அதுவும், சிங்களவர்கள் தரப்பிலும் தென்னிலங்கை அரசுத் தரப்பிலும் இவ்விடயத்தில் தீர்மானம் எடுக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் உள்ள அரசுக் கூட்டமைப்பு ஒரு தீர்க்கமான முடிவை எடுத்தாலேயொழிய இவ்விடயத்தில் இனி முன்னேற்றம் இல்லை என்பது தெளிவாகிவிட்டது.

அரசுக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் இனப்பிரச்சினை விவகாரத்தில் தமக்குள் முறுகிக்கொண்டு, ஒரு முடிவுக்கும் வராமல், நாளொரு பேச்சும், பொழுதொரு ஏச்சுமாகத் தங்களுக்குள் மோதிக்கொண்டு காலத்தை இழுத்தடித்துக் கொண்டிருப்பதைத் தவிர, பயன்தரும் விதத்தில் முன்நகர்வு எதுவும் இடம்பெறவில்லை.

அந்த நாளொரு பேச்சு, பொழுதொரு ஏச்சு வரிசையில் இப்போது முறை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு வந்திருக்கின்றது.

கடந்த செவ்வாயன்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க இந்த விடயம் தொடர்பாகத் தெரிவித்த கருத்துகளுக்கு அடுத்தநாள் - நேற்றுமுன்தினம் - 'மறுத்தான்' கொடுத்திருக்கின்றார் அரசுத் தலைவி ஜனாதிபதி சந்திரிகா.

"*அமைதிப் பேச்சுக்களைத் தடுப்பவர்கள் முட்டாள்கள். அமைதி முயற்சிகளை முன்னெடுக்கும் விடயத்தில் இத்தகைய மடையர்களின் தலையீடே நான் எதிர்நோக்கும் மிகப்பெரிய தடையாகும்.*

"*அமைதிப் பேச்சை மீண்டும் தொடங்குவதற்குத் தாங்கள் எதிரானவர்கள் அல்லர் என்று கூறும் சிலர், அதேசமயம் நோர்வே இவ்விடயத்திலிருந்து வெளியேற வேண்டும் என்றும் கூறுகின்றனர். அப்படி நடந்தால் யுத்தநிறுத்த உடன்பாட்டிலிருந்து புலிகள் வெளியேறி விடுவார்கள். அதன் விளைவாக மீண்டும் போரல்லவா வெடிக்கும்?*" - என்று கேட்கின்றார் நாட்டின் தலைவி.

யாரையும் பெயர் குறிப்பிடாமல் இப்படி ஜனாதிபதி கூறினாலும், 'அமைதிப் பேச்சுக்களுக்குத் தடைபோடும் முட்டாள்கள்' என்றும் 'நோர்வேயை வெளியேற வேண்டும் எனக் கோருபவர்கள்' என்றும் அவர் யாரைச் சுட்டுகின்றார் என்பது வெள்ளிடைமலை; உள்ளங்கை நெல்லிக்கனி.

அதேபோன்று 'சமஷ்டித் தீர்வுக்கு நாட்டில் எண்பது வீதமான மக்கள் ஆதரவு என்று வேலையில்லாத சிலர் பொய் கூறிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கான சர்வஜன வாக்களிப்பு ஒன்றை நடத்திப் பார்க்கட்டும். அத்திட்டத்துக்கு எண்பது வீதமானோர் எதிர்ப்பு என்பதை நிரூபித்துக் காட்டுகிறோம்' என்று மூன்று தினங்களுக்கு முன் அநுராதபுரத்தில் வைத்து செவ்வாயன்று முழங்கினார் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க.

'பொய் கூறுகின்றவர், வேலை இல்லாதவரின் வெட்டிப் பேச்சு' என்றெல்லாம் கூட்டுக் கட்சியின் தலைவர் யாரை விமர்ச்சிக்கின்றார் என்பதும் இலங்கை மக்களுக்குப் புரியாததல்ல.

இப்படி அரசுத் தரப்பின் பங்காளிக் கட்சிகளின் இழுபறிப் பேச்சுடன் காலம் கடத்தப் படுகின்றதே தவிர, அமைதி முயற்சிகளில் ஆக்கபூர்வமான முன்நகர்வு ஏதுமில்லை.

இரண்டு தசாப்தகால யுத்தக் கொடூரங்களில் பாதிப்புற்ற தமிழ்மக்களுக்கு அவசர - அவசிய - மனிதாபிமானத் தேவைகளை நிறைவு செய்வதற்கான இடைக்கால நிர்வாகம் கானல் நீராகிவிட்டது. ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற வடக்கு - கிழக்கு மக்களின் அவலத்துக்கு விடிவு தர வேண்டிய பொதுக்கட்டமைப்பு ஏற்பாடும் பேரினவாதிகளின் கடும் நிலைப்பாட்டால் பகற்கனவாகிக்கொண்டிருக்கின்றது.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான முயற்சியிலும் முன்னேற்றமில்லை; உடனடித்தீர்வு காண வேண்டிய அவசர - அவசிய - விடயங்களிலும் அக்கறை இல்லை.

தங்களுக்குள் வாய்த் தர்க்கமும், கருத்து மோதல்களும் நடத்திக்கொண்டு, அதன் மூலம் காலத்தை இழுத்தடித்து நிலைமையைச் சமாளித்து அரசைக் கொண்டு நடத்தலாம் என்று அரசுக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகள் கருதுகின்றன போலும்.

ஜனாதிபதி தமது செவனகல உரையில் கூறியது போன்று இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணக் கடைசிச் சந்தர்ப்பம் இது.

அரசுக் கூட்டமைப்புக் கட்சிகளின் கருத்து முரண்பாட்டு இழுபறியால் இச்சந்தர்ப்பம் சரியாகப் பயன்படுத்தப்பட முடியாமல் போனால், அதன் துன்பியல் விளைவை - ஐக்கிய இலங்கை என்பது கனவாகும் யதார்த்தத்தை - சிங்களம் எதிர்கொள்ள வேண்டிவரும்.

அதை எதிர்கொள்ளத் தயார் என்றால் சிங்களம் தனது இந்தப் போக்கில் தொடரட்டும். இப்போதைய வினையின் விளைவை அறுவடை செய்ய நேரிடும்.



சர்வதேச மக்களுக்கான மக்கள் (PIPI) என்ற நிறுவனம் நாடுகளுக்கிடையில் நல்லுறவை வளர்க்கும் நோக்கில் சுவர் ஓவியக் கண்காட்சி ஒன்றை நடத்துகின்றது. இக்கண்காட்சியில் காட்சிப்படுத்துவதற்காக ஐ.ஏ.ரி. சித்திரப்பயிற்சி நிறுவனமும் தமது மாணவர்களின் படைப்புக்களையும் அனுப்பி வைத்துள்ளது.

இந்த ஓவியங்களைச் சர்வதேச மக்களுக்கான மக்கள் நிறுவனத்திடம் கையளிக்கும் நிகழ்வில் நிறுவனத்தின் செயற்றிட்டத் தலைவர் மேரி ஜீன் ஜசின்கூவர், சித்திரப்பயிற்சி நிறுவன இணைப்பாளர் து.துசியந்தனை வரவேற்பதை முதலாவது படத்திலும்–மாணவர்களின் ஓவியங்கள் ஒப்படைக்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (ஐ-202)

# பெற்றோல், டீசல் பாவனை குடாநாட்டில் அதிகரிக்கின்றது

யாழ்ப்பாணம்,ஏப்.8

குடாநாட்டில் மாதம் ஒன்றுக்கு பத்து லட்சம் லீற்றர் பெற்றோல் விற்பனையாகின்றது.

இத்தகவலைத் தெரிவித்தார் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் சமாதானச் சூழ்நிலை ஏற்பட்ட பின்னர் எரிபொருள்களின் பாவனை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

குறிப்பாக, எரிபொருள்களில் டீஸலே அதிகளவில் விற்பனையாகின்றது. டீஸல் மாதம் ஒன்றுக்கு 40 லட்சம் லீற்றர் விற்பனை செய்யப்படுகின்றது.

இதேபோன்று, மண்ணெண்ணெய் மாதம் ஒன்றுக்கு 13 லட்சம் லீற்றர் விற்பனையாகின்றது.

எனினும், தற்போது மண்ணெண்ணெயின் விற்பனை குறைந்து வருகிறது.

எரிபொருள் விற்பனை தொடர்பாக ஆகப்பிந்தி எடுத்த பதிவுகள் இவை என்றார் அவர். (ஐ-7)

# வடக்கு–கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைப்பு அறிவித்தல் மீண்டும் வரும்?

கொழும்பு,ஏப்.8

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை மீண்டும் ஒத்திவைப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா விரைவில் வெளியிடுவாரென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நியமனப்பத்திரங்கள் கோரப்பட்டு, நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் சிங்களப்பகுதி உள்ளூராட்சி சபைகளுக்குத் தேர்தல்கள் நடைபெற்றன. ஆனால் வடக்கு-கிழக்கில் ஏனைய உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் ஆறுமாதங்களுக்கு ஒரு தடவை வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒத்திவைக்கப்பட்டு வருகின்றன.

மூன்று வருடங்களுக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்ட நியமனப் பத்திரங்கள் இன்னும் செல்லுபடியானவையாக இருக்கத்தக்கதாக கடந்த ஒக்ரோபர் 23 ஆம் திகதி மேலும் ஆறு மாதங்களுக்கு அத் தேர்தலை ஒத்திவைக்கும் முடிவு அறிவிக்கப்பட்டது.

அந்த ஒத்திவைப்பு காலாவதியாகி எதிர்வரும் 23ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட வேண்டிய நிலைமை இருக்கையில் வடக்கு - கிழக்கு மாகாண அரச அதிபர்களுடன் தேர்தர்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க கடந்தவார இறுதியில் பேச்சு நடத்தியுள்ளார்.

இராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் திணைக்களத்தில் நடைபெற்ற இந்தப் பேச்சுக்களின்போது மேற்படி உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தக்கூடிய சூழ்நிலை இருக்கின்றதா என்பது பற்றி தேர்தல்கள் ஆணையாளர் அரச அதிபரிடம் விரிவாகக் கேட்டறிந்துள்ளார்.

தற்போது வடக்கு - கிழக்கிலுள்ள சூழ்நிலையின்படி தேர்தலொன்றை நடத்த முடியாத காரணத்தினால் மீண்டும் அதனை ஒத்திவைக்க அங்கு தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (எ-க)

# சனசமூக நிலையத்துக்கு புதிய மாடிக்கட்டடம்

வலி.தென்மேற்கு,ஏப்.8

வடலியடைப்பு சங்கானை மேற்கு சனசமூக நிலையத்திற்குப் புதிதாக நிறுவப்பட்டுவரும் மாடிக் கட்டடத்தின் கீழ் மாடிக் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வசித்து வரும் நிலைய உறுப்பினர்களும், நலன் விரும்பிகளும், கிராம மக்களும் வழங்கிய நிதி உதவியைக் கொண்டு இம்மாடிக் கட்டட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

மாடிக்கட்டட வேலையைத் தொடர்வதற்கு நிதி மேலும் தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இம்மாடிக் கட்டடத்தில் வாசிகசாலை, நூல்நிலையம், முன்பள்ளி என்பன இடம்பெறவுள்ளன. (ஐ-135)

# புத்தாண்டில் புதுவாழ்வு படைப்பது குறித்த பயிற்சி இளைஞர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.8

வாழும் கலைப்பயிற்சி அறநிலையம் இந்துகலாசார அமைச்சின் அனுசரணையுடன் புத்தாண்டில் புதியதோர் வாழ்வு படைப்போம் என்னும் தொனிப் பொருளில் இளைஞர்களுக்கான பயிற்சிகளை வழங்கவுள்ளது.

18 வயது முதல் 30 வயதுக்குட்பட்ட இரு[illegible]ாருக்கும் எதிர்வரும் 16 ஆம் திகதியிலிருந்து 22 ஆம் திகதிவரை 7 நாள்களுக்கு காலை 7.30 மணியிலிருந்து மாலை 7 மணிவரை பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன.

இளைஞர்கள் மன இறுக்கத்திலிருந்தும் உளைச்சல்களில் இருந்தும் பூரணமாக விடுபட, சுயநம்பிக்கையும், சுயமேம்பாடும் அடைய, உடல்வருத்தம், நீங்கவும் சோர்வு நீங்கி உரம்பெறவும் மன ஒருமைப்பாடு பெறவும், இந்தப் பயிற்சிகள் உதவும் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மத்திய கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, சுழிபுரம் பறாளை முருகன் கோயில் ஆகிய பகுதிகளில் நான்கு நிலையங்களில் நடைபெறும் மேற்படி பயிற்சியில் பங்குபற்றுபவர்களுக்கு உணவு வசதிகள் உட்பட அனைத்தும் இலவசமாக வழங்கப்படும்.

பயிற்சியில் பங்குகொள்ள விரும்பும் இளைஞர்கள் நல்லூர் நாவலர் மணி மண்டபத்திலும், பருத்தித்துறை, வேலணை மகாவித்தியாலயத்திலும் தொடர்புகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஐ-13)

# காங்கேசன் கடற்பகுதியில் நாய்களை அழிக்க அனுமதி

வலி.தெற்கு,ஏப்.8

வலிகாமம் தெற்கு, வலிகாமம் வடக்கு பிரதேச சங்கங்களில் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து காங்கேசன்துறைக் கடற்பகுதியில் அழிப்பதற்கு படைத்தரப்பினரின் அனுமதி கிடைத்திருப்பதாக தெல்லிப்பழை பொதுச்சுகாதார பரிசோதகர் என். சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை மாவட்டச் சுகாதார அதிகாரி பணிமனையினரின் அனுசரணையுடன் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் இதற்கான அனுமதியைப் பெற்றுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

வலிகாமம் தெற்கு, வலிகாமம் வடக்கு போன்ற இடங்களில் கட்டாக்காலி நாய்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அவற்றினால் கடியுண்டு பலர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதனையடுத்து நாய்களைக் கொன்றொழிப்பதற்கான நடவடிக்கைகளைப் பிரதேச சபைகள் அவ்வப்போது சிறிய அளவில் மேற்கொண்டு வந்தன. கொன்றொழிக்கும் நாய்களை புதைப்பதற்கு உரிய இடங்கள் இப்பகுதிகளில் காணப்படாமையால் அவற்றை காங்கேசன்துறை கடற்பரப்பில் கொன்றொழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது பிடிக்கப்படும் நாய்களை கடற்பரப்புக்கு கொண்டு சென்று அழிப்பதற்கு இராணுவ படைத்தரப்பின் அனுமதி கிடைத்துள்ளது. (ஓ-152)

## நாளை

*பங்குனி 27*
*சனிக்கிழமை*
*09.04.2005*
*திதி : பிரதமை*
*பின்னிரவு 01.55 வரை*
*நட்சத்திரம் : ரேவதி*
*முற்பகல் 11.11 வரை*
*சுபநேரம் : 03.06 - 04.36*
*ராகுகாலம் : 09.06 - 10.36*
*(யாவும் பழைய நேரப்படி)*

# 'தமிழ் கணினி – 2005' கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.8

'தமிழ் கணினி - 2005' என்ற தொனிப்பொருளில் நிலவு.கொம் நிறுவனம் யாழ்.இந்துக்கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் கண்காட்சி மற்றும் கருத்தரங்கை நடத்தி வருகிறது.

கடந்த புதன்கிழமை ஆரம்பமான இக்கண்காட்சி, எதிர்வரும் திங்கட்கிழமை வரை தினமும் காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை இடம்பெறுகிறது.

தமிழ் கணினி, தமிழ் மென்பொருள்கள், தமிழ் மூலம் கணினிக்கல்வி, கணினி மூலம் பாடசாலைக்கல்வி, இணையம், மின்னஞ்சல், கணினி வன்பொருள், கணினி வலையமைப்பு, மென்பொருள் பயன்பாடு, பல்லூடக வடிவமைப்பு, கணினி மின்னிதழ், கணினி ஜோதிடம், கணினி நூல்கள், சிறுவர்களுக்கான கதைகள், பாட்டுகள் எனப் பல்வேறு விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கற்றலுக்கான பல்லூடக குறுவெட்டுகள் இக்கண்காட்சியில் சிறப்பம்சமாக உள்ளன. கணினி மொழிகள் பக்கவடிவமைப்பு, படக்கலைவ போன்றவற்றை சுயமாக இந்தப் பல்லூடகக் குறுவட்டுகள் மூலம் கற்கமுடியும்.

இவற்றைத்தவிர, திருக்குறளை 4 வகைப் பொழிப்புரைகளுடன் ஒலி மற்றும் எழுத்துவடிவில் கொண்ட குறுவட்டும், கணினியை தமிழ் மயப்படுத்தும் குறுவட்டும் பலரது கவனத்தையும் கவர்ந்து வருகின்றன.

இக்கண்காட்சியில் கம்யூட்டர் ருடே சஞ்சிகையின் பழைய, புதிய பிரதிகளை விசேட விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ள முடியும். (ஒ)

## உதயவாக்கு

நம்பிக்கை இல்லாமல் செய்யும் முயற்சி அடிவாரமில்லாத கிணற்றை ஆழம் காண முயல்வதற்கு ஒப்பானதாகும். *- காந்தியடிகள்.*

# ஆங்கிலம் கற்பதன் நோக்கம்

**நீங்கள் ஆங்கிலத்தில்க் கதைப்பதாக இருந்தால்**

பாடசாலைகளில் மற்றும் தனியார் நிறுவனங்களில் கற்பிக்கப்படும் இலக்கண ரீதியான ஆங்கிலக் கற்கை முறையினால் ஆங்கிலத்தினைக் கதைக்கமுடியாது. அத்துடன் கதைக்க முடியாத நிலையை மேலும் மேலும் அதிகரிக்கின்றது. ஒரு மொழி முதலில் கதைக்கப்பட வேண்டும். ஒரு மொழியினைக் கதைப்பதற்கு முன் கற்பிக்கப்படுகின்ற இலக்கணரீதியிலான விளக்கங்கள், வசன உருவாக்க வேகத்தினைக் குறைத்து, கதைக்க முடியாதநிலையினை ஏற்படுத்துகின்றது.

**நீங்கள் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெறுவதாக இருந்தால்**

பாடசாலைகளில் மற்றும் தனியார் நிறுவனங்களில் கற்பிக்கப்படும் இலக்கண ரீதியான ஆங்கிலக் கற்கை முறையினால் அதிக புள்ளிகள் பெறுவது கடினம். ஒரு மொழியினைக் கதைப்பவர்களாலேயே அதன் இலக்கணத்தினை இலகுவாகக் கற்க முடியும். கதைப்பதற்கு முன்பாக இலக்கணம் கற்பிக்கப்படுவது அந்த மொழியின் மீது வெறுப்பையும் அந்த மொழியினைக் கதைக்க முடியாத நிலையையுமே ஏற்படுத்துகின்றது. கற்றுக்கொள்கின்ற இலக்கணத்தினாலன்றி பெற்றுக்கொள்கின்ற பழக்கப்படுத்தலாலேயே மாணவர்கள் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெறுகிறார்கள்

**அடிப்படைவசனங்களில் அடித்தளம், அதனை அடிப்படையாகக் கொண்ட சூழல், பழக்கப்படுத்தல் ஊடாக இலக்கணத்தேர்ச்சி, அன்றாட வசனங்கள் ஊடாக சொல்வள விருத்தியாக்கம் என்ற படிமுறை மூலமாக ஆங்கிலத்தில்க் கதைத்தல் மிகவும் இலகுவானது. அதன்பின் அதிகபுள்ளிகள் பெறுதல் அதைவிட இலகுவானது. முதலில் ஆங்கிலத்திற் கதைப்போம்.**

**ஆங்கிலத்தில்த் தேர்ச்சி பெற்ற ஒரு சமுதாயத்தினைக் கட்டி எழுப்புவோம்**

## தேசிய ஆங்கில டிப்ளோமா

**நாடுதழுவிய பொதுப்பரீட்சை - சாம்ஸ்டெக்**

**28 May 2005**

**விண்ணப்பப் படிவம்** ( வேறுதாளில்ப் பூர்த்தி செய்யவும் )

Name

Address : ........................................................................

Date of Birth and Sex : ........................................................................

Examination : கீழுள்ள ஒன்றினைத் தெரிவுசெய்க

- ☐ ஆசிரியர்களுக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா
- ☐ அலுவலர்களுக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா
- ☐ பொதுத் தொடர்பாடலுக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா

22 புத்தகங்கள் கொண்ட பாடநெறி தேவை ☐ ஆம் ☐ இல்லை

Date .............................................. Signature : ..............................................

**குறிப்பு :**

- ☐ வயது, கல்வித்தகுதி வேறுபாடின்றி யாரும் விண்ணப்பிக்கலாம்.
- ☐ பரீட்சைக்கட்டணம் : ரூபா 500/-.
- ☐ விண்ணப்பத்தினை 4 * 9 அளவுள்ள உறையில் பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.
- ☐ விண்ணப்ப முடிவுத் திகதி 14.04.2005
- ☐ மாதிரி வினாத்தாள் விண்ணப்பதாரிகளுக்கு 20.04.2005 இற்குமுன் அனுப்பிவைக்கப்படும்.
- ☐ 22 புத்தகங்கள் தேவைப்படுவோர் அதற்கான கட்டணமாக ரூபா 500/- சேர்த்து அனுப்ப வேண்டும்.

விண்ணப்பத்தினை 'PSALMS TECHNOLOGIES' என்ற பெயருக்கு 'DEHIWALA' தபாலகத்தில் மாற்றத்தக்கதான காசுக்கட்டளையுடன் அனுப்பவேண்டிய முகவரி :

**PSALM TECHNOLOGIES, 22- 1/4, GALLE ROAD, DEHIWALA.**

## SAAMSTECH இன் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி

## SAAMSTECH இல் பணி நியமனத்துக்கான பயிற்சி

வரும் 2006ஆம் ஆண்டுக்குமுன் இலங்கையில் முழுமையான ஆங்கிலத்தினை விருத்திசெய்யும் நோக்கோடு 50000 மாணவர்களுக்கான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் SAAMSTECH இன் செயற்பாடுகளில் பணிபுரிவதற்கு அலுவலர்களைத் தயார் செய்யும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பயிற்சிநெறி

| | | |
|---|---|---|
| பயிற்சிக்காலம் | : | 3 மாதங்கள். தினமும் நான்கு மணிநேரம், வாரத்தில் 5 நாட்கள் |
| கட்டணம் | : | ரூபா 12000/- |
| கல்வித்தகுதி | : | க.பொ.த உயர் தரத்தில் 3 பாடங்களில் சித்தி |

சுயமாகப் பூர்த்தி செய்த சுயவிபரக்கோவை மற்றும் சான்றிதழுடன் நேர்முகப்பரீட்சைக்கு நேரில் வரவும்

இதுவரை 31 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்
முதலில் வருபவர்கள் மற்றும் தகுதி அடிப்படையில் மேலும் 9 பேர் மட்டும் பாடநெறியில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

**SAAMSTECH, 841, HOSPITAL RD, JAFFNA. Ph: 021 - 4591571**

## பத்துவருட ஆய்வில் உருவாக்கப்பட்ட மொழிக்கற்கைநெறிக்கான ஒரு புதிய பரிமாணம்

எந்தவொரு மொழியினையும் இலகுவாகக் கதைக்கமுடியும். ஒரு மொழியினைக் கதைத்தல் என்பது பழக்கப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டது. 3 வயதில் எழுத்துத் தெரியாமல், இலக்கணம் தெரியாமல், இரண்டும் மூன்றும் தெரியாமல் ஒரு குழந்தையால் ஒரு வருடத்தில் ஒரு மொழியினைக்கதைக்க முடியுமாயின் வளர்ந்தவர்களால் மிக மிக இலகுவாகக் கதைக்க முடியும். வளர்ந்தவர்கள் ஒரே நாளில் எந்தவொரு ஆங்கில வசனத்தினையும் உருவாக்குவதற்கான அமைப்புகளை கற்றுக்கொள்ளலாம். அதன்பின்னர் பழக்கப்படுத்தலை அடிப்படையாகக்கொண்ட சொல்வள விருத்தியாக்கமும், கதைப்பதற்கான வசனஉருவாக்க வேகமும் இலகுவாக கதைக்க வழிவகுக்கின்றது. SAAMSTECH இன் வகுப்புகளின் மூலம் வாரத்துக்குக் குறைந்தது நான்கு மணிநேரம் என்ற அளவில் பெறப்படுகின்ற தொடர்ச்சியான பயிற்சிமூலம் இலகுவாக முழுமையாகக் கதைக்க முடியும்.

## SAAMSTECH இன் நேரடி வகுப்பு

**Level 1 :** அதிகமான சொற்களின்றி அடிப்படை வசனங்களை வேகமாக உருவாக்குவதற்கான பயிற்சியும் பழக்கப்படுத்தல் மூலமான இலக்கணமும்.

**Level 2 :** அன்றாடம் கதைக்கும் பல்லாயிரக்கணக்கான வசனங்களை அடிப்படையாகக்கொண்டு கதைப்பதற்கான சொல்வளம் விருத்திசெய்யப்படுவதோடு அமைப்புக்கு புறநடையான வசனங்கள் வசனங்களாகவே பழக்கப்படுத்தப்படுகிறது.

**Level 3 :** ஆங்கில மூலமான இதில் தொடர்ச்சியான ஆங்கில உரையாடல்களைப் புரிந்துகொள்ளல், சிந்தனை அடிப்படையில் வசனங்களை உருவாக்கல், வசன உருவாக்கல் வேகத்தினை அதிகரித்தல் என்பன ஏற்படுத்தப்படுகிறது,

கணினிப்படுத்தப்பட்ட இப்பாடநெறியில் இலக்கணம் கற்பிக்கப்படுவதில்லை. சந்தேகங்கள் தீர்க்கப்படுவதில்லை. ஆனால் சரியான பிரயோகங்கள் பழக்கப்படுத்தப்படுகின்றது. எனவே கதைக்கும்போது இலக்கண ரீதியான சிந்தனை ஏற்படாது. வேகமாகக் கதைக்க முடியும். தரப்படுகின்ற பயிற்சிகள், வசனங்களை எழுதுவதற்கேற்ற வேகத்தில் தரப்படாமல் கதைப்பதற்கேற்ற வசன உருவாக்கமாகவே பயிற்றுவிக்கப்படுகிறது,

**ஆசிரியர்கள், அலுவலர்கள், உயர்கல்வி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், பெற்றோர், வெளிநாடு செல்லவுள்ள இளைஞர் யுவதிகள், பாடசாலை மாணவர்கள் அனைவரும் கலந்துகொள்ளலாம். இன்று நடைமுறையில் உள்ள மிக இலகுவான ஆங்கிலக்கல்வி இதுவே.**

## உத்தரவாதம்

SAAMSTECH இன் வகுப்புகளில் ஒவ்வொருவாரமும் குறைந்தது நான்கு மணிநேரமாக 48 மணிநேரம் தொடர்ச்சியாகப் பயிற்சிபெற்று ஆங்கிலத்தைக்கதைக்க முடியாதவர்கள் பகிரங்கமாக அறியத்தரலாம். உங்கள் பணம் திருப்பித்தரப்படும்.

## ENGLISH UNLIMITED

இப்போது ஆங்கிலத்தினை இலகுவாகவும், முழுமையாகவும் கதைப்பதற்கான பயிற்சிநெறி. ஆங்கிலத்தில்க் கதைக்கும் திறனை விரும்பியவரை அதிகரிக்கப் பல்லாயிரக்கணக்கான வசன ஒலிப்பயிற்சிகளுக்கூடான பழக்கப்படுத்தல்களில் விரும்பிய அளவுக்கு பயிற்சி பெறலாம்.

## ஆங்கில, சிங்கள நேரடி வகுப்பு

பதிவுக்கு மற்றும் வகுப்புகளுக்கு:

**SAAMSTECH, 841, HOSPITAL RD, CHUNDIKULI ,JAFFNA. Ph: 4591571**

**SAAMSTECH, கொடிகாமம் வீதி, கரவெட்டி.**

வெளிவந்துவிட்டது

## நடைமுறை ஆங்கிலம்

அன்றாடம் கதைக்கும் பல்லாயிரக்கணக்கான வசனங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது. ஒவ்வொருவருடைய தேவைக்குமேற்ப மூன்று புத்தகங்களாக வெளிவந்துள்ளது.

☐ஆசிரியர்களுக்கானது ☐அலுவலர்களுக்கானது ☐மாணவர்களுக்கானது

**பக்கங்கள் - 480. விலை ரூபா 540/-**

**கீழுள்ள புத்தகங்களுக்கு 10.04.2005 வரை சலுகைக்கட்டணப் பதிவுகள்**

| | இலங்கை விலை | ஐரோப்பா விலை | சலுகை விலை |
|---|---|---|---|
| ☐ அடிப்படை ஆங்கிலம் | ரூபா 540/- | ரூபா2000/- | ரூபா 300/- |
| ☐ முழுமையான சிங்களம் | ரூபா 540- | ரூபா3500/- | ரூபா 400/- |
| ☐ தமிழ் மூலம் ஜெர்மன் | ரூபா 700/- | ரூபா6000/- | ரூபா 500/- |
| ☐ தமிழ் மூலம் பிரெஞ்சு | ரூபா 700/- | ரூபா6000/- | ரூபா 500/- |

**ஜெர்மன் மற்றும் பிரெஞ்சு புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் 200 பிரதிகளே இலங்கையில் விற்பனைசெய்யப்படவுள்ளது.**

**வெளிநாடுகளில் வாழும் உங்கள் உறவுகளுக்குக் கொடுக்கக்கூடிய மிகச்சிறந்த அன்பளிப்பு இதுவே**

**SAAMSTECH, 841, Hospital Road, Jaffna. Ph : 4591571**

# விவசாயிகளின் சிரமங்களைக் குறைக்க வன்னிப் பகுதியில் இயந்திரம் அறிமுகம்

## வேளாண்தொழில்நுட்ப நிறுவனம் நடவடிக்கை

கிளிநொச்சி,ஏப்.8

விவசாயிகள் நெல் அறுவடையின்போது எதிர்நோக்கும் சிரமங்களைத் தவிர்க்க வழிசெய்யும் புதிய இயந்திரத்தை வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம் மன்னார் மாவட்டத்தில் அறிமுகம் செய்துள்ளது.

இதுதொடர்பாக வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனத்தின் முகாமையாளர் சி.புவனேஸ்வரன் 'உதயனுக்குத்' தெரிவித்ததாவது:-

வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள விவசாயிகள் நெல் அறுவடைக் காலத்தில் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பற்றாக்குறையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். உரிய நேரத்தில் நெல்லை அறுவடை செய்ய முடியாததால் நெல்மணிகள் உதிர்வது, பறவைகளால் சேதம், பயிர் முறிந்து நெல்மணிகள் மணணில் வீழ்வது என்று பல வழிகளில் நஷடம் அடைய நேரிடுகிறது.

இநதநிலையில், நெல் உற்பத்தியில் லாபம பெற்ற விவசாயிகளை வன்னிப் பெருநிலப் பரப்பில் விரல்விட்டு எண்ணிவிடலாம். காலத்திற்குக் காலம் நஷ்டத்தை எதிர்கொண்டு வந்ததால் பல விவசாயிகள் தமது உணவுத்தேவைக்காக மட்டும் விவசாயத்தை மேற்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனைக கருத்திறகொண்டே எமது நிறுவனம் புதிய இயந்திரத்தை அறிமுகப்படுத்தி உள்ளது. முதலில் சிறிய ரக நெல் அறுவடை இயந்திரங்களைக் கடந்த வருடம் கொளவனவு செய்து விவசாயிகளுக்கு வழங்கினோம். அந்த இயந்திரத்தால் அறுவடை மட்டுமே செய்யமுடியும். அறுவடை செய்த கதிர்களைக் கட்டி சூடு மிதித்து நெல்லை மூடைகட்டுவதற்கு மீண்டும் தொழிலாளர்களைத் தேடும் நிலையே இருந்தது. இதனால், அந்த இயந்திரங்கள் மீது விவசாயிகள் ஆர்வம்காட்டவில்லை.

இதனையடுத்து, கடந்தவருடம் சிறுபோகக் காலத்தில் நெல்லை அறுவடை செய்து கதிரில் இருந்துநெல்லைப் பிரித்து பொதிசெய்யக்கூடிய இயந்திரத்தைப் பரீட்சார்த்தமாக மன்னார் ஆண்டான்குளம் பகுதியில் அறிமுகம் செய்தோம். இதனை விவசாயிகள் ஏற்றுக்கொண்டார்கள்.

இதனைத் தொடர்ந்தே இந்த வருடம் அத்தகைய 10 இயந்திரங்களைச் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யத் திட்டமிட்டோம். அதன்படி, இந்தப் புதிய அறுவடை இயந்திரங்களை விவசாயிகளுக்கு அறிமுகம் செய்துள்ளோம்.

தற்போது இந்த இயந்திரங்கள் தலா 12 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. ஓர் ஏக்கர் வயலில் நெல்லை அறுவடை செய்து தனியாக்கிப் பொதிசெய்வதற்கு 6 ஆயிரத்து 200 ரூபா அறவிடுகிறோம். வெளிநாடுகளில் பயிற்சி பெற்றவர்கள் தற்போது இயந்திரங்களை இயக்குகிறார்கள். எதிர்காலத்தில் இங்குள்ளவர்களுக்கு இயந்திரங்களை இயககப் பயிறசி வழங்கவுள்ளோம். எதிர்காலத்தில் இயந்திரத்துக்கு அறவிடும் கட்டணம் குறைய வாய்ப்புள்ளது.



இங்கு ஓர் ஏக்கர் வயலை மனிதவலு மூலம அறுவடைசெய்து உழவு இயந்திரம் மூலம் சூடு மிதித்து பொதிசெய்வதற்கு 8 ஆயிரம் ரூபாவுககும் மேல் செலவாகிறது. அத்துடன், உரியகாலததில் அறுவடைசெய்ய முடியாமலும் உள்ளது. தற்போது நாம் அறிமுகப்படுத்தியுள்ள இயந்திரம் மூலம் சிரமமின்றி குறைந்த செலவில் நெல்லை அறுவடை செய்வதிலிருந்து பொதிசெய்வது வரையிலான பணிகளை விவசாயிகளால் செய்ய முடிகிறது - என்றார் அவர்.

(ஒ-352)

# மீனவர் சங்கத்துக்கு வாகனம் அன்பளிப்பு

அளம்பில்,ஏப்.8

முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச சங்கத்திற்கு ஐநா. அபிவிருத்தி நிறுவனம் 'கூலர்' வாகனம் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளது.

நிறுவனத்தின் 2004ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் வாங்கப்பட்ட இந்த வாகனம் கடந்த 30 ஆம் திகதி சங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக எம்மால் விடப்பட்ட கோரிக்கைக்கு அமையவே இவ்வாகனம் வழங்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் அமரியராசா தெரிவித்தார்.

(ஒ-416-202)

# வற்றாப்பளையில் பங்குனித் திங்கள் விழா

ஒட்டுசுட்டான்,ஏப்.8

வற்றாபபளை என அழைக்கப்படும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் பங்குனித் திங்கள் விழா சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

பங்குனித் திங்கள் உற்சவத்திற்குப் பல இடங்களில் இருந்து பல ஆயிரம் பக்த அடியார்கள வந்து செல்கிறார்கள். எதிர்வரும் திங்கட்கிழமை அம்மனுக்கு மஞ்சத் திருவிழா நடைபெறவுள்ளது.

(த-341)

# காணிக்கச்சேரி நடைமுறை பற்றி பரந்தன் மக்கள் முறைப்பாடு

பரந்தன்,ஏப்.8

கண்டாவளை பிரதேச செயலகத்தினரால் நடத்தப்பட்டுவரும் காணிக்கச்சேரி சேவையில் சில நடைமுறைகள் சிரமமளிப்பதாகப் பரந்தன் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

பரந்தன் கிராம உத்தியோகத்தர் பிரிவில் காணிக்கச்சேரி சேவை சமீபத்தில் இடம்பெற்றது. இதில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களைக் கண்டாவளைப் பிரதேச செயலகத்திற்கு எடுத்துவருமாறு சம்பந்தப்பட்ட பொது மக்கள் அறிவுறுத்தப்பட்டனர் என்று பரந்தன் பகுதி மக்கள் தெரிவித்தனர். கண்டாவளை செல்வது தமக்குச் சிரமமாக உள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

பரந்தன் பிரதேசத்தில் கடந்த மாத இறுதியில் நடைபெற்ற தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கம நிகழ்வில் இதுதொடர்பாக மக்கள் பிரதிநிதிகள் முறையிட்டனர். (ஒ-352)

# கற்சிலைமடுவில் சிரமதானம்

ஒட்டுசுட்டான்,ஏப்.8

தியாகதீபம் அன்னை பூபதியின் நினைவு தினத்தை ஒட்டி கற்சிலைமடுப் பிரதேசத்தில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அண்மையில் கற்சிலைமடு கிராம அலுவலர் தி.ஆனந்தராசா தலைமையில் இடம்பெற்ற சிரமதான நிகழ்வில் கற்சிலைமடு பிள்ளையார் ஆலய வளாகம் துப்புரவு செய்யப்பட்டது. நூறுக்கும் மேற்பட்ட மக்கள் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

(த-345)

# சிறப்புற நடைபெற்ற மெய்வன்மைப் போட்டி

வட்டக்கச்சி,ஏப்.8

கிளிநொச்சி, தருமபுரம் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 30 ஆம் திகதி சிறப்புற நடைபெற்றது.

வித்தியாலய முதல்வர் சபூலோகராசா தலைமையில் பிற்பகல் 1.30 மணியளவில் ஆரம்பான இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கண்டாவளைக் கோட்டக்கல்வி அலுவலர் வீ.இராசகுலசிங்கமும் சிறப்புவிருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி கௌரி சந்திரசேகரனும் கௌரவ விருந்தினராக விசுவமடுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சோழநிலவனும் கலந்துசிறப்பித்தனர்.

(த-405)

# கிளிநொச்சி வயல்களில் இம்முறை சிறுபோக நெற்செய்கை வீழ்ச்சி!

## விவசாயிகளிடம் பணமில்லை; அதனால் அவர்கள் நாட்டமில்லை

பரந்தன்,ஏப்.8

கிளிநொச்சி மாவட்ட வயல்களில் இம்முறை குறைந்தளவு வயல்களிலேயே சிறுபோக நெற்செய்கை இடம்பெற்று வருகின்றது.

கிளிநொச்சி விவசாயிகள் இம்முறை பலர் சிறுபோகச் செய்கையில் ஆர்வம் காட்டாது இருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் ஏற்கனவே அறுவடை செய்த நெலலைச் சநதைப்படுத்த முடியாதநிலை ஏற்பட்டிருக்கிறது என்றும் - அதனாலேயே அடுத்துவரும் சிறுபோகச் செய்கையில் அவர்கள் நாட்டமின்றி - அக்கறை செலுத்தாது - இருக்கின்றனர் எனறும் கூறப்படுகின்றது.

கடந்த பெரும்போகத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்வனவு செய்யப்பட்டு வந்தது. எனினும், தற்போது அந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டுவிட்டது.

தனியார் அரிசி ஆலைகளும் நெல் கொள்வனவைக் குறைத்துவிட்டன என்று கூறப்படுகின்றது. இதனால், விவசாயிகள் நிதி நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கின்றனர்.




சிறுபோகததுக்கான விதை நெல்லைக் கொள்வனவு செய்யவும், அதற்கான பராமரிப்புச் செலவுகளுக்கும் பணம் இல்லாததால் விவசாயிகள் இம்முறை சிறுபோகச் செய்கையில் ஈடுபடுவதைத் தவிர்த்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

எனவே, தம்மிடமுள்ள நெல்லுக்குச் சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க அரச அதிபர் மற்றும் ஏனைய தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் - அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டால் தாம் சிறுபோகச் செய்கையில் ஈடுபட முடியும் எனவும் விவசாயிகள் கூறுகின்றனர்.

(த-352)

# தற்காலிக வீடுகளை அமைப்பதற்கு உதவி

வட்டக்கச்சி,ஏப்.8

போரூட் நிறுவன அனுசரணையுடன் கிளி. கிழக்குப் புனர்வாழ்வு நிறுவனம் பத்து தற்காலிக வீடுகளை அமைப்பதற்கான பொருள்களை உதவியாக வழங்கியுள்ளது.

இராமநாதபுரம் மாவடி கிராமத்தில் குடியிருப்பு வசதியற்ற - மிகக்குறைந்த வருமானம் பெறும் - குடும்பங்களுக்கு இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது எனவும் குடியிருப்பாளர்களது பங்களிப்புடனேயே வீடுகள் அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான பொருளகள் வழங்கப்பட்டு வீடமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் பெருமளவு வேலைகள் பூர்த்தியடையும் நிலையிலுள்ளன.

(த-405)

# சில்லறை இருந்தால் ஏறுங்கள் இல்லையென்றால் இறங்குங்கள்

## ஒட்டுசுட்டான் பஸ்ஸில் இப்படி ஒரு நிலைமை!

ஒட்டுசுட்டான்,ஏப்.8

'மாற்றிய சில்லறைக்காசு இருந்தால் மட்டும பஸ்ஸில் ஏறுங்கள், இல்லையேல் இறங்கி நில்லுங்கள்' இவ்வாறு ஒட்டுசுட்டான் ஊடாகப் புதுக்குடியிருப்புக்குச் செல்லும் பேருந்துகளின் நடததுநர்கள் பயணிகளிடம் தெரிவிப்பதாக அவர்கள் கூறுகின்றனர்.

இதனால் சில்லறைக் காசு இல்லாத சமயங்களில் தாம் பஸ்ஸில் பயணிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகப் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கஷ்ரப பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு பிரயாணத்தில் இப்படியும் ஓர் அவலநிலை ஏறபட்டுள்ளதெனத் தெரிவிக்கப்படுகின்றது. எந்த விதமான அவசர வேலைக்குச் செல்பவராக இருந்தாலும் சரி. நோயாளியாக இருந்தாலும் சரி சில்லறைக்காசு இல்லையேல் பஸ்ஸில் அவர்களை ஏற்றவேண்டாமெனத் தமக்குப் பேருந்துப் பகுதியினர் பணித்துள்ளமையால் இப்படி நடக்க வேண்டிய நிலைஏற்பட்டுள்ளதாகச் சாரதிகளும், நடத்துநர்களும் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து உரியவர்கள் அதிக அக்கறையுடன் செயற்பட்டுப் பயணிகளின் சிரமங்களைத் தவிர்க்க வேண்டுமெனப் பொதுமக்கள் கோருகின்றனர்.

(8-341)

# நிரந்தர நியமனம் வழங்கக்கோரி தொண்டர் ஆசிரியர்கள் பேரணி

முல்லைத்தீவு வலய தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி கடந்த 4ஆம் திகதி புதுக்குடியிருப்பில் ஓர் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

காலை 9 மணியளவில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலை முன்பாக ஆரம்பமான பேரணி சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையை வந்தடைநதது. அங்கு தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் வி.சிறிதரன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

31.12.2003இற்கு முன்னர் சேவையாற்றியவர்களுக்கு நிரந்த நியமணம் வழங்கப்படவிருப்பதாக ஊடகங்கள் ஊடாக அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் இதுவரை தமக்கு நியமனம் வழங்கப்படவில்லை என்றும் - இதற்கு எதிர்ப்பையும் அதிருப்தியையும் வெளிப்படுத்தும் முகமாகவே இந்தக் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது எனவும் தொண்டர் ஆசிரியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிபபாளர்களுக்கான மகஜரை வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் பெற்றுக்கொண்டார்.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநருக்கான மகஜரை உதவி அரச அதிபர் சி.தயானந்தாவும் ஜனாதிபதிக்கான மகஜரை நாடாளுமன்ற உறுப்பினர் சி.கனகரத்தினத்தின் செயலாளர் சி.வேதவனமும் பெற்றுக்கொண்டனர்.

விடுதலைப் புலிகளுக்கான மகஜரினை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டு தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆதரவாகக் கோஷம் எழுப்பினர்.

(த-353)

# இராமநாதபுரம் மக்களுக்கு ஒக்ஸ்பாம் நிறுவனம் கடனுதவி

இராமநாதபுரம் ஆலடி கிராம மக்களுக்கு ஒக்ஸ்பாம் நிறுவன நிதியுதவியுடன் கிளி. கிழக்குப் புனர்வாழ்வு நிறுவனத்தினால் கடன் வழங்கப்பட்டுள்ளது.

சிறுவியாபாரத்திற்கென 5 பயனாளிகளுக்கும் நெற்செய்கைக்கென 15 பயனாளிகளுக்கும் இக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. சிறுவியாபாரத்திறகென 10 ஆயிரம் ரூபாவும் விவசாயததிறகென 15 ஆயிரம் ரூபாவும் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இக்கடன் ஒரு சுழற்சி முறைக்கடன் எனவும் இக்கடன் மீள வசூலிக்கப்பட்டு மீண்டும் மக்களுக்கு வழங்கப்படும் எனவும் கிளி.கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினர் தெரிவித்தனர். (த-405)


# சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நண்பர்கள், உறவினர் வீடுகளில் தங்கியிருப்போருக்கும் உதவி

புதுக்குடியிருப்பு,ஏப்.8

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் தங்கியிருப்போருக்கும் 'வேல்ட்விஷன்' நிறுவனம் உதவிப் பொருள்களை வழங்கிவருகிறது.

முன்னர் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டன. இப்போது உறவினர், நண்பர்கள் வீடுகளில் இருப்போருக்கும் அந்த நிறுவனம் உதவிப பொருள்களை வழங்கிவருகிறது.

கடந்த 30ஆம் திகதி மாலை 'வேல்ட்விஷன்' நிறுவனத்தின் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்தல் வைத்து புதுக்குடியிருப்பு பிரதேசத்தில வசிக்கும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாளி, தறப்பாள், விளக்கு, நுளம்புவலை, சவர்க்காரம், குளோறின், பெட்சீட், தண்ணீர் சுத்திகரிப்புத் துணி, உணவுப் பொருள்கள் என்பன அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன.(த-353)


வனிலா சுவையூட்டப்பட்டது
Action
Nutritional Food Drink
போஷாக்கு நிறைந்த பானம்
பிள்ளைகள்
சக்தி, புரதம், கல்சியம், இரும்புச்சத்து, விட்டமின் B, மற்றும் ஏனைய அத்தியாவசிய போஷனைகள்.
வாலிபர்
சக்தி, புரதம், கல்சியம், இரும்புச்சத்து, சின்க், மற்றும் ஏனைய அத்தியாவசிய போஷனைகள்.
வயது வந்தவர்கள்
புரதம், கல்சியம், இரும்புச்சத்து, சின்க், அன்டி ஒக்ஸிடன் மற்றும் ஏனைய அத்தியாவசிய போஷனைகள்.
கர்ப்பிணி/பாலூட்டும் தாய்மார்கள்
சக்தி, புரதம், கல்சியம், ஃபோலிக் அமிலம், விட்டமின் B12, இரும்புச்சத்து, மற்றும் ஏனைய அத்தியாவசிய போஷனைகள்.
போஷாக்கின் வாழ்க்கை வட்டம்.
27 அத்தியாவசிய போஷனைப்பதார்த்தங்கள்
தகுந்த சின்க் இரும்புச்சத்து விகிதம்.
தகுந்த கல்சியம் பொஸ்பரசு விகிதம்.
வயோதிபர்
புரதம், விட்டமின் B, அன்டி ஒக்ஸிடன் மற்றும் ஏனைய அத்தியாவசிய போஷனைகள்.
Manufactured by :
Astron
Astron Limited,
688, Galle Road, Ratmalana, Sri Lanka.
Tel: 2636741, 5566741 Fax: 2636173
E-mail: astron@astron.lk
450 கிராம்
ரூ.460/=
Net Weight : 450 g.
No added sugar
Vanilla Flavoured
Action
Nutritional Food Drink
போஷாக்கு நிறைந்த பானம்

# தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் மக்கள் மீள் குடியமர்வதில் மெத்தனம்

தென்மராட்சி,ஏப்.8

தென்மராட்சி தெற்கு கைதடி - நாவற்குழி வடக்கு, மறவன்புலோ மேற்கு ஆகிய பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்வதில் மெத்தனம் காட்டி வருகின்றனர் என்று அரசு நிர்வாகத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதிகளில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு அப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் முன்னர் வேண்டுகோள் விடுத்து வந்தனர். இதனையடுத்து சுமார் 100 குடும்பங்கள் மீளக்குடியமர்வதற்குரிய பகுதிகள் துப்புரவு செய்யப்பட்டு கடந்த 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மீளகுடியமர படையினரால் அனுமதி வழங்கப்பட்டது.

கடந்த மார்ச் 31ஆம் திகதி வரையான புள்ளி விவரப்படி 40 குடும்பங்களே அப்பகுதியில் நிரந்தரமாக குடியமர்ந்துள்ளன என்றும் -

சிலர் பொது நிறுவனங்கள் வழங்கிய தற்காலிக கொட்டில்களை அமைத்து விட்டு வேறு இடங்களில் தங்கியுள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.

இதேவேளை உலக வங்கியின் உதவியுடனான வீட்டுத்திட்டத்தில் வீடுகள் கிடைத்த பத்துக் குடும்பங்கள் வீட்டுவேலைகளைப் பூர்த்தியாக்காமல் வேறு இடங்களில் தங்கியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதிகளைச் சேர்ந்த 90 குடும்பங்களுக்கு உடனடி மீள்குடியமர்வுக் கொடுப்பனவும், அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளும் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

மீளக்குடியமர அனுமதிக்காத பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது குடியிருப்புக்களில் மீளகுடியமருவது தொடர்பாக படை அதிகாரிகளுடன் கலந்துரையாட முடியாத நிலை, மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டவர்களின் மெத்தனத்தால் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-117)

## பார்வையற்ற இளைஞர் பொலீஸாரிடம் தஞ்சம்

தென்மராட்சி,ஏப்.8

பார்வைப்புலன் அற்ற இளைஞர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை முகமாலை சோதனைச் சாவடியில் வைத்துப் பொலீஸாரிடம் தஞ்சமடைந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த மகாலிங்கம் ஜெகன் என்ற இந்த இளைஞரைக் கொடிகாகமம் பொலீஸார் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இவ்விளைஞரின் தாயார் நீதிமன்றில் சமுகமளித்திருந்ததால் இளைஞர் 3 ஆயிரம் ரூபா பிணையில் அழைத்துச் செல்ல நீதிவான் உத்தரவிட்டார்.

(ஒ-117)

# தொண்டு நிறுவனங்களுக்கு எச்சரிக்கைக் கடிதம்

கரவெட்டி,ஏப்.8

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிப்பணிகளில் ஈடுபட்டுவரும் தொண்டு நிறுவனங்களுக்கு சமீப காலமாக எச்சரிக்கைக் கடிதம் அனுப்பப்பட்டு வருவதாக அறியமுடிகிறது.

'தன்மானத் தமிழன்' என்ற பெயரில் பதிவுத் தபாலில் அனுப்பப்படும் இக்கடிதத்தில் எமது மக்களைக் காப்பாற்றக் கூடிய சக்தி விடுதலைப் புலிகளுக்கு அதிக அளவில் இருக்கின்றது. நாம் வெளிநாட்டினரையோ, வெளிநாட்டு நிறுவனங்களையோ நம்பி வாழவில்லை. எமக்கு அனைத்தும் தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனே" என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

(ஒ-70)





தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தம்பசிட்டி காந்தியூர் கிராமத்தில் வைத்து சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் கவிச்செல்வன் மங்கள விளக்கேற்றுவதையும் -

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் யாழ்.மாவட்ட பணிப்பாளர் சு.ஜெயராஜ் சைக்கிள்களை வழங்குவதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:சி.சுந்தரலிங்கம் கரவெட்டிச் செய்தியாளர்)*

# எச்சரிக்கைக் கடிதத்திற்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை

**சுனாமி செயலணிப் பணிப்பாளர் தெரிவிப்பு**

கரவெட்டி,ஏப்.8

சமீபகாலமாக தொண்டு நிறுவனங்களுக்கு கிடைத்து வருவதாகக் கூறப்படும் எச்சரிக்கைக கடிதத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது.

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினரும் 'சுனாமி' அனர்த்தச் செயலணியின் பணிப்பாளருமான எஸ்.பாலையா இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பொலிகண்டியில் இடம்பெற்ற சுனாமியால் பாதிப்படைந்தவர்களுக்கு தற்காலிக வீடுகளை கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

'சுனாமி' அனர்த்தத்தால் பாதிப்புற்ற மக்களின் துயர்துடைத்துவரும் தொண்டர் ஸ்தாபனங்களை மனம் நோகவைக்கும் விசமத்தனமான கடிதங்கள் தற்போது சில விசமிகளால் பதிவுத் தபால்மூலம் அனுப்பப்பட்டு வருகின்றன.

இக் கடிதத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் எவ்விதத்தொடர்பும் இல்லை.

தற்போது வெளிநாட்டு நிறுவனங்களும் உள்நாட்டு நிறுவனங்களும் சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்கு அதிக அளவில் சேவையாற்றி வருகின்றன. இந்தச் சேவையைச் சீர்குலைக்கும விதமாகவே தற்போது சிலவிசமிகள் பதிவுத் தபால்களை அனுப்பிவருகின்றனர்.

இக்கடிதத்தைப் பார்வையிட்டு வேதனைப் படுகின்றோம். சுனாமி அனர்த்தத்தால் பாதிப்புற்ற மக்கள் துயர் துடைப்பதில் வெளிநாடுகளும் வெளிநாட்டு, உள்நாட்டு தொண்டர் ஸ்தாபனங்களுமே அதிகப்பங்கேற்றன.

அதனைத் தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாம் என்றும் மறக்கமுடியாது என தொண்டர் நிறுவனங்களுக்கும் வெளிநாட்டு அரசுகளுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன். (ஒ-70)

# வீடமைப்பு அதிகாரசபை 400 குடும்பங்களுக்கு கடனுதவி

யாழ்ப்பாணம்,ஏப்.8

தேசிய வீடமைப்பு அதிகாரசபை இந்த வருடம் 400 குடும்பங்களுக்கு யாழ். குடாநாட்டில் வீடமைப்புக்கடன் உதவிகளை வழங்கவுள்ளது.

இந்தத் தகவலை தெரிவித்தார் வீடமைப்பு அதிகாரசபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் மாசிலாமணி.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய வீடமைப்பு அதிகாரசபை இந்த வருடம் யாழ்.குடாநாட்டில் 400 குடும்பங்களுக்கு வீடமைப்புக் கடனுதவிகளை வழங்குவதற்கு நிதி ஒதுக்கியுள்ளது.

ஒவ்வொரு வீட்டிற்கும் 50ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்படும். இந்த நிதியை பத்து வருடங்களுக்குள் மீளச் செலுத்துதல் வேண்டும். முதற்கட்டமாக 90 பேருக்கு கடனுதவி வழங்கபட்டுள்ளன.

கடனுதவி பெற விரும்புவோர் மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள யாழ்.செயலகத்துக்கு அண்மையாக உள்ள வீடமைப்பு அதிகாரசபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.(ஒ-7)

## இளைஞர், யுவதிகளுக்கு ஆற்றுப்படுத்தல் சேவை

யாழ்ப்பாணம்,ஏப்.8

வடமராட்சி கிழக்கில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட இளைஞர் - யுவதிகளுக்கான ஆற்றுபடுத்தல் சேவையினை 'ரீடோ' நிறுவனம் வழங்கி வருவதாக யாழ்மாவட்ட 'ரீடோ' நிறுவன இணைப்பாளர் தி.ஜெயக்குமார் தெரிவித்தார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு இளைஞர் - யுவதிகளுக்கும் கல்வியில் ஆர்வம், சோர்வுற்ற நிலையில் உள்ள மாணவர்களுக்கும் இச்சேவை வழங்கப்படுவதாகவும்-

இதற்கென 19 பேர் கொண்ட ஆற்றுப்படுத்தல் குழுவினை நியமித்துள்ளதாகவும் - தி.ஜெயக்குமார் மேலும் தெரிவித்தார்.

(ஒ-185)

# உள்ளூராட்சி சபைகள் நடத்தும் 14 நூலகங்கள் தரமுயர்வு

வலி.தெற்கு,ஏப்.9

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களால் நடத்தப்பட்டுவரும் 14 பொதுநூலகங்கள் தரம் மூன்று நிலைக்கு தரமுயர்த்தப்பட்டுள்ளன.

நூலகங்கள் தரம் உயர்த்தப்பட்டுள்ளமை தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் து.விஜயலட்சுமி உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலி. தெற்குப் பிரதேச சபையின் உடுவில் பொது நூலகம், வலி. வடக்கு பிரதேச சபையின் தெல்லிப்பழை பொது நூலகம், காங்கேசன்துறை பொது நூலகம், மயிலிட்டி பொதுநூலகம், மல்லாகம் பொதுநூலகம்.

வலி.தென்மேற்கு பிரதேசசபையின் பண்டத்தரிப்பு பொதுநூலகம், பண்டத்தரிப்பு கிராம பொதுநூலகம், மானிப்பாய் பொதுநூலகம், ஆனைக்கோட்டை கிராம பொது நூலகம், வலி. கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய் பொதுநூலகம், புத்தூர் பொதுநூலகம், கோப்பாய பொதுநூலகம், அச்சுவேலி பொதுநூலகம், நீர்வேலி பொதுநூலகம் ஆகியவையே தரமுயர்ததப்பட்டுள்ளன.

இவற்றைவிட கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பச்சிலைப்பள்ளி பிரதேச சபையைச் சேர்ந்த புலோபழை பொதுநூலகம், கரைச்சிப் பிரதேச சபையை சேர்ந்த கிளிநொச்சி பொது நூலகம் என்பவையும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

(ஒ-152)




# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு ஏப்.15 இற்கு முன் வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.8

வடமராட்சியில் சுனாமி அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்காக அமைக்கப்பட்டு வரும் தற்காலிக வீடுகள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்கப்படவுள்ளன.

- இவ்வாறு யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

பருத்தித்துறைப் பிரதேசத்தல் ஆயிரத்து 76 வீடுகளும் மருதங்கேணிப் பிரதேசத்தில் 2 ஆயிரத்து 90 வீடுகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த வீடுகள் அனைத்தும் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னதாக நலன்புரி நிலையங்களில உள்ள மக்களுக்கு கையளிக்கப்படவுள்ளன.

இந்த வீடுகள் 200 சதுர அடி விஸ்தீரணம் கொண்டவையாக அமைக்கப்பட்டு நிலத்திற்கு சீமெந்து இடப்பட்டுள்ளது. ஒரு வருட காலத்திற்கும் மேல் அந்த வீடுகளில் மக்கள் குடியமரக் கூடியவகையில் அவை அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், அந்த வீடுகளில் குடியிருக்கும் மக்களுக்குத் தேவையான குடிதண்ணீர் மற்றும் மலசல கூட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன என்று அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-203-202)

# தென்மராட்சி அபிவிருத்தி குறித்துக் கலந்துரையாடல்

சாவகச்சேரி,ஏப்.8

தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்தி தொடர்பாக கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் கலந்துரையாடலொன்று இடம்பெறறது. தென்மராட்சி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சி.குணாளசிங்கம் இதற்குத் தலைமைவகித்தார்.

இந்தக் கலந்துரையடலில் தென்மராட்சி பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

கைதடி வலயம், சாவகச்சேரி வலயம், கொடிகாமம் வலயம், வரணி வலயம் என்று நான்காகப பிரிக்கப்பட்டு அபிவிருத்தி விடயங்கள் ஆராயபபட்டன.

இந்தக் கலந்துரையாடலில் தென்மராட்சிப் பிரதேச திணைக்கள அதிகாரிகள், யாழ்.மாவட்ட திணைக்களங்களைச் சேர்ந்த பிரதம அதிகாரிகள், வைத்தியதிகாரிகள், யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர், யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநேசன், சுரேஸ், பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராசா, ஈழவேந்தன் ஆகியோரும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், தென்மராட்சி சகல சங்கங்களின் பிரதிநிதிகள் உட்படப்பலரும் கலந்துகொண்டனர். (ஒ-31)

## புங்குடுதீவு கழக நிர்வாகிகள் தெரிவு

நல்லூர்,ஏப்.8

புங்குடுதீவு அபிவிருத்திக் கழகத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் சமீபத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக பேராசிரியர் கா.குகபாலனும், உபதலைவராக கே.சண்முகலிங்கமும், செயலாளராக எஸ்.பேரின்பநாதனும் உபசெயலாளராக எஸ்.தர்மகுலசிங்கமும், பொருளாராக பஞ்சலிங்கமும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன், ஆறுபேர் கொண்ட செயற்குழுவும் தெரிவானது. (ஒ-111)




றொக்லண்ட் அதிசக்தி பழைய தென்னஞ் சாராயம்
மற்றும் றொக்லண்ட் பழைய தென்னஞ் சாராயம்
அனைத்தும் புதிதாகும் புத்தாண்டில் என்றும் மாறாத
அதி சுவையின் புதுப்பொலிவில்
பழைமைச் சுவை பழகிய சுவை

## றொக்லண்ட் பழைய சாராயம்

ஒரே கூரையின் கீழ் தயாராகும் விஷேடமிக்கத் தயாரிப்பு
வினோதமாக இணைந்திருங்கள்

| | |
|---|---|
| மேலதிக ஸ்ட்ரோங் | மி.லீ.750 – ரூபா.385/- |
| | மி.லீ.375 – ரூபா.200/- |
| | மி.லீ.180 – ரூபா.115/- |
| பழைய சாராயம் | மி.லீ.750 – ரூபா.365/- |
| | மி.லீ.375 – ரூபா.190/- |
| | மி.லீ.180 – ரூபா.110/- |

ESTD. ROCKLAND 1924

எமது பதமறிந்த நாமம்

# நீதியின் குரலாக சமாதானத்தின் தேசியகீதமாக ஒலித்தவர் திருத்தந்தை



அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் இவை தூய ஆவியானவரின் இனிய கண்கள் (கலா 5:22-23). இவை அனைத்தையும் தன் வாழ்வோடு கலந்து, எளிதாகப் பிழிந்து கத்தோலிக்கருக்கு மட்டுமல்லாது இவ்வுலக மக்கள் அனைவருக்கும் எடுத்துக்காட்டாக மணம் பரப்பி இவ்வுலக வாழ்வின் மேலான, தூயதான, சவாலான பணியை நிறைவுசெய்தவர்தான் திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல்.


1978 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 16 இல் திருச்சபையை வழிநடத்தும் பணிக்கு தன்னையே இவர் அர்ப்பணித்தார். மக்களின் மகிழ்ச்சி ஆரவாரமும், அன்பான வாழ்த்தொலிகளும், அழகான கரகோஷங்களும் வானைப் பிளக்க அழகான, நிமிர்ந்த. அமைதியான தோற்றத்துடன் திருத்தந்தை அன்று காட்சியளித்தார்.

2005ஆம் ஆண்டு ஏப்ரல் 03இல் ஆடுகளை விட்டு எங்கே செல்கிறீர் என்ற அழுகுரல்களும், ஓலங்களும், கதறும் ஒலிகளும் அதே வானைப் பிளக்க 27 ஆண்டுகளின் பின் தன் பந்தயத்திலே சீரும் சிறப்புமாக ஓடிய உண்மையிலே, அதன் நிறைவிலே திருத்தந்தை துயில் கொள்கின்றார்.

445 ஆண்டுகளின் பின் இத்தாலியரல்லாது அதுவும் பொதுவுடைமை நாடான போலந்தின் செல்வச் செழிப்பு ஒன்று திருத்தந்தையாக உருவெடுத்தது. இவர் கோடானு கோடி கத்தோலிக்க விசுவாசிகளின் தனிப்பெரும் தலைவர் என்பதைச் சுட்டிக்காட்டினாலும், மதங்களைக் கடந்த மனித நேயம் இவர் வாழ்வின் வெற்றிக்கு வித்தாகியது என்றால் அது மிகையாகாது. மனித நேயம் என்பது இயல்பாக வருவது; இழுத்து வரப்படுவதல்ல என்கின்ற வார்த்தையை அவ்வப்போது அல்ல, மாறாக தன்வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் தெளிவாக உணர்ந்தவர்தான் எம் திருத்தந்தையவர்கள்.

இளமை முதல் எளிமையை நேசித்தவர். இதை அவர் தன் சொந்த வாழ்விலே அதிகம் அனுபவித்தவர். 1920 ஆம் ஆண்டு மே மாதம் 18 இல் பிறந்தவர். தன் 9ஆவது வயதில் 1929 ஏப்ரல் 03 இல் தன் அன்புத் தாயாரை இழந்தார். 12ஆம் வயதில் தன் ஒரே சகோதரனை இழந்தார். இறுதியாக தன்னுடன் உறவொன்று சொல்லிக்கொள்ள இருந்த தந்தையையும் 1941 ஆம் ஆண்டில் இழந்தார். வேதனையும், சோதனையும் வாழ்விலே விரட்டியபோதும் அவற்றைச் சவாலாக ஏற்றாரே தவிர துன்பமாக அவர் மாற்றியதில்லை. கஷ்டப்பட்டு உழைத்தார். 1939 இல் ஜேர்மனிப் போர் காரணமாக கல்வி இடைநிறுத்தப்பட்டதால், தன் குடும்பத்தின் வறுமை நிலையைக் கருத்திற்கொண்டு கல்லுடைக்கும் ஆலைத் தொழிலாளியாக வேலை செய்தார். அதனால் ஏழ்மையையும் எளிமையையும் அவர் தன் வாழ்விலே இலகுவாக உணர்ந்தவர். ஏழைகள் மட்டில், எளியவர் மட்டில் மிகுந்த இரக்கம் கொண்டு ஏழை, எளியோருக்காகத் தம்மை நற்செய்தியாக மாற்றியவர் எம் திருத்தந்தை.

மக்களோடு தன்னை அடையாளப்படுத்தி அவர்களிடையே நல்ல நண்பனாகப் பழகுவதைத் திருத்தந்தை பெரிதும் விரும்பினார். குழந்தைகள்பால் அதிகம் பிரியம் கொண்டவர். அவர்களை அரவணைத்து அன்போடு பழகினார். இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என்பதைச் சிந்தித்து இளைஞருக்கான மாநாடுகளை நடத்தி இளைஞர்களுக்கு உந்து சக்தியானார். குடும்பங்களே மனித வாழ்வின் ஆணிவேர் என்பதை உணர்ந்து குடும்பங்களை ஒன்றுதிரட்டி ஒழுக்கத்திலும், அன்பிலும், இறைபக்தியிலும் குடும்பங்கள் இனிதே மிளிர ஆவன செய்தார். இவ்வாறு, அனைத்து நிலைகளிலும் திருத்தந்தையின் பாதங்கள் ஆழப்பதிந்திருந்தன.



1981 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி சென்.பீற்றர் சதுக்கத்தில் வைத்து தன்னைச் சுட்ட துருக்கி நாட்டு இளைஞனான முகமட் அலி அகாவுக்கு மன்னிப்பளிக்கும் பொழுது....

இந்த நூற்றாண்டின் தலைசிறந்த மனிதர்களில் முதன்மையானவர் திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் என்றால் ஐயப்பட ஒன்றுமில்லை. அஞ்சாத நெஞ்சினராய், அநீதியை எதிர்த்துக் குரல் கொடுத்தார். அப்பாவி மக்களின் அவலச் சாவுகளுக்குத் திருத்தந்தை துணிவோடு கேள்வி கேட்டார். அடக்குமுறையும், சர்வாதிகாரமும் மலிந்து கிடந்தபோது திருத்தந்தை மௌனம் சாதித்துவிடவில்லை. மாறாக வீரத்துடன் நீதிக்கான வினா தொடுத்தார்.

நாடு, மதம், மொழி, இனம், சாதி போன்ற பல்வேறு நிலைகளில் பிரிவினைகள் தோன்றி மனித மாண்பு சிதைந்தபோது திருத்தந்தையின் குரல் நீதியின் குரலாக, சமாதானத்தின் தேசியகீதமாக எதிரொலித்ததை நாம் நன்கு அறியலாம். 1999 ஆம் ஆண்டு மடுத்திருப்பதியில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டது அறிந்து அதிர்ச்சியையும் தனது எதிர்ப்பையும் அரசிற்குக் காட்டியவர். உலக வர்த்தக மையம், அமெரிக்க இராணுவ தலைமைப் பீடமான பென்ரகன் போன்றவை தாக்கப்பட்டு அநியாயமாக மக்கள் இறந்தபோது தனது அனுதாபத்தை உலகறிய வெளிப்படுத்தி கொடுமையான இந்த கோரச் செயல்கள் தேவையற்றவை என்று விளக்கினார். ஈராக்கிய யுத்தம் நடைபெற்றபொழுது ஈராக்கிய மக்களுக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுத்து "ஈராக்கிய யுத்தம் கவலை தருகிறது. யுத்தத்தை நிறுத்துங்கள்" என்று அமெரிக்காவுக்கு வேண்டுகோள் விடுத்தார். எம் இலங்கை மண்ணில் நிரந்தர சமாதானத்திற்காக 2002 டிசெம்பர் 18 இல் விசேட திருப்பலி நிறைவேற்றி செபித்தார். 2004 டிசெம்பர் 26 இல் உலகை உலுக்கிய சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்காக கவலையுடன் செபித்தார். இப்படியாக இவரின் எண்ணற்ற தியாக உணர்வுகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

உலக சமாதானத்திலே அதிக நாட்டம் கொண்டு அனைத்து சமயங்களும் சமாதானத்தின் இனிய கருவிகளாக முடியும் என்று தனது 36 ஆவது உலக சமாதான தினச் செய்தியிலே வெளியிட்டார். ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொண்டு மன்னித்து வாழ உலக மதங்கள் அனைத்திற்கும் அழைப்பு விடுத்த திருத்தந்தை 2001 மே மாதம் 4 ஆம் திகதி சீரிய இஸ்லாமியரைச் சந்தித்து மொகமதியர் பள்ளி வாசல் சென்று ஆண்டாண்டு காலமாகத் திருச்சபை வரலாற்றில் விட்ட தவறுகளை ஏற்று அவற்றிற்காக மன்னிப்புக் கேட்டார். "மன்னிப்பின்றி நீதியில்லை, நீதியின்றி சமாதானமில்லை" என்ற சொற்றொடரின் பாரிய உட்பொருளை உணர்ந்து தன்னை 1981 மே 13 இல் துப்பாக்கியால் சுட்ட முகமட் அலி ஆக்காவை "அவர் என் சகோதரர்" என்று மன்னித்து ஏற்றுக் கொண்டார்.

திருச்சபையின் படிப்பினைகளுக்கும் இறைவிசுவாசத்திற்கும் எதிரான தீயசக்திகளை எதிர்ப்பதில் தயங்காது செயற்பட்டவர் எம் திருத்தந்தையவர்கள். மனித வாழ்வின் புனிதத்துவத்தை உணர்ந்து அப்புனிதத்துவத்திற்கு முரணானவற்றைத் திருத்தந்தையும் எதிர்த்தார். கருவறையைக் கல்லறையாக்கும் கருக்கலைப்பு, ஒரே பாலினத் திருமணம், குளோனிங் முறை இப்படிப் பலபல மனித வாழ்விற்கு ஒவ்வாத, தேவையற்ற தீய, அழுகிய முறைமைகளை இவரும் எதிர்த்துக் குரல் கொடுத்து, மனித வாழ்வின் பொக்கிஷங்களைக் காப்பாற்ற என்றும் பாடுபட்டு உழைத்தார்.

உண்மையில் இவரைப் பற்றி எவ்வளவோ எழுத நினைத்தாலும் எழுதியவை அத்தனையும் ஒரு தொடக்கமாகத்தான் அமைய இயலும். முழுக்க முழுக்க தியாகத்தையும், அன்பையும், பிறரன்பையும் உலகம் முழுக்க விதைத்த ஒரு மாமனிதர் அவர். எந்த வேலிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப் போகாமல் மனித நேயம் என்கின்ற மகத்தான வளையத்திற்குள் மாத்திரமே தன்னை வளைத்துக்கொண்டு இருபத்தேழு ஆண்டுகள் இந்தப் பிரபஞ்சத்தையே தன்வயப்படுத்திக் கொண்டு ஒரு மாபெரும் இயக்கத்தின் தலைவனாக, எண்ணற்ற மக்களின் தந்தையாக, தாயாக, நண்பனாக வாழ்ந்து சென்றவர்தான் எம் திருத்தந்தை.

**அருட்சகோ.பாலதாஸ் பிறாயன்**

இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்து வந்திருக்கிற தாய்த் திருச்சபையில் புனித பேதுரு தொடங்கி ஆயிரக்கணக்கான புனிதர்களும் - புனிதைகளும் - இரத்த சாட்சிகளும்- மறைசாட்சிகளும் வேரோடிக் கிடந்தாலும் உலகம் முழுக்க உள்ள மனிதர்களிடம் மதம்- மொழி - இனம்- பேதம் இவைகளைக் கடந்த பரந்த வெளியில் இயேசுவை மாத்திரமே மனதில் நிறுத்தி கிறிஸ்தவத்தையும் - அன்பையும் - தியாகத்தையும் - சேவையையும் ஆணித்தரமாக இந்தப் பூமியிலே வேரோடச் செய்த ஒரே மனிதம் திருத்தந்தை என்றால் அது பொய்யில்லை. அதனால்தான் இந்தப் பூமிக் களத்தை விட்டு அகலும் திருத்தந்தையின் பணியும், வாழ்வும், வரலாறும் எம்மிடை நின்று நிலைக்கும்.

இறுதியாக....
தள்ளாத வயதிலும்
தனிப்பெரும் தலைவனாய்
தாய்த் திருச்சபையைக் காத்தாயே...
தலை வணங்குகின்றோம்... - உன்
தியாக வேள்வியை - எம்
தலைமேற் கொண்டு பயணிப்போம்..
எம் இனிய தந்தையே
எப்போது மீண்டும் வருவாய்...??

## திருத்தந்தையின் வாழ்வில்......!

உலக கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவரான பாப்பரசர் 2 ஆம் அருளப்பர் சின்னப்பரின் வரலாறும், அவருடைய வாழ்க்கையில் நடந்த முக்கிய சம்பவங்களும்:-

**1920, மே 18:** போலந்து நாட்டில் வாதோவிஸ் என்ற இடத்தில் பிறந்தார். இயற்பெயர் கரோல் ஜோசப் வொஜ்ரைலா. அவரது தந்தை போலந்து இராணுவ வீரர். தாய் லிதுவேனியா நாட்டைச் சேர்ந்தவர்.

**1942:** நெருங்கிய உறவினர்களை இழந்த அவர், நாஜிக்களின் ஆதிக்கத்தின்போது சமயகுரு பதவிக்கான படிப்பை இரகசியமாக மேற்கொண்டார்.

**1946, நவ.1:** ரோமில் உள்ள சமயப் பல்கலைக்கழகத்தில் படிப்பை முடித்து போலந்து திரும்பினார். கிராகோவில் சமயகுருவாக பதவியேற்பு.

**1958, செப்.28:** கிராகோவில் உதவி ஆயராக நியமனம்.

**1964, ஜன.13:** கிராகோவில் பேராயராக நியமனம்

**1967, ஜூன்.26:** கர்தினாலாக நியமனம்

**1978, ஒக்.16:** 455 ஆண்டுகளுக்குப் பிறகு, இத்தாலி நாட்டைச் சேராத பாப்பரசராகத் தேர்வு

**1979, ஜூன்.2-10:** சொந்த நாடான போலந்துக்கு விஜயம்.

**1981, மே.13:** புனித பீற்றர் சதுக்கத்தில் துருக்கியைச் சேர்ந்தவரால் சுடப்பட்டார். அறுவைச சிகிச்சைக்குப் பிறகு தேறினார்.

**1982, மே.12:** போர்த்துக்கல் சென்றபோது அங்குள்ள ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த மதகுரு கத்தியால் குத்த முயற்சி. ஆனால், காயம் ஏற்படவில்லை.

**1987, ஜூன்.8-14:** சொந்த நாடான போலந்துக்கு 3ஆவது முறையாக விஜயம் செய்தார். அப்போது தொழிற்சங்க தடைக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

**1989, டிசெ.1:** ரஷ்ய அதிபர் மிகைல் கொர்பச்சேவ் ரஷ்யாவுக்கு வருமாறு அழைப்பு, அழைப்பை ஏற்க மறுப்பு.

**1990, ஏப்.21:** கம்யூனிசம் வீழ்ந்ததற்குப் பிறகு அதிபர் வக்லாவ் ஹேவலுடன் செக்கோஸ்லோவாகியா பயணம்.

**1990, ஒக்.18:** கத்தோலிக்க மதகுருமார்கள் திருமணம் செய்ய அனுமதிக்க முடியாது என்று ஆயர்கள் பேரவையில் அறிவித்தார்.

**1992, ஜூலை.15:** குடலில் இருந்த கட்டி ஒன்று அகற்றப்பட்டது.

**1992, ஒக்.31:** சூரியனை பூமி சுற்றிவருகிறது என்று அறிவித்தற்காக கிறிஸ்தவ திருச்சபையில் கண்டிக்கப்பட்ட கலிலியோவை 359 ஆண்டுகளுக்குப்பிறகு கௌரவப்படுத்தினார்.

**1992, நவ.1:** பெண் ஆயர்களையும் அனுமதிப்பது என்ற அங்கிலிக்கன் திருச்சபையின் முடிவால் வத்திக்கானில் அதிருப்தி ஏற்பட்டது.

**1992, டிசெ.7:5** நூற்றாண்டில் இருந்திராத வகையில், றோமன் கத்தோலிக்க திருச்சபைகளுக்கெனப் புதிய பொது .திருமறைக் கல்வி அறிவிக்கப்பட்டது.

**1993, டிசெ.28:** 2,000 ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு இஸ்ரேலுடன் வத்திக்கான் முழு ராஜீயத் தூதரக உறவு கொண்டது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

மாணிக்கப் பெட்டகமே! வரலாற்று நாயகனே!
காணிக்கை வைக்கின்றோம் கண்ணீர் மலர் வளையம்
வானுலக வாசலிலே மாலையுடன் வரவேற்பார்
ஞானநதி போல் நகர்ந்து நாடெல்லாம் நலன்புரிந்தீர்
சாதி மதம் நிறமாம் தடைச்சுவரைத் தட்டி விட்டு
நீதி அன்பு அமைதி என்ற நிழல் மரங்கள் நட்டவரே!
நூற்றிப் பதினேழு நாடுகளில் இயேசுதந்த
நாற்றுகளை நட்டு நலன்புரிந்த சீமானே!
அடக்குமுறைகளினால் அல்லல் படுவோர்க்குக்
கிடைத்த பெருந்துணையே! கிட்டிவந்தோர் பொற்கோயில்
மனிதகுல மாண்புகளை வையகத்தின் சந்தையிலே
இனிதாய் விலைமதித்த புனிதநிலாப் போன்றவரே!
சுட்ட பகைவனையும் துயரினிலே மன்னித்துக்
கட்டி அணைத்தங்கே கருணை சொரிந்தவரே!
வானம் என்ற பந்தலின்கீழ் வளர்மதியும் ஞாயிறும்
ஞான மலை நீயுமன்றி மற்றோர் ஒளியுமுண்டோ?
விழுவார் தொழுவார் அழுவாரைக் கைதூக்கி
மெழுகாய் உருகிநின்ற பாசத்தின் பாப்பரசே!
அந்தியிலும் சந்தியிலும் அருஞ்சாம வேளையிலும்
சிந்தையிலே தெய்வப்பணிச் சேவையிலே தோய்ந்தவரே!
ஏழைகளின் அன்பரசன் இளைஞர்களின் பழச்சோலை
தொழுநோயாளருக்கு சுகந்தம் துறவியர்க்கு
போலந்து நாடளித்த பொற்குளத்தின் தாமரையே
காலநதி கொண்டுவந்த கரைகாணாத் திரவியமே!
பொய்யே தலையணையாய்ப் புளுகுகளே பஞ்சணையாய்
வைபத்து மேடைகளில் பாய்சிரிக்கும் அரசியலார்
மெய்யின் திருவிளக்காய் விளைந்த பயிர் வயலாய்
செய்யும் திருப்பணியின் சிறப்புகளை நோக்காரோ?
காவியமாய் இந்நிலத்தின் காற்றில் திரிந்தவரே!
ஆவியே! மனிதபணி அகராதி யானவரே!
எல்லாரும் இன்புற்று வாழ இறைவனிடம்
நல்லாசி கேட்டருளும் நன்றியொடு வாழ்த்துகிறோம்.



செவாலியர் இளவாலை அமுது (லண்டன்).

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள CD 125 மோட்டார் சைக்கிள், 10ரீ தொடரிலக்கமுள்ள Minor (1000) கார், SRI RAM Honda (650) ஜெனரேட்டர், Kubota K.s 200 நீர் இறைக்கும் இயந்திரம், எல்லா விதமான கடைக்கும் ஏற்ற முதிரை சோக்கேஸ் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: து.ஜெயராஜசிங்கம் (சுந்திரன்), பிளாக் வீதி, சங்கானை. T.P. 077-6369410 (43925)

## வீடு விற்பனைக்கு

இல.55, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மேல்மாடியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.ராதாகிருஷ்ணன் 77, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (43819)

யாழ்ப்பாணம் நந்தாவில் கொக்குவிலில் (செம்பியன் வீதியில்) ஒன்றரைப் பரப்புக் காணியில் நான்கு படுக்கை அறைகள் கொண்ட நவீன மாடிவீடு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: அ.முத்துலிங்கம் T.P. 021 222 3837, யாழ்ப்பாணம். 0044 2085532202, 0044 7962059886 லண்டன். (சி-42162)

மல்லியோடை வல்வெட்டி என்னும் முகவரியில் சுற்றுமதில், சகல வசதிகளுடனும் கூடிய வீடும் காணியும் விற்பனைக்குண்டு. அ.மெ.மி. பாடசாலை இல.751, பிரதான வீதியிலிருந்து 50யார் தூரத்தில் உள்ளது. தொடர்பு: தி. சரோஜினி தேவி, கே.கே.எஸ். வீதி, இணுவில் (ஆஸ்பத்திரி முன்பாக). T.P. 077-6321486. (43935)

## காணி விற்பனைக்கு

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு அண்மையில் பிரதான வீதியில் 4 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: ஸ்ரீராஜ், வட்டுக்கோட்டை தொலைபேசி எண். 021 222 5536, 021 4591356 (43924)

## காணி தேவை

கிளிநொச்சிக்கும் பரந்தனுக்கும் இடையேயான ஏ-9 நெடுஞ்சாலையில் நான்கு ஏக்கருக்குக குறையாமல் காணி தேவைப்படுகின்றது. காணி விற்க விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு விவரங்களை அனுப்பி வைக்கவும். த.பெ.எண் 23, மே/பா உதயன், யாழ்ப்பாணம் (சி/42161)

## பணிப்பெண் தேவை

ஆசிரியர் குடும்பத்திற்கு பணிப்பெண் தேவை. தங்கி நின்று வேலை பார்ப்பவர் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு சி.மணிவண்ணன், தலங்காவல் பிள்ளையார் கோயிலடி, அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு. (T.P.021 - 222 7015)(சி/42923)

## பூனைக்குட்டிகள் விற்பனைக்கு

சடைப் பூனைக்குட்டிகள் இரண்டு விற்பனைக்குண்டு. தொடர்பு: சுட்டி பாம், வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை. (43923)

## அபூர்வ ஜோதிடம்

தீர்க்க முடியாத எத்தகைய மர்ம நோய்களையும் குணப்படுத்தும் மருந்தியல், உச்ச அதிர்ஷ்ட பலன் அறிதல் தினமும் 8.30 a.m 2.00 p.m தொடர்பு: உயரப்புலம் பிள்ளையார் கோயிலடி, விதானையார் வளவு, ஆனைக்கோட்டை.(43926)

## திருமண சேவை

வெளிநாட்டுக்குக் கூட்டிச் செல்லக் கூடிய மணமகளும் மணமகனும் அரச தொழில் பார்க்கும் மணமக்களும் எம்மிடம் உண்டு. சகல மதத்தவர்களும் உண்டு. தொடர்பு: துர்க்கா திருமண சேவை 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 4591417 (43946)

## மணமகள் தேவை

73ஆம் ஆண்டு, ரோகினி நட்சத்திரம், செவ்வாய் இல்லாத, அரசாங்க உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 - 4591417 (43945)

## THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கும் வரை கட்டணம் 1000/- By: விக்னேஸ்வரன் ஆச்சாா.426 (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம், பிளாக்வீதி, சங்கானை. (43944)(21-14-45)

## வேலைக்கு ஆள் தேவை

பருத்தித்துறையில் இயங்கும் கோழிப்பண்ணையில் வேலைசெய்வதற்கு வேலையாள் தேவை.

*தகுந்த சம்பளம் வழங்கப்படும்.*

தொடர்பு: T.P.: 077 3086972

(சி-42168) (29-14-45-21)

## [illegible] கல்வி நிலையம்

கோண்டாவில்

2005ஆம் ஆண்டுக்கான புதிய வகுப்புகள்

* தரம் – 04 * தரம் – 05 மற்றும் புலமைப் பரிசில்

ஆசிரியர்கள்:

S.S.செந்தூரன் R.T. அன்பழகன்

S.K. ரவீந்திரன்

ஆரம்பம்: 10-04-2005 SUN. 8.30 a.m.

(43784)(21-14-45)

ஜப்பானிலிருந்து!

இறக்குமதி செய்யப்பட்ட சகல விதமான வாகனங்களுக்குமுரிய வாகனக்கண்ணாடிகள், தனி வில்லுத் தகடுகள், செற்தகடுகள் மற்றும் ரயர், ரியூப், றிம், றேடியேற்றர், லைற் வகைகள், புஸ் வகைகள், பற்றறி வகைகள் மற்றும் ஏனைய உதிரிப்பாகங்கள் அனைத்தும் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

## அம்பாள் மோட்டோர்ஸ்

பிரதான தபாற்கந்தோருக்கு அருகில்
133/6, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(43915)(29-16-18)

இணையற்ற சேவையினூடு...

32 வருடங்கள் தனித்துவம் பெற்ற நிறுவனத்தில்

THE EXPRESS INSTITUTE KOPAY — A BOON TO STUDENTS

## O/L Day Class

பகல் நேர வகுப்புகள்
காலை 8.30 – பி.ப.1.15

ஏப்ரல் 15ல் ஆரம்பம்

மாணவர் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

அனுமதிக்கு முந்துங்கள்

The Express Institute
Irupalai, Kopay. –அதிபர்.

# சேவைநயப்பு வைபவம்

யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவின் ஏற்பாட்டில் சைவப்புலவா வல்லிபுரம் கந்தசாமியின் சேவை நயப்பு வைபவம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் குழுவின் தலைவர் கலாநிதி க. குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

(எ-202)

## பதினெட்டாவது வருட நினைவலைகள்

மலர்வு 17 - 09 - 1969



உதிர்வு 08 - 04 - 1987

### சற்குணநாதன் நந்தகோபன்

நானிலத்தில் வந்துதித்த நந்தகோபனே
மீசாலைப் பகுதியில் விளங்கிடவே வந்துதித்தாய்
பேசாமல் நீ சென்றாய் பெற்ற மனம் வேகுதடா
கூசாமல் உன்னுயிரை காலனவன் பறித்தானே
உன்பாசமுகம் பார்த்து பதினெட்டு ஆண்டுகளடா
நேசமாய் உன்நினைவும் நெஞ்சை விட்டகலாதடா!

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அக்காமார், தம்பி, தங்கை, மகன்மார், மருமக்கள், நண்பர்கள், உறவினர்கள்.

பிருந்தாவனம்,
மீசாலை மேற்கு,
மீசாலை.

(43943)(32-21-14-45)

தகவல்:
லயன் சி.சற்குணநாதன் (Retd. T.A)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ
18.01.1942



மண் நெகிழ
08.04.2003

அமரர்

## நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம்

துணிவோடு துணையாக
துன்பங்கள் களைந்தீர்
தூணாக இருந்தெங்கள்
துயரங்கள் தீர்த்தீர்
காணாமல் இரண்டாண்டு
கழிந்திடவேன் வைத்தீர்
விழுதாக வாழ்ந்தெம்மை
விருட்சமாய் வளர்த்தீர்
தொழுத்தகு தெய்வமாய்
தோதாய் நீர் ஆனீர்
அழுகின்றோம் தொழுகின்றோம்
ஆற்றும் எம்மனதை
முழுதாக எம்வாழ்வில்
மூழ்கிவிட்டீர்! சாந்தி!!

உசன்,
மிருசுவில்.

(சி-42171)

குடும்பத்தினர்.

அரியாலை சுதேசிய கொண்டாட்டம்

# பெரு விளையாட்டுப் போட்டிகள் ஞாயிறு முழுநாளும் இடம்பெறும்

யாழ்ப்பாணம்,ஏப்.8

அரியாலை 86ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டங்களை ஒட்டிய விளையாட்டுப் போட்டிகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவிருக்கின்றன.

அன்று காலை 6.30 மணிக்கு ஆண்கள், பெண்களுக்கான, உள்ளூர் வீரர்களுக்கான மரதன்ஓட்டம் சைக்கிள் ஓட்டம் என்பன அரியாலை சனசமூக நிலைய முன்றிலில் ஆரம்பமாகி ஆரம்ப இடத்திலேயே முடிவடையும்.

16வயதுக்குட்பட்ட உள்ளூர் வீரர்கள் கலந்துகொள்ளும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட துடுப்பாட்டப் போட்டி அன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும்.

இந்தப் போட்டியில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய 'ஏ' அணியும் 'பி' அணியும் மோதுகின்றன.

மாவட்ட ரீதியில் நடத்தப்பட்டுவரும் துடுப்பாட்டப் போட்டியில் இறுதியாட்டம் அன்று முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும்.

இந்த ஆட்டத்தில் 'போர் ஸ்ரார்' வி.கவும் 'லெவின் ஸ்ரார்' வி.கவும் மோதுகின்றன.

யாழ். மாவட்டத் திணைக்களங்களுக்கிடையில் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் அன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும்.

இந்த ஆட்டத்தில் யாழ்.மாநகரசபை வி.கவும் யாழ். விளையாட்டுத் திணைக்கள வி.கவும் மோதுகின்றன.

இந்தப் போட்டிகள் யாவும் அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறுகின்றன.

அன்று மாலை 7.30 மணி முதல் மின்னொளியில் அரியாலை அருணோதய ச.ச.நிலையத்தில் இடம்பெறும் கரபந்தாட்டப் போட்டியில் பல கழகங்கள் பங்குபற்றுகின்றன.

(3-190)

# திரேசா இல்லம் சம்பியனானது

பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி அண்மையில் நடைபெற்றபோது திரேசா இல்லம் அதிக புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்று வெற்றியீட்டியது.

கொறட்டி இல்லம் 2ஆம் இடத்தையும், ஜோசப் இல்லம் 3ஆம் இடத்தையும் பெற்றன.

வித்தியாலய அதிபர் க.பாலேந்திரராசா தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் பிரதம அதிதியாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் கலந்துகொண்டு வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

சிறப்பு விருந்தினர்களாகப் பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருட்திரு. ம.பெ.ஞானரத்தினம் அடிகளார், பெரியவிளான் பங்குத்தந்தை அருட்திரு. ஜி.நேசநாயகம் அடிகளார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(3-135)

ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணம்

# அரியாலை வி.கவை 116 ஓட்டங்களால் கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி. வென்றது

யாழ்ப்பாணம்,ஏப்.8

யாழ். சென்றல் விளையாட்டு கழகம் வி.டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணத்திற்காக அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்களைக் கொண்ட 11 பேர் பங்குகொள்ளும் - கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி. கழக அணி 116 ஓட்டங்களால் அரியாலை மத்திய விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி. கழக அணி 15 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 298 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

சிவசங்கர் 21 ஓட்டங்களையும், பிரகாஸ் 110 ஓட்டங்களையும், சசிகரன் 33 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் அரியாலை மத்திய விளையாட்டுக் கழக அணி வீரர் றொகான்குமார் 33 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

290 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென களம் இறங்கிய அரியாலை மத்திய கழக அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 173 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர்.

சுதர்சன் 34 ஓட்டங்களையும், டினேஸ் 21 ஓட்டங்களையும், றொகான்குமார் 22 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்து வீச்சில் பிரகாஸ் 7 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

(3-190)

# எல்லைப்படை மாவீரர் நினைவு உதைபந்தாட்டம்; அன்ரனீஸ், சென்.நீக்லஸ் அணிகள் மோதுகின்றன

யாழ்ப்பாணம்,ஏப்.8

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவுடனும் 'உதயன்' ஊடக அனுசரணையுடனும் வலிகாமம் லீக் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மணற்காடு அன்ரனீஸ் வி.கவும் சென்.நீக்லஸ் வி.கவும் மோதுகின்றன.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்திலேயே இந்த அணிகள் மோதுகின்றன. மாலை 5மணிக்கு இடம்பெறும் மற்றோர் ஆட்டத்தில் மனோகரா வி.கவும் ஸ்கந்தா ஸ்ரார் வி.கவும் மோதும்.

(3-86)

# 498 ஓட்டங்களைக் குவித்தது இலங்கை

## நியூஸிலாந்து 2ஆவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுகளுக்கு 64

இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக்கிடையே நேப்பியரில் நடைபெறும் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிவின்போது நியூஸிலாந்து அதன் இரண்டாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்களை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

3 விக்கெட்டுக்களை இழந்து 351 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய ஆட்டத்தில் தனது முதலாவது இன்னிங்ஸைத் தொடர்ந்த இலங்கை அணி 498 ஓட்டங்களுககு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

சதமடித்து களத்திலிருந்த ஜயவர்த்தன நேற்றைய ஆட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்தில் ஆட்டமிழந்தார். அவர் வெளியேறியதையடுத்து பின் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். ஆனால், களத்தின் மறுமுனையில் இருந்த திலான் சமரவீர சற்று சிறப்பாக ஆடி அரைச்சதமடித்தார்.

463 ஓட்டங்களை அணி பெற்றிருந்தபோது சமரவீர ஆட்டமிழந்தார். இதன்பின் எஞ்சிய விக்கெட்டுக்கள் விரைவாக விழ 498 ஓட்டங்களில் அணியின் முதல் இன்னிங்ஸ் நிறைவுக்கு வந்தது.

இலங்கை அணி சார்பாக ஜயவர்த்தன 141 ஓட்டங்களையும், அத்தப்பத்து 127 ஓட்டங்களையும் சமரவீர 88 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூஸிலாந்து அணி சார்பாக மார்ட்டின், பிராங்லின் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களையும், ஆஸ்லே ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

நேற்று மாலையே தனது இரண்டாவது இன்னிங்ஸில் நியூஸிலாந்து துடுப்பெடுத்தாடியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கம்மிங், ஜேம்ஸ் மார்ஷல் களமிறங்கினர்.

கம்மிங் 16 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது லசித மலிங்கவின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அவருக்கடுத்து களமிறங்கிய ஹேமிஷ் மார்ஷல் 6 ஓட்டங்களுடன் வெளியேறினார். அவர் ஆட்டமிழந்த சிறிது நேரத்தில் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது. அப்போது நியூஸிலாந்து அதன் 2ஆவது இன்னிங்ஸில 2 விக்கெட்டுக்களை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஜேம்ஸ் மார்ஷல் 31 ஓட்டங்களுடனும், வைஸ்மன் ஓட்டம் எதுவும்பெறாத நிலையிலும் களத்தில் உள்ளனர்.

இதன்படி இலங்கை அணியைவிட 127 ஓட்டங்களால் நியூஸிலாந்து முன்னிலையில் உள்ளது.

பந்துவீச்சில் இலங்கை சார்பாக லசித மலிங்க 25 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இன்று ஆட்டத்தின் இறுதிநாளாகும்.(க-3)

# எல்லைப்படை மாவீரர் நினைவு உதைபந்தாட்டம்: ஒருபார்வை

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளில் முதல் பாதி ஆட்டம் எதிர்பாராத திருப்பத்தைப் பெற்று ரசிகர்களின் எதிர்பார்ப்பைத் தவிடுபொடியாக்கியது.

யாழ். லீக்கைச் சேர்ந்த யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டுக் கழகத்திற்கும் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே இடம்பெற்ற ஆட்டத்தின் முடிவே இந் நிலைமைக்குக் காரணம் ஆகும்.

ஆட்டம் ஆரம்பமாகிய நேரம் முதல் பாடும் மீன் விளையாட்டுக்கழக வீரர்கள் தொடர்ச்சியாகப் பல்கலைக்கழக அணியின் கோல்கம்பத்தை நோக்கி ஆக்கிரமித்த வண்ணம் இருந்தனர்.

இதனால், பல்கலைக்கழக அணியினர் பந்தை முன்நகர்த்தி செல்வதிலும் கோல்கள் பெறுவதிலும் பார்க்க தடுத்து விளையாடியதுடன் பந்துகளை தமது பக்கத்தில் இல்லாது வெளியேற்றுவதிலும் மிகவும் கவனமாகச் செயல்பட்டார்கள்.

முதல் பாதி ஆட்டம் முடிவடைவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் பல்கலைக்கழக அணியினர் பாடும் மீன் விளையாட்டுக் கழகத்திற்கு நெருக்கடிகளைக் கொடுக்க ஆரம்பித்தார்கள்.

இந்நிலைமையில் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் பல்கலைக் கழக அணியினர் பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தினரின் கோல் கம்பத்தை ஆக்கிரமித்து முன்னேறி விளையாடினார்கள்.

இரு அணிகளுக்கும் கோல்கள் பெறும் வாய்ப்புக்கள் சில கிடைக்கப் பெற்றபோதிலும் இரு அணிகளுமே கோல்களைப் பெற முடியவில்லை. பந்துகள் கோல்கம்பங்களுக்கு வெளியால் அடிக்கப்பட்டமையால் கோல்கள் பெற முடியவில்லை.

ஆட்டம் முடிவடைவதற்கு சில நிமிடங்கள் இருக்கையில் பல்கலைக்கழக கோல் காப்பாளர் வெளியால் சென்ற பந்தை உள்ளே எடுத்துக் கொடுத்தபோதும் அதனை மீண்டும் வெளியால் எறிந்தார் என்ற குற்றச்சாட்டில் மத்தியஸ்தரினால் மஞ்சள் அட்டை காட்டி எச்சரிக்கப்பட்டார்.

உதயன்
ஊடக அனுசரணை

மூலை உதையெனக் கருதி வெளியால் அனுப்பப்பட்ட பந்திற்கு மஞ்சள் அட்டை காட்டியது சரியா? பிழையா? என ரசிகர்களிடையே சர்ச்சை காணப்பட்டது.



யாழ். பல்கலைக்கழக அணியும் பாடும் மீன் அணியும் மோதும் காட்சி...

இரு அணிகளுமே கோல்கள் எதனையும் பெறாத நிலைமையில் ஆட்டம் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கு இரு அணிகளுக்கும் தலா ஐந்து சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் முதல் நான்கு உதைகளையும் பல்கலைக்கழக அணியினர் உதைத்து கோல்களைப் பெற்றபோதிலும் பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தினர் முதல் மூன்று உதைகளை மட்டும் உதைத்தபோதும் ஒரு கோலை மட்டுமே பெற்றனர்.

இந்நிலைமையில் கடைசி இரண்டு உதைகளையும் பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தினர் உரிய முறையில் உதைத்து கோல்களைப் பெற்றாலும் மூன்று கோல்களை மட்டுமே பெற முடியும் என்ற அடிப்படையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த முல்லை விளையாட்டுக் கழகமும், வலிகாமம் லீக்கைச் சேர்ந்த இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

இரு கழகத்தினரும் கோல்கள் பெறும் முயற்சியாக இரு அணிகளின் கோல் கம்பங்களையும் மாறி மாறி முற்றுகையிட்டுப் பந்துகளை கொண்டுசென்றனர். ஆனாலும் எதிரணியினர் மாறிமாறி கோல்களை பெற முடியாது தடுத்தமையால் பந்துகள் கோல் கம்பங்களுக்கு வெளியால் அடிக்கப்பட்டு கோல்களை இரு அணிகளும் பெறாத நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் இரு அணிகளுமே கோல்கள் பெறவேண்டும் என்ற துடிப்புடன் களத்தில் குதித்தன.

ஆட்டம் ஆரம்பமாகி பத்து நிமிடங்கள் கடந்த நிலையில் யங்கென்றீஸ் விளையாட்டுக் கழக வலது முன்னணி வீரன் ரஜீவ் கிடைத்த பந்தைப் பெற்று எதிரணி வீரர் ஒருவரை வெட்டித் தனது அணியைச் சேர்ந்த முன்னணி வீரன் ரூபனிடம் கொடுத்தார்.

ரூபன் அப்பந்தை பெற்ற கணமே எதிரணி வீரர்களின் தாக்குதல்கள் ஏற்பட அவகாசம் கொடுக்காது விரைவாக முன் நகர்த்தி கோல் கம்பத்தின் மூலைப் பகுதியை நோக்கி அடித்துத் தனது அணிக்காகக் கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

தொடர்ந்து ஆட்டம் விரைவு பெற்றதுடன் சூடும் பிடித்துக்கொண்டது. இந்நிலைமையில் யங்ஹென்றீஸ் அணியைச் சேர்ந்த இரு வீரர்கள் பிழையான முறையில் விளையாட எத்தனித்த குற்றத்திற்காக மத்தியஸ்தரினால் மஞ்சள் அட்டை காட்டி எச்சரிக்கப்பட்டனர். ஆட்டம் 1:0 என்ற நிலையில் முடிவடைந்தது.

(3-86)



யங்கென்றீஸ் அணியும் முல்லை அணியும் மோதும்போது....

# நாட்டில் 2½ லட்சம் ஓட்டோக்கள்

கொழும்பு,ஏப்.8

கடந்த ஆண்டின் இறுதிவரை வடக்கு - கிழக்கு உட்பட நாடு பூராவும் 2லட்சத்து 33 ஆயிரத்து 606 ஓட்டோக்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று போக்குவரத்து அமைச்சின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையில் ஓட்டோக்கள் அறிமுகப்படுத்தப்பட்ட 1978ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரையில் பிரதேச செயலர் பிரிவுகள் மட்டத்தில் ஓட்டோக்கள் பதிவுசெய்யப்படாதுள்ள போதும், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ள ஓட்டோக்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 21ஆயிரத்து 673 ஆகும்.

1999 முதல் 2004ஆம் ஆண்டின் இறுதி வரையில் பிரதேச ரீதியாகப் பதிவுசெய்யப்பட்டுள்ள ஓட்டோக்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 11ஆயிரத்து 933ஆகும்.

பிரதேச மட்டத்தில் ஓட்டோக்களின் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதையடுத்து 1999ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டின் இறுதி வரையில் கொழும்பு மாவட்டத்தை அண்டிய பகுதிகளிலேயே பெருமளவு ஓட்டோக்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அந்த எண்ணிக்கை 16ஆயிரத்து 712ஆகும்.

# எம்.பிக்கள் தங்கும் விடுதிகளில் அனுமதியின்றிக் குடியிருப்போர்

கொழும்பு,ஏப்.8

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் மாதிவெலயில் அமைக்கப்பட்டுள்ள தொடர் வீடுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லாதவர்களும் வசிக்கின்றனர் என்று சிங்களப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டு தோல்விகண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆனந்த ரத்நாயக்க. எம்.கே.ஏ.டீ.எஸ்குணவர்த்தன, ஏ.கிருஷ்ண பிள்ளை, ஜயதிலக்க பொடி நிலமே, எஸ்.சதாசிவம், டீ.ஏ.டவ்லிவ் விக்ரமரத்ன, டவ்லிங் எம்.ஏ. சுகத்திஸேறா, நடராசா மனோராகா ஆகியோர் இவ்வாறு தங்கியுள்ளனர்.

தற்போது அந்தத் தொடர் விடுதிகளில் 104 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வசித்துவருகின்றனர். அதேவேளை, மேலும் 06 விடுதிகளில் நாடாளுமன்றத்தை நிர்வகித்துவரும் செயற்குழுவின் உறுப்பினர்களும் மற்றும் பொலீஸ் அதிகாரிகளும் வசித்துவருகின்றனர் என்று கூறப்படுகிறது.

மேற்படி தொடர் விடுதிகளில் அனுமதியின்றி வசித்துவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக மேற்படி விடுதிகளின் நிர்வாகம் தொடர்பாக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே மேற்படி விடுதிகளில் வசித்துவரும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதியமைச்சர்களான எஸ்.எம்.சந்திரசேன, த.மு.தஸ நாயக்க ரவீந்திர சமரவீர, சுசந்த புஞ்சிநிலமே மற்றும் பாலித்த ரங்கபண்டார உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பு-5இல் அமைந்துள்ள நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழுள்ள தொடர் வீடுகளையும் பெற்றுக்கொண்டுள்ளனர் என்றும் -

அதேவேளை -

அந்த விடுதிகளில் ஒன்று 1994ஆம் ஆண்டு முதல் வடக்கு - கிழக்கின் முன்னாள் முதலமைச்சரான வரதராஜப் பெருமாளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் -

அந்த விடுதியில் இன்று வரையிலும் வேறு நபர்களே வசித்து வருகின்றனர் என்றும்- தெரிவிக்கப்பட்டுள்ளது.

*சுனாமி அனர்த்தத்தில் இறந்த*

# அரச ஊழியரின் சம்பளத்தை குடும்பத்திற்கு வழங்க முடிவு

கொழும்பு,ஏப்.8

சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்த அரச ஊழியர்களுக்கு 55 வயது பூர்த்தியாகும் காலம்வரை அவர்களது குடும்பத்தவர்களுக்கு உயிரிழந்த அரச ஊழியரின் சம்பளத்தை வழங்குவதென அரசு தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பான சுற்று நிருபத்தைத் தயாரிப்பதில் பொது நிர்வாக அமைச்சு ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்த 300 பேர் வரையிலான அரச ஊழியர்களது குடும்பத்தினருக்கு அனர்த்தம் இடம்பெற்ற நாள் முதல் அவரது 55 வயது பூர்த்தியாகும் காலம்வரை குடும்பத்தினருக்குச் சம்பளம் வழங்கப்படும். அதன் பின்னர் அவர்களுக்கு உரித்தான ஓய்வூதியம் அவர்களது குடும்பத்தினருக்கு வழங்கப்படும்.

இதுவரை காலமும் போரில் உயிரிழந்த படை வீரர்களின் குடும்பத்தினருக்கே இவ்வித கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்டுவில் பாடசாலையில் கட்டடப் பணிகள் நிறுத்தம்

மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் 2003ஆம் ஆண்டு ஜி.பி. 11 திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மாடிக் கட்டடத் தொகுதி வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த இருமாடிக் கட்டடம் முடிவுறாத நிலையில் இப்பாடசாலை மாணவர்களுக்கான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு இட நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகப் பாடசாலைச் சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

கடந்த 2000 ஆம் ஆண்டு தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் இப்பாடசாலைக் கட்டடங்கள், பாடசாலை அரங்கு என்பன முற்றாகச் சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-31)

## பன்றிகளால் பயிர் நாசம்

ஏழாலை,ஏப்.8

ஏழாலை மத்தியில் உள்ள வயல் மற்றும் தோட்டப் பிரதேசங்களில் பயிர்களைப் பன்றிகள் நாசம் செய்து வருகின்றன.

இப்பன்றிகள் பலாலி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் இருந்து இரவு வேளைகளில் வந்து பயிர்களை நாசம் செய்வதாகக் கூறப்படுகிறது.

(ஒ-45)

# கேள்வி அறிவித்தல்

## சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்

### சேதமடைந்த சாவகச்சேரி வைத்தியசாலை கட்டடங்களை உடைத்து சகல பொருள்களையும் எடுத்துச்செல்வதற்கான கேள்விகள்

கீழ்க் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை வளவுக்குள் சேதமடைந்த நிலையில் உள்ள கட்டடங்களை உடைத்து சகல பொருள்களையும் எடுத்துச்செல்வதற்கு ஒவ்வொரு விடயங்களுக்கும் தனித்தனியாகத் தேறிய பெறுமதியில் கேள்வி கோரப்படுகின்றது. உரிய கேள்விப் படிவங்களை ரூபா 250 கேள்விப் பத்திரப்பணமாகவும் (மீளளிக்கமுடியாது) அட்டவணையில் காட்டிய தொகைகளை கேள்விப் பிணையாகவும் செலுத்தி 19.04.2005 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிவரை யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விகளை 20.04.2005 புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு முன் உரிய கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விகள் உடன் திறந்து ஆராயப்படும். சித்திபெறும் கேள்விக்காரர் உடன் கேள்வித் தொகையைச் செலுத்துவதுடன் கேள்வி நிபந்தனைகளில் குறிப்பிட்ட காலத்துக்குள் கட்டடப் பொருள்கள் முழுமையாக எடுத்துச்செல்லப்பட்டு இடிபாடுகளும் அகற்றப்படல் வேண்டும். கேள்வி திறக்கப்படும்போது கேள்விகாரர் அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்துகொள்ளல் முடியும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளமுடியும்.

| கேள்வி விடய அட்டவணை | | பிணைப்பணம் |
|---|---|---|
| 01) | மாவட்ட வைத்தியசாலை சாவகச்சேரியில் உள்ள புதிய நிர்வாக தொகுதிக் கட்டடத்திலுள்ள பீம் (Beam) கம்பிகளை மட்டும் கழற்றி எடுத்துச்செல்லுதல் | 50,000.00 |
| 02) | சேதமடைந்த பழைய நிர்வாகக் கட்டடத் தொகுதியை நில மட்டம் வரை உடைத்து சகல பொருள்களையும் எடுத்துச்செல்லுதல் | 25,000.00 |
| 03) | சேதமடைந்த மாவட்ட வைத்திய அதிகாரி விடுதி, வாகன தரிப்பிடம் உட்பட சகலவற்றையும் நிலமட்டம் வரை உடைத்து சகல பொருள்களையும் எடுத்துச்செல்லுதல் | 25,000.00 |
| 04) | சமையல் அறை, சிற்றுண்டிச் சாலை, பதிவு வைத்திய அதிகாரி விடுதி ஆகிய சேதமடைந்த கட்டடங்களை நிலமட்டம் வரை உடைத்து சகல பொருள்களையும் எடுத்துச்செல்லுதல். | 25,000.00 |

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்**
பிரதி மாகாணப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.
07.04.2005

(சி-42177)(22-11-45)


06.04.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 200209642 இலிருந்து 200227723 வரை

சீட்டிழுப்பு இல. 1596

04 09 36 52 சுப்பர் எண் 07

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.64,68,350/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 64,68,350/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 29 | 5,000/- | 1,45,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 487 | 1,000/- | 4,87,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,587 | 500/- | 7,93,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 23,544 | 40/- | 8,41,760/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 22,329 | 20/- | 4,46,580/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,35,684 | 10/- | 33,56,840/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ.86,70,680/-

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 73,65,200/-

தொடர் இல. 300196097 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2005 ஏப்ரல் 09 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் சைக்கிள் அடங்கிய பரிசு முறையை வென்றெடுத்த 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

200224946-0-62
200210115-9-62
200219804-6-43
200213533-5-51
200210744-4-29

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33,செண்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



NEW BATCHES

எமது நிறுவனத்தில் கீழ்க் காணப்படும் பாடநெறிகளில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. ஆர்வமுள்ளவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

DIP. IN MS OFFICE
DIP. IN DESKTOP PUBLISHING
DIP. IN HARDWARE TECHNOLOGY

சாவகச்சேரிக் கிளையில்

DIP. IN MS OFFICE
DIP. IN VIDEO MIXING
DIP. IN DESKTOP PUBLISHING

மேலதிக விபரங்களிற்கு

STP Your Partner in IT Solution
Kantharmadam/Chavakachcheri, Jaffna. T.P:021222267
web:www.stpjaf.com



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
Music World
இன் 5% - 10 % வரையான
சிறப்புத் தள்ளுபடி விற்பனை

ஓடியோ CD'S, வீடியோ CD'S, Game CD'S மற்றும் அனைத்துவகை ஓடியோ கசெட் வகைகளுக்கும் 08.04.2005 தொடக்கம் 14.04.2005 வரை அதி விசேட கழிவில் உங்கள் தெரிவுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
இக்காலத்தில் கொள்வனவு செய்யும் ஓரிஜினல் Nakoda CD, ஸ்ரிக்கர்கள் 175 ரூபா மட்டுமே.

Music World

141C, பலாலி வீதி, தாபற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி.
T.P. : 222 - 6554

(C/42176)(29-11-45)



மாபெரும் மலிவு விற்பனை

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு
யாழ்.மக்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு
இதோ உங்களுக்கான அதிரடி விலைகுறைப்பு

| | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| சாறி | 1350 | 750 |
| சாறி | 1050 | 600 |
| சாறி | 750 | 475 |
| சல்வார் (L) | 950 | 400 |
| சல்வார் (m) | 1050 | 550 |
| சல்வார் (m) | 700 | 300 |
| சல்வார் (S) | 500 | 200 |
| எலிபன் கிற் (S) | 950 | 500 |
| சோலிக் கிற் (L) | 1300 | 700 |
| சோலிக் கிற் (m) | 1050 | 550 |
| கவுண் (m) | 950 | 450 |
| கவுண் (S) | 600 | 300 |
| ஸ்கேட் | 600 | 300 |
| ஸ்கேட் | 500 | 200 |
| ஸ்கேட் அன் பிளவுஸ் | 800 | 400 |

உடனே விரையுங்கள்! கையிருப்பு இருக்கும் வரை மட்டுமே இந்தச் சலுகை வாய்ப்பு

முகூர்த்தப் பட்டுப்புடைவைகளின் மகத்தான ஸ்தாபனம்

MAHA SILKS
மகா சில்க்ஸ்
32, 40A நவீனசந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

BEAUTY SILKS
பியூட்டி சில்க்ஸ்
69, நவீனசந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

கண் கவரும் கன்னியருக்கும் கட்டழகு ஆண்களுக்கும் அழகு சேர்க்கும் சிறந்த ஸ்தாபனம்

(சி-42173)(21-11-45)

# உடல் இறைவனின் உறைவிடம்

*காயமே கோயிலாகக் கடிமனம் அடிமை யாக வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக நேயமே நெய்யும் பாலாக நிறைய நீர் அமைய அட்டி பூசனை ஈசனார்க்கு போற்று வித் தாட்டினோமே*

ஒன்பது வாசல் கோட்டை என உடல் உரைக் கப்படுகின்றது. கோட்டையாக இருக்கும் எமது உடம்பு, நோய், முதுமை என்பனவற்றால் ஆட் டம் கண்டுவிடுகின்றது. எனினும், உடம்மை வளர்த்து உறுதியாக்குவதில் நாட்டம் கொண் டால் வாட்டமின்றி வலுவுடன் விளங்கி தேட் டம் பெறலாம்.

ஐம்பூதங்களிலான அழிந்துபோகக் கூடிய இந்த உடம்பை உயிர் இருக்கும்வரை ஆரோக் கியத்தோடும் உறுதியோடும் இயங்கும்படி பாது காக்கும் பயிற்சி காயசித்தி எனப்படுகின்றது. 'பொல்லாப் புழுமலி நோய் புன் குரம்பை' என இதனை நல்வழி நவில்கின்றது. எனவே, மெய் பொய்யாகி விடுமுன் உய்தி பெறுவதற்கு செய்யவேண்டிய செயல்கள் பலவுண்டு. ஆன்மா கடைத் தேறுவதற்கான செயல்களை இந்த உடம்பில் உயிர் இருக்கும்போதே செய்ய வேண்டும்.

உடம்பு நிலைப்பதற்கும் ஒரு கால எல்லை உளது. மனிதனுடைய சராசரி ஆயுள் 65 அகவை எனப்படுகின்றது. ஆனால், 135 ஆண்டு உயிர் வாழ்ந்தவரும் உண்டு. இது அபூர்வம். வெறுமனே சதைப்பிண்டம் என எண்ணி விடக்கூடாது. உயரிய காரியங்களைச் செய் யும் ஒப்பற்ற ஆற்றல் அதனுள் முடங்கியிருக் கின்றது. மேலும் உத்தமனான இறைவன் அத



னுள் உறைவிடம் கொண்டுள்ளான். எனவே, இழிவானது என முன்னாள் கருதிய இந்த உடம்பை நான் நன்றாகப் பாதுகாத்து வரு கின்றேன் என்கின்றார் திருமூலர்.

காயம் கடவுள் வாழும் இல்லம் என்று கண்டவர்கள் அருளாளர்கள். ஊன் உடம்பு ஆலயம் என்று அதன் மூலம் ஒப்பற்ற சாத னைகளை நிகழ்த்தியவர்கள். எனவே, அரிதின் முயன்று பெற்ற எமது உடம்பினை உரிய முறையில் பாதுகாத்து பெரிய காரியங்களைச் சரிவரச் செய்யவேண்டும். நல்லதோர் வீணை நமது உடல். இதனை நலங்கெடப் புளுதியில் எறிவதோ என ஆதங்கப்படுகின்றார் பாரதியார். எனவே, எமது உடம்பை நேசித்துப் பூஜிக்க வேண்டும்.

உடம்பின் பண்பும் வலிமையும் கெட்டுப் போனால் அதனைக் கருவியாகக் கொண்டு கடைத்தேறவேண்டிய ஆன்மா அந்த வாய்ப்பை

ஞானக்கதிர்

இழந்துவிடுகின்றது. எனவே, உடம்பை உதா சீனம் செய்யாமல் உரம்பெறச் செய்யவேண் டும் இதனை வலியுறுத்துகின்றது திருமந்திரம்.

உடம்பார் அழியில்
உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம்
சேரவும் மாட்டார்
உடம்மை வளர்க்கும்
உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன்
உயிர்வளர்த்தேன்.

**- பரமேஸ்வரி சிவராமலிங்கம்.**

## ஆன்மீக நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.8

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக் கள யாழ். மாவட்ட அலுவலகம் நடத்தும் ஆன் மக நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றி லில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக் கள உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், சைவப் புலவர் ப.சாந்தகுமார் 'மெய்ஞ்ஞானம் காட்டும் விஞ்ஞானம்' என்னும் பொருளில் சொற் பொழிவு நிகழ்த்துவார். (ஒ-204-203)

## தேரடிச் சித்தர் குருபூசை

யாழ்ப்பாணம்,ஏப்.8

நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமி களின் 90ஆம் ஆண்டு குருபூசை நிகழ்வு நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

நல்லூர் தேரடி அருகே உள்ள சுவாமி களின் நினைவாலய மடத்தில் காலை 8மணி முதல் குருபூசை நிகழ்வுகள் இடம்பெறவுள் ளன. இதில் தேவார திருவாசகப் பாராயணம், நற்சிந்தனை மற்றும் பூசை ஆகியன நடை பெறும். நண்பகல் அன்னதானம் இடம்பெறும். (ஒ)

# 'பீப்பில்ஸ் லீஸிங்' நிறுவனம் நாளை யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.8

மக்கள் வங்கியின் நிறுவனமான 'பீப்பில்ஸ் லீஸிங்' நிறுவனத்தின் கிளை, யாழ்ப்பாணம், கன்னாதிட்டி வீதியில் 82ஆம் இலக்கக் கட் டடத்தில் நாளை சனிக்கிழமை திறந்து வைக் கப்படுகிறது. மக்கள் வங்கியின் பதில் பொது முகாமையாளர் ரி.கருணாசேன கிளை அலு வலகத்தைத் திறந்துவைப்பார்.

இந்நிகழ்வில் 'அசோக் லேலண்ட்' நிறுவ னத்தின் பொதுமுகாமையாளர் உமேஷ் கௌதம், 'பீப்பில்ஸ் லீஸிங்' நிறுவன அதிகாரிகள், மக் கள் வங்கியின் உயர் அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

'பீப்பிள்ஸ் லீஸிங்' நிறுவனம் இங்கு தொடங்கு வதன் மூலம் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் மக் கள் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு மட் டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த வாகனங்களுக் கான தவணைமுறை வசதி மற்றும் வாடகைக் கொள்வனவு வசதி என்பன மக்கள் வங்கியின் வாடிக்கையாளர் அல்லாதோர்களுக்கும் விரிவு படுத்தப்படவுள்ளது என்றும்- இந்தச் சந்தர்ப் பத்தை அனைவரும் பயன்படுத்திக்கொள்ளு மாறும்-

மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகா மையாளர் ரி.கே.ஆனந்தராஜா தெரிவித்தார். (ஒ)

# மருதடி அறநெறிப்பாடசாலை ஆண்டு விழா

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அற நெறிப் பாடசாலையின் நான்காவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மண்டபத்தில் செல்வி ஜெயந்தினி ஆறுமுக ராசா தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறும்.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி உபஅதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் இவ்விழாவில் முதன்மை விருந்தினராகவும் மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலய அதி பர் அருட்பிரகாசம்பிள்ளை, மானிப்பாய் மெமோறி யல் நவோதயா கல்லூரி அதிபர் திருமதி வேணுகா சண்முகரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தி னர்களாகவும் கலந்துகொள்கிறார்கள்.

அறநெறிப்பாடசாலை நடத்திய போட்டி களில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசு கள் வழங்கல், அறிநெறிப் பாடசாலை ஆசி ரியர்களைக் கௌரவித்தல், மாணவர்களின் பேச்சு, பாட்டு, இன்னிசை, பண்ணிசை போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். (ஒ-152)

## சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு

# 7 ஆயிரம் நிரந்தர வீடுகள் வடக்கு–கிழக்கில் நிர்மாணம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாண மக்களுக்கு 7 ஆயிரம் நிரந்தர வீடு களை அமைத்துக்கொடுக்க வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜா நட வடிக்கை மேற்கொண்டுள்ளார்.

4ஆயிரம் வீடுகள் வீட்டுரிமையாளர்களால் மீளமைக்கப்பட உதவி வழங்கப்படவுள்ளது. அம்பாறை, மன்னார் மாவட்டங்களில் தலா 300 வீடுகள், வவுனியாவில் 400 வீடுகள், முல் லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு, திரு கோணமலை ஆகிய மாவட்டங்களில் தலா 500 வீடுகள், யாழ்ப்பாணத்தில் ஆயிரம் வீடுகள் என்ற அடிப்படையில் இவை நிர்மாணிக்கப்பட வுள்ளன.

மேலும் 3ஆயிரம் வீடுகள் அம்பாறை, மட்டக் களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங் களில் தலா 1000 வீடுகள் வீதம் மாவட்டச் செயலாளர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் மீள்நிர்மாணம் செய்யப்பட உள்ளன. 4 வருட காலத்திட்டத்தில் இது நடைமுறைப்படுத்தப்படும். உலக வங்கி 75 மில்லியன் அமெரிக்க டொலர் களையும் இலங்கை அரசு 2 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் இத்திட்டத்துக்கு வழங்கவுள்ளன. (ஒ-84)

## தேசியக் கல்வி நிறுவகம் நடத்திய

# கல்வி முதுமாணிப் பட்டப்பரீட்சை; 18 தமிழ்மூல மாணவர்கள் சித்தி

காரைதீவு,ஏப்.8

தேசியக் கல்வி நிறுவகம் 2003ஆம் ஆண்டு நடத்திய கல்வி முதுமாணி பட்டப் பரீட்சை யில் 18 தமிழ்மொழி மூல மாணவர்கள் சித்தி யடைந்துள்ளனர்.

அவர்களுக்கான பெறுபேற்று அறிவித்தல் களை நேற்றுமுன்தினம் தேசியக் கல்வி நிறுவக பரீட்சைகள் பிரிவுப் பணிப்பாளர் என். தர்மகீர்த்தி அனுப்பிவைத்துள்ளார்.

சுமார் 250 சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூல மாணவர்கள் தோற்றிய இப்பரீட்சையில் 18 தமிழ்மொழிமூல மாணவர் சித்தியடைந் துள்ளனர்.

சித்தியடைந்த தமிழ்மொழி மூல மாணவர் விவரம் வருமாறு:-

கே.ரவிதாஸ் (திருகோணமலை), இ.மகேசன் (மட்டக்களப்பு), வி.ரி.சகாதேவராஜா (காரை தீவு), வி.பரமேஸ்வரன் (தம்பிலுவில்), எஸ். எச்.எம்.எம்.ஏ.காதர் (கல்முனை), பி.நளாயினி (கொழும்பு), எஸ்.செல்வமலர் (திருமலை), ரி.தர்மபாலன் (வாழைச்சேனை), ரி.புஸ்பராஜா (தம்பிலுவில்), ஆர்.சந்திரிக்கா (கண்டி), பி. ஜெயக்குமார் (வவுனியா), ரி.கணேசரெத்தினம் (அக்கரைப்பற்று), ஏ.முஸ்லிமீன் (கதுருவல), ஏ.ரி.ஷேவியர் (வவுனியா), எஸ்.எஸ்.எம்.நு. மான் (கல்முனை), எஸ்.லோகநாதன் (ஆலை யடிவேம்பு), எஸ்.தண்டாயுதபாணி (திருமலை), கே.தவராஜா (மட்டக்களப்பு). (ஒ-84)

# செல்லப்பா சுவாமிகள்



அள்ளி உண்டிட வாரீர் அனைவரும்
நள்ளிரா அர்த்த சாமத்துச் சென்று
துள்ளித் தொந்தோம் ஆடிய எங்கள்
வள்ளல் செல்லப்ப சாமியே வந்து

அற்ப கல்வி கற்ற அதனால்
சொற்ப காலம் உத்தி யோகத்தை
முற்றாய்த் துறந்து முருகனைக் கலந்து
சிற்பரன் சிந்தையுள் திழைபவ ரானார்

தேரடிப் படியில் தினமும் இருப்பார்
ஆரடா என்றே ஆரையும் அதட்டுவார்
நேரடி யாக நிலைத்த ஒருவர்தான்
பேரருள் பெற்ற யோகர் சுவாமியே

மருவு ஞானம் வளர்ந்து பெருகிட
ஒருவர் உள்ளத் தொருவர் புகுந்திட
ஒருவனாம் சிவனென்ன உலகம் உணர்ந்திட
இருவரும் செய்த அற்புதம் காட்டுமே

தம்பதம் சார்ந்த யோக சுவாமிதம்
மைம்மதம் மாற்றி வாழ்ந்து மேலாம்
செம்மதம் ஆகிய சிவபதம் காட்டி
எம்மத உண்மையை எடுத்துரைத் தவரிவரே.

**- பண்டிதர் சி.கா.சேந்தன்**

**நாளை சனிக்கிழமை செல்லப்பா சுவாமிகளின் குருபூசை தினமாகும்.**

# திருத்தந்தையின்....

(11 பக்கத் தொடர்ச்சி)

**1994, ஏப்.28:** குளியலறையில் வழுக்கி விழுந்தார். வலது தொடையில் எலும்பு முறிந்தது.

**1994,ஒக்.17:** மிக அதிக எண்ணிக்கையில் விற்பனையான நூலின் ஆசிரியர் என்ற பெருமை யைப் பெற்றார். நூலின் பெயர் Crosseing the threshold of faith.

**1995,மே.17:** 75 ஆவது பிறந்தநாள் நெருங்குவதால் ஓய்வு பெறலாம் என்று கூறப்பட்ட யோசனையை நிராகரித்து இறைவன் விரும்பும் வரையில் பணிசெய்வேன் என்று அறிவித்தார்.

**1995,டிசெ.25** காய்ச்சல் காரணமாக கிறிஸ்மஸ் திருப்பலியில் பங்கேற்க முடியாமல் போனார்.

**1997,செப்.9** உடல் நலக்குறைவால் கொல்கொத்தாவில் நடந்த அன்னை திரேசாவின் இறுதிச் சடங்கில் பங்கேற்க முடியாமல் போனது.

**1997,ஒக்.31** யூதர்கள் படுகொலையைத் தடுத்து நிறுத்தத் தவறிவிட்டனர் கிறிஸ்துவர்கள் என்று பகிரங்கமாக வருத்தம் தெரிவித்தார்.

**2000,ஜன.1** புனித பீற்றர் பேராலயத்தின் புனிதக் கதவுகளைத் திறந்துவைத்தார்.

**2000,மார்ச்13:** யூதர்கள், பெண்கள், சிறுபான்மையினருக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுமை களுக்காக மன்னிப்புக் கோரினார்.

**2000,மார்ச்20-26:** இஸ்ரேல், ஜெருசலேம் பயணம், இஸ்ரேலியர்களுக்கும் பலஸ்தீனர்க ளுக்கும் சமாதானம் ஏற்படவேண்டும் என்று பிரார்த்தனை செய்தார்.

**2001,மே:8** சிரியா பயணத்தை முடித்துக் கொண்டார். மசூதிக்குச் சென்ற முதல் பாப்பரசர் என்ற பெருமையைப் பெற்றார்.

**2001,நவ.22:** மதகுருமார்களால் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டவர்களுக்காக மன்னிப் புக் கோரினார்.

**2002,ஏப்:** குழந்தைகளை மதகுருமார்கள் பாலியல் ரீதியாகப் பயன்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டையடுத்து அமெரிக்க கர்த்தினால்களை வத்திக்கானுக்கு வரவழைத்தார்.

**2002,ஒக்.:** தனது தாய்நாடான போலந்துக்குக் கடைசியாகச் சென்றார்.

**2002,ஒக்.:** ஜெபமாலை வைத்து வழிபடும் முறையை மாற்றினார்.

**2003,ஒக்.மார்ச்:** ஈராக்கில் அமெரிக்கப் படைகள் நுழைவதைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

**2003,ஒக்.19** அன்னை திரேசாவை 3 லட்சம் பேர் திரண்ட கூட்டத்தில் புனிதப்படுத்தினார்.

**2004:டிசெ.18:** ஓரினத் திருமணத்தைக் கண்டித்தார்.

**2005,பெப்.1:** முச்சுத் திணறலுக்காக ரோம் நகர மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப் பட்டு 10 நாள்கள் மருத்துவமனையிலேயே இருந்தார்.

**2005,பெப்.24:** சுவாசிப்பதில் ஏற்படும் சிரமம் நீங்க முச்சுக் குழலைத் திறக்க அறுவைச் சிகிச்சை செய்துகொண்டார்.

**2005,மார்ச்13:** தொண்டை அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு பக்தர்களிடம் பேசினார், வத்திக் கானுக்குத் திரும்பினார்.

**2005,மார்ச்20:** பாப்பரசரின் வரலாற்றில் இருந்திராத வகையில் புனித வார நிகழ்சிகள் பாப்பரசர் பங்கேற்காமல் நடைபெற்றன.

**2005,மார்ச்24:** கடவுளிடம் தன்னை ஒப்புக் கொடுத்தார்.

**2005,மார்ச்27:** ஈஸ்ரர் ஞாயிறன்று ஜன்னல் வழியாக பக்தர்களுக்கு ஆசி வழங்கினார்.

**2005,மார்ச்30:** உணவை திரவ வடிவில் அனுப்ப மூக்கில் குழாய் சொருகப்பட்டது.

**2005,மார்ச்31:** மாரடைப்பு ஏற்பட்டது, காய்ச்சல் அதிகரித்தது, சிறுநீரகப் பாதையில் நோய்த தொற்று ஏற்பட்டது. மருத்துவமனைக்குச் செல்ல மறுத்துவிட்டார்.

**2005,ஏப்.3** ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.37 மணிக்கு உயிர் பிரிந்தது. ★

**DEGREE COLLEGE OF STUDIES**

342, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி அருகில், நியூட்டன், யாழ்நகர்.

A/L 2007 கலைப் பிரிவு

| | |
|---|---|
| தமிழ்: | M.சுரேஸ் |
| இ.நாக.: | S.சுரேஸ் |
| புவியியல்: | N.S.சங்கர் |
| அளவையல்: | P.கமல் |
| நாடகம்: | I.சத்தியா |
| அரசறிவியல: | S.இளங்கோ |

புதிய பிரிவுகள் ஆரம்பம்
09-04-2005 சனி காலை 9.00 மணி

G.A.Q., B.A., A/L 2006 வகுப்புகள் நடைபெறுகின்றன.


## மூன்றாண்டு கால நடுத்தரச் செயற்றிட்டம்

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் மூன்றாண்டு கால (2006 - 2008) நடுத்தரச் செயற்றிட்டம் ஒன்று நிவாரணம் புனர்வாழ்வு மறறும் நல்லிணக்க அமைச்சினால் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஒவ்வொரு பிரதேசத்திலும் அடுத்த மூன்று வருட காலப்பகுதியில் செயற்படுத்தக்கூடிய நடுத்தரத் திட்டங்களின் முன்மொழிவுகளை இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு யாழ்.செயலக திட்டமிடல் பணிப்பாளர் க.கேதீஸ்வரன் சகல பிரதேச செயலர்களுக்கும் அறிவித்துள்ளார். (8-117)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.8

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆசுப்பிரமணியசர்மா தலைமை வகிப்பார். (8-202-185-139)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

**டாக்டர் ஆறுமுகம் செல்வரத்தினம்**

(மனோ வைத்திய நிபுணர்)

தோற்றம் 16.05.1942 — மறைவு 20.03.2004

திதி: 08.04.2005

வாழுகின்ற போது உனை நாடி
வந்தோருக்கு நற்பாதை காட்டியதால் தேடி
வைத்த புண்ணியம் நீங்கள் விண்ணுலகம்
சென்றாலும் நமக்கு நல் ஆசி கூறிநல்வழி
காட்டியே நிற்கின்றது தங்களது ஆத்ம
சாந்திக்குப் பிரார்த்திக்கும்:

மனைவி,
பிள்ளைகள்.

91, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(43886)(39-11-14-26)


## புதுவருடச் சிறப்புத் தள்ளுபடி விற்பனை!!!

செய்மதி தொலைக்காட்சித்துறையில் இலங்கையில் ஆயிரக்கணக்கான வாழிக்கையாளர்களை வென்று எடுத்துள்ள Sats - Tech நிறுவனம் தனது வாழிக்கையாளர்களுக்குப் புத்தாண்டுச் சிறப்பு விலையில் செய்மதித் தொலைக்காட்சி உபகரணங்களை வழங்கி வருகின்றது.

'Ku' band DISH சிஸ்டம் Rs * 12,500 /= மட்டுமே
8' C' band DISH சிஸ்டம் Rs * 19,999 /= மட்டுமே
8' C' band & Ku band சிஸ்டம் Rs * 22,000 /= மட்டுமே

மற்றும் அனைத்துக் கேபிள் TV இற்குரிய உபகரணங்களும் மிகக் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

- ஒரு வருட உத்தரவாதம்
- விற்பனைக்குப் பிந்திய சேவை
- Free Channel updating
- Free Software updating
- இலவசத் தொழில்நுட்ப ஆலோசனைகள்
- தெளிவான காட்சி
- துல்லியமான ஒலி

சித்திரை 14வரை அல்லது கைமிருப்பு முடியும் வரை மட்டுமே!

**SATS - TECH ENGINEER'S**
(National Video Center)
182, K.K.S. Road, Kokuvil
(Near Kulapitty Church), Jaffna.
Phone: (021) 222 5908, 0777 710785.

(சி41069)(26-11-14)


## முதலாவது ஆண்டு நிறைவு



**குலசிங்கம் காமாட்சிப்பிள்ளை** [கமலேஸ்வரி] திதி: 2005-01-15

**திருவருள் குலசிங்கம்** [பொன்னுக்கண்டு] திதி: 2005-04-08

ஆறேழு நான்குடனாம் ஆண்டுகள் அனுபவித்த
அவ்வினிய நாள்களினை மறத்தல் எளிதாமோ
அதனாலே அப்பா!
அம்மா உடன் சென்றீர்; போற்றுகின்றோம்
ஆனைமுகன் தாள்களிலே இருவீரும் இன்புறுக.

விலாசம்:
யானைக்குட்டி வளவு.
தெல்லிப்பழை.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.

(சி 42119)(39-11-14-26)


## சுபமான தருணத்தில்...

நாளை முதல்

## யாழ்ப்பாணத்தில்

மக்கள் மனங்களை வென்ற
பீபல்ஸ் லீஸிங் கம்பனி
பரந்த விஸ்தரிக்கப்பட்ட கிளையாக
மீண்டும் உதயமாகிறது



PLC

பீபல்ஸ் லீஸிங் கம்பனி லிமிட்டெட்
மக்கள் வங்கிக்கு முழு உரித்துடைய நிறுவனம்
இல.82 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்

தலைமையகம்: 67, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 2. தொ.பேசி 248100
கிளைகள் : கண்டி, இரத்தினபுரி, குருணாகலை, மாத்தறை, பதுளை, அநுராதபுரம், பொலன்னறுவை, காலி, நீர்கொழும்பு, அம்பலந்தோட்டை, களுத்துறை, திருகோணமலை

## திருமணக் கார்

குளிரூட்டப்பட்ட ஜப்பான் கார்
திருமணத் தேவைகளுக்கு
வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0777283795
(C/42182)

## தினசரி வான் சேவை

யாழ் - கொழும்பு
வான் சேவை
தனி நாளுக்கு 10000/-
(Hair) 11,000/- (வரி உட்பட)
தொடர்பு:- கிரி, வால்வெட்டி. V.V.T
T.P: 0773039658, 0777111662
(43957)

## நியூ றோயல் அக்கடமி

சங்கத்தானை

A/L 2007 புதிய பிரிவு

TAM. / H.C. / HIN. } I.கமலநாதன்

| | | |
|---|---|---|
| HIS. | - | சுஜிகரன் |
| GEO. | - | கிரிதரன் |
| ECO. | - | மதி |
| ACC. | - | செந்தூரன் |
| B.SL. | - | பிரபல ஆசிரியர் |
| P.SC. | - | பொன்.சந்துரு |
| ENG. | - | BRITTO |
| LOG. | - | பாபுஜி |

ஆரம்பம்: 09.04.2005 சனி: காலை 9.00 மணி
- இயக்குநர்.
(43953)(33-34-17-16)

## நாகலிங்கம் சினிமா

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு தாவடிமைந்தன் ஜெய்ஆகாஷ், பிரணதி, நாசர், தாமு, வையாபுரி நடித்த



குருதேவர்
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)

## நிரஞ்சனாஸ் சங்கானை

விஜய், நமீதா, ரவிகிருஷ்ணா நடிப்பில்
சுக்ரன்
காட்சிநேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)

## ராஜா யாழ்ப்பாணம்

கருணாஸ், ரீச்சா, தலைவாசல் விஜய் நடித்த
கையோடு கை
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

பிரசாந், வடிவேல், மும்தாஜ் நடித்த
லண்டன்
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பி.நே.)

## மனோகரா யாழ்ப்பாணம்

பாரதசுதன, காவேரி, மாஸ்டர் அஸ்வின் நடித்த
கண்ணாடி பூக்கள்
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30
9.30 இற்கு மட்டும் தனுஷ், ஸ்ரீதேவி, கருணாஸ் நடித்த
தேவதையைக் கண்டேன்

## பொருளியற் கல்லூரி

(யாழ். கிளை நிறுவனம்)
கே.கே.எஸ். றோட், இணுவில்.

A/L 2007
பிரிவு 2
கலை, வர்த்தகப் பிரிவுகள்
வர்த்தகப் பிரிவு
09.04.2005 - சனி 3.00 மணி
கலைப் பிரிவு
10.04.2005 - ஞாயிறு 8.00 மணி
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
குறிப்பு:-
பிரிவு I வழமையான நேரப்படி நடைபெறும்.

## BARATHY

சித்தன்கேணி
மாணவர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்
மீண்டும் சித்தன்கேணி மண்ணில்
பொருளியல்
திரு.மகேந்திரன்
A/L 2006, 2007
புதிய பிரிவுகள் ஆரம்பம்:
11.04.2005 திங்கள் 3.00 மணி
குறிப்பு:-
இப்பிரதேசத்தின் பிரபல்யம் பெற்ற பொருளியல் ஆசானுடைய வகுப்பு நீண்டகால இடைவெளிக்குப் பின் மீண்டும் ஆரம்பிக்கின்றதையிட்டு எமது நிறுவனத்தில் ஆரம்பிக்கின்றதையிட்டு மாணவர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
(43977)(33-34-17)

## IIS

கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
16-04-2005 / 18-04-2005 } பகல் 10.00 மணி
அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான வார, வார இறுதிப் பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன என்பதை அறியத்தருகிறோம்.
இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.
(C/42180)(33-16-17-34)


## நியமனம்

குருநகர், ஏப்.8
யாழ். கட்டடங்கள் திணைக்களத்தின் பிரதம பொறியியலாளராக செல்வி குலவீரசிங்கம் வசந்து கடந்த முதலாம் திகதி தொடக்கம் தமது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (எ-51)


## பொருளியற் கல்லூரி

(பெருமாள் கோவில் அருகில்)
நாவலர் றோட் - யாழ்ப்பாணம்.

A/L 2007
கலை - வர்த்தகப் பிரிவுகள்
பிரிவு 2 நாளை ஆரம்பம் 09.04.2005 சனிக்கிழமை எமது தனித்துவம் பெற்ற ஆசிரியர் குழுவினால்

| | | |
|---|---|---|
| பொருளியல் | - | வரதராஜன் |
| கணக்கீடு | - | முகுந்தன் |
| வணிகக்கல்வி | - | முரளி |
| தமிழ் | - | மீரா |
| இந்துநாகரிகம் | - | ஜோதீஸ்வரன் |
| அளவையியல் | - | R.P.சர்மா |
| புவியியல் | - | குமரன் |
| கிறிஸ்தவம் | - | வசந்தன் |
| நாடகஅரங். | - | சுகந்தன் |
| இந்துசமயம் | - | தரன் |
| அரசியல் | - | றஜீவன் |
| வரலாறு | - | பத்மன் |
| ஆங்கிலம் | - | நிஷாந்தன் |

அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
குறிப்பு:- சகல பாடங்களும் ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.
(43979)(33-34-17-16)


## மரண அறிவித்தல்கள்

### சுப்பையா பொன்னுத்துரை

[உரிமையாளர், பொன்மலர் ஸ்ரோர்ஸ், அளவை கொன்வெக்சனறி வேக்ஸ் (Sun Brand) அளவெட்டி]



அளவெட்டி வடக்கு, பெத்தவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா பொன்னுத்துரை அவர்கள் நேற்றுமுன்தினம் (06.04.2005) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2005) வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேணிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்டத்தரிப்பு வீதி,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.
T.P. No.: 0602 - 212558
0773 - 024376

தகவல்:
பொ. சகுந்தலாதேவி
(மனைவி).
(43971)(33-16-17-34)

### முத்து கணேசு

*(உரிமையாளர், கணேசன் ரேடிங்கம்பனி, கோவில் வாசல், இணுவில்)*



மஞ்சத்தடி இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்து கணேசு அவர்கள் 05.04.2005 அன்று காலமானார்.

அன்னார் அமரர்கள் முத்து வள்ளியம்மை தம்பதிகளின் புதல்வனும் திருமதி நாகரத்தினம் (கனடா) அவர்களது அன்புச் சகோதரரும் ஜெயமலரின் அன்புக் கணவரும் அமிர்தா (லண்டன்), உமாசுதன் (கொழும்பு), தர்மிகா (மாணவி, நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்), பிரார்த்தனா, இன்பசுதன், எழிலரசி ஆகியோரது அன்புத் தந்தையும் விஜயரட்ணம், செல்வராசா (பேபி), அமரர் அரியரட்ணம் (கற்றன்), ஜோகேஸ்வரன் (சுவிஸ்), திருமதி இந்திராதேவி, ஸ்ரீகாந்தன், ஸ்ரீசண்முகராசா ஆகியோரது மைத்துனரும் சிவகரன் (லண்டன்), முரளதரன் (பிரான்ஸ்) ஆகியோரது அன்பு மாமனாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2005) வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சத்தடி,
இணுவில்.

தகவல்:
க.உமாசுதன்
(மகன்).
(43973)(33-16-17-34-35)

## 5ஆவது பிறந்த தின வாழ்த்துக்கள்





கொக்குவில் மேற்கு, பிடாரி கோவிலடியைச் சேர்ந்த வலன்டன் கிரிஜா தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஷாருஜன் தனது 5ஆவது பிறந்தநாளை இன்று (08.04.2005) வெள்ளிக் கிழமை டென்மார்க்கில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். ஷாருஜனை இலங்கையில் வசிக்கும் அம்மம்மா, குட்டி அம்மம்மா, அப்பப்பா, ராஜன், அண்ணாமாமர்கள், அக்கா மார்கள், உற்றார், உறவினர்கள் அனைவரும் அடைக்கல நாயகி அருள் பெற்று, பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

கொக்குவில் மேற்கு,
பிடாரி கோயிலடி.

தகவல்
அம்மம்மா (சோதி)
(43972) (56)


## கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை

GOLDEN EAGLE SECURITY

அறிவித்தல்

எங்கள் காரியாலயம் 04.04.2005இல் இருந்து கீழே குறிப்பிட்ட விலாசத்தில் இயங்குகின்றது என்பதனை அறியத்தருகின்றோம்.

இல. 807, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(C/42178)(33-35-34-17-16)

## ஈசன்

கல்வி நிலையம்
A/L 2007
புதிய பிரிவுகள் ஆரம்பம்
கலை, வர்த்தக, கணித, உயிரியல் வகுப்புகள்
காலம்: 10.04.2005
Sun:- 7.00 a.m.
(43962)

## ஈசன்

கல்வி நிலையம்
இரசாயனவியல்
A/L 2006
ORGANIC
Wed., Fri.:
4.30-6.30 p.m.
A/L 2007
மீட்டல்களின் ஆவர்த்தனப் போக்கு
Sat., Sun.:
4.30 - 6.30 p.m.
திருவாகீசன்
ஆரம்பம்: 09.04.2005
4.30 p.m. (S.L.T)
(43963)


## கண்ணீர் அஞ்சலி



எமது அன்பான வர்த்தக நண்பன்

### சுப்பையா பொன்னுத்துரை

(உரிமையாளர், பொன்மலர் ஸ்ரோர்ஸ் அளவெட்டி)

அவர்கள் 06.04.2005 புதன்கிழமை காலமாகிய செய்தி அறிந்து மிகவும் துயருறுகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனிடம் அன்புடன் வேண்டுகின்றோம்.

உரிமையாளர், ஊழியர்கள்,
பாலகணேசன் களஞ்சியம்,
இல. 225, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(43976)(33-34-17-16)

## மரண அறிவித்தல்

### செல்லப்பா முத்தையா



கச்சாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா முத்தையா அவர்கள் நேற்று (07.04.2005) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் பூரணத்தின் அன்புக் கணவரும் விக்கினேஸ்வரனின் (யாழ் பல்கலைக் கழக முழுநேரப் பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறி ஆசிரியர்) அன்புப் பேரனும் வளர்ப்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (08.04.2005) வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

தகவல்:
பா.விக்கினேஸ்வரன்
(ஆசிரியர்)
(43975)(33-16-17-34)

# மருத்துவ தொழில்நுட்பவியலாளர் வெற்றிடம் ஒய்வுபெற்றவர்களைக்கொண்டு நிரப்பப்படும்

யாழ்ப்பாணம்,ஏப்.8

குடாநாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் நிலவும் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் வெற்றிடங்களை, ஓய்வுபெற்றவர்களைக் கொண்டு நிரப்ப சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

குடாநாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் கதிர் இயக்குநர், ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், மருந்தாளர் ஆகிய பதவிகளுக்கு பல வெற்றிடங்கள் உள்ளன. இந்த வெற்றிடங்களை இத்துறையில் இருந்து ஓய்வு பெற்றவர்களில் இருந்து நிரப்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இப்பதவிகளில் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் பெறவிரும்புபவர்களை எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்பாக விண்ணப்பங்களை கையளிக்குமாறு கோருகின்றேன்- என்று அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்வரும் திங்கட்கிழமை சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள் யாழ்ப்பாணம் வருகின்றனர் என்றும்-

அதற்கு முன் விண்ணப்பங்களை கையளித்தால் உடன் நியமனம் வழங்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-3)

## முதற் தடவையாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெஜினியனில், சமூக விஞ்ஞானப் பேராசிரியர் டாக்டர் இர்.ஜோர்ஜ் பெர்க்ஸ்ஸை சந்தித்துப் பேசினர்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இலங்கையின் வடக்கு- கிழக்கு மக்களுக்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரியப்படுத்துமாறு அவர் புலிகள் குழுவிடம் தெரிவித்தார். ஆழிப்பேரலை பாதித்த நாடுகளுக்கு கடந்த பெப்ரவரியில் அவர் விஜயம் செய்திருந்தார். அதற்கு மேலாக அனர்த்தத்திற்குப் பின்னரான இலங்கையின் முகாமைத்துவம் குறித்தும் அவர் அக்கறை காட்டினார். உதவி வழங்கும் நாடுகளின் கருத்துக்களையும் அவற்றின் விசனத்தையும் அவர் பிரதிபலித்தார். இலங்கை அரசும், புலிகளும் இணைந்து நிவாரணத்துக்கான பொதுக் கட்டமைப்பை உடனடியாக உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

(எ-க)

## அரச ஊடக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர். நேற்றுக்காலை இந்தச்சந்திப்பு இடம்பெற இருந்தது. இதனால் அரச ஊடகங்களின் தலைவர்களும் அதிகாரிகளும் எந்தக் கூட்டத்துக்கு செல்வது என்று குழம்பிப்போயிருந்தனர். எனினும் ஜனாதிபதியின் இறுதிநேர அறிவிப்பை அடுத்து இந்தச் சந்திப்புக்கள் நேற்று ரத்துச் செய்யப்பட்டன.

இதேவேளை அரச ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் அமைச்சர்கள் இருவருக்கும் இடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகளையடுத்து நிதியமைச்சர் சரத் அமுனுகமவிற்கும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவிற்கு மிடையே நேற்றுக்காலை ஊடகத்துறை அமைச்சரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் முக்கியமான சந்திப் பொன்று இடம்பெற்றுள்ளது.

(எ-க)


BRIGHTMAN
பிறவுன் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
புதிய பிரிவு
3 மாத காலத்தில் சரளமாக உரையாட
சிங்களம்
By.லீலாக்கிருஷ்ணன்
ஆரம்பம்: 09.04.2005
Sat. 3.30 p.m.
(43938)


## முல்லை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி.சத்தியா (7ஏ,2சி), த.தீபா (6ஏ,2சி, எஸ்) பெறுபேற்றையும் பெற்றுள் ளனர்.

முற்கொண்டு கிடைத்த முடிவுகளின் அடிப்படையில் முல்லைத்தீவு, துணுக்காய் வலயங்களைச் சேர்ந்த குறிப்பிட்ட சில பாடசாலைகளின் பெறுபேறு விவரம் வருமாறு:-

**முல்லை வலயம்**

**கொக்கிளாய் அ.த.க**

த.பார்த்தீபன் (7ஏ,பி,சி).

**கலைமகள் வித்தியாலயம்**

ச.உமாகாந்த் (6ஏ,3பி,சி)

**பாரதி வித்தியாலயம்**

க.நந்தினி (8ஏ,2பி).

**துணுக்காய் வலயம்**

**பாலிநகர் ம.வி.**

வ.ரர்திகா (7ஏ,பி,எஸ்).

(எ)

## சிறுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பில் நீதிவான் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ சிறுவர் இல்லங்களில் தங்கியிருந்து பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலை, தரம் ஆகிய விவரங்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

★ சகல சிறுவர் இல்லங்களும் சமூக சேவைத் திணைக்களத்திலும், சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்திலும் பதிவு செய்யப்பட வேண்டும்.

★ சிறுவர் இல்லங்களில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு மூலம் நீதிமன்றத்தை அணுகவேண்டும்.

★ வீதிகளில் பிச்சை எடுத்துத் திரியும் சிறுவர்களை மாவட்டச் சிறுவர் பாதுகாப்புக் குழுவினர் பிடித்து நீதிமன்றத்தில் முற்படுத்தவேண்டும். பின்னர் அவர்களைச் சிறுவர் இல்லங்களில் சேர்க்க நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கும்.

இந்தச் சந்திப்பின் தொடர்ச்சியாக அடுத்த சந்திப்பு அடுத்தமாதம்7ஆம் திகதி நடைபெறும்.

(எ-3)


கணக்கீடு
திரு. N.சதீஸ்
B.B.A. (FM.Spl.)
A/L 2006
நிறைவில் பதிவு
ஆரம்பம்: 09.04.2005
சனி 5.00 p.m. Sat., Sun. 5.00 p.m.
(43909)
N.S.A மானிப்பாய் வீதி, உடுவில்.

N.S.A
மானிப்பாய் வீதி, உடுவில்.
A/L 2007
கலை, வர்த்தகப் புதிய பிரிவு
ஆரம்பம்: 09.04.2005 சனி 3.00p.m.
ECO. - P.சண்
ACC. - N.சதீஸ்
B.STU.- பிரபல ஆசிரியர்
TAM. - N.வேந்தன்
LOG. - P.கமல்
H.C. - S.ஜெயக்குமார்
GEO. - N.S.சங்கர்
DRA. - K.கந்தவேள்
★ A/L2006 கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள் நடைபெறுகின்றன.
- நிர்வாகி.
(43910)

எம்முடன் இணைவோர் உயர்கல்வி பெறுவர்
விக்னா கல்வி நிறுவனம்
பிரிவு - 2
A/L 2007 கலை, வர்த்தக வகுப்புகள்
ACC. - திரு.பாலவாசன்
B.ST. - திரு.யசோ
- திரு. முரளி
LOG. - திரு.சயந்தன்
H/C. - திரு.பத்மராஜா
GEO. - திரு.பாபு
HIST. - திரு.பத்மன்
CHRI. - திரு.வசந்தன்
ECO. - திரு. உதயன்
TAM. - திரு. குழந்தை (பிரிவு1)
- திரு. லிங்கம் (பிரிவு2)
HIN. - திரு. N.T.தரன்
P/SCI. - திரு. ஸ்ரீரங்கநாத்
DRAMA - திரு. மதி
ஆரம்பம்: 10.04.2005 காலை 8 மணி
★ அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
(43947)

ஞானோதய அக்கடமி
சாவகச்சேரி
A/L 2007 கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான 2ஆவது பிரிவு ஆரம்பம்.
ஞாயிறு 10.04.2005


| | |
|---|---|
| கலை | ந.ப. 1.00 மணி |
| வர்த்தகம் | காலை 9.00 மணி |
| விஞ்ஞானம் | காலை 8.30 மணி |

(43931)

## வீதிகளை விஸ்தரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறை வீதி, யாழ். - மானிப்பாய் - காரைநகர் வீதி, யாழ். - பண்ணை - ஊர்காவற்றுறை வீதி ஆகியவற்றை இருமருங்கிலும் தலா 10 மீற்றர் அகலமாக்கிப் புனரமைப்பதென்று முடிவுசெய்யப்பட்டது.

இதற்காக மேற்படி 10 மீற்றர் எல்லைக்குள் உள்ளடங்கும் காணிகளைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி காணிகளைச் சுவீகரிப்பதால் ஏற்படக்கூடிய சாதக, பாதக நிலைமைகள் குறித்தும் மேற்படி கலந்துரையாடலில் ஆராயப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இதற்கிடையில் இந்தக் கலந்துரையாடலின் முடிவில் அரச அதிபர், செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது:-

நீண்ட காலத்திட்டம், குறுகியகாலத் திட்டம் என இரு திட்டங்கள் வகுக்கப்பட்டு, வீதிகள புனரமைக்கப்படும் நீண்டகாலத்திட்டம் வகுக்கப்படும் அதேவேளையில் குறுகிய காலத்திட்டத்தின்படியே புனரமைப்பு வேலைகள் இடம்பெறும்.

இத்திட்டங்களின்படி ஒவ்வொரு வீதியும் இருமருங்கும் 20 மீற்றர் அகலமாக்கப்பட வேணடும். இதற்கென வீதியில் இருமருங்கிலும் 10 மீற்றர் அகலமான காணிகள் சுவீகரிக்கப்படவிருக்கின்றன. காணி சுவீகரிப்பு வேலைகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும். ஆயினும், குறுகியகாலத் திட்டத்திற்கமையவே இப்பொழுது புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

காணிகள் சுவீகரிக்கும்போது சட்டரீதியாக அமைக்கப்பட்ட கட்டடங்களை இடிக்க வேணடி நேரிடலாம். இதற்காக நஷ்டஈடு வழங்கப்படும். ஏனைய கட்டடங்களுக்கு ஏவ்வாறான நஷ்டஈடும் வழங்கப்படமாட்டது.

காணிகள் சுவீகரிக்கும்போது ஏற்படும் சிக்கலகளுக்கு மாற்றுத் திட்டங்களைக் கையாள்வதற்கும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இருவழிப்பாதைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாதவிடத்து ஏற்கனவே உள்ள பாதைகளை ஒருவழிப்பாதையாக மாற்றுவதற்கான திட்டம் செயற்படுத்தப்படும்.

இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மக்களின் ஒத்துழைப்புத் தேவை. மக்களின் ஒத்துழைப்புக் கிடைத்தால் 3 மாதங்களுக்குள திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அடுத்த வருட இறுதிக்குள் புனரமைப்பு வேலைகள் முடிவடையும். புனரமைப்புக்கான நிதி கிடைப்பதில் எந்தவித சிக்கலும் இல்லை.

இந்த வீதிப் புனரமைப்புக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற 20 மீற்றர் அகலமான காணிகளில் நடைபெறும் கட்டடத்திருத்த வேலைகள் மற்றும புதிய நிர்மான வேலைகள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பில் அமைந்துள்ள அனைத்துக் காணி,சொத்துக்களின் உரிமையாளர்களும் அக்காணிகளை வீதிகளுக்குத் தந்துதவ வேண்டும் என்றார் அரச அதிபர்.

இத்திட்டத்திற்காக மதிப்பீட்டுத் திணைக்களம், நில அளவைத் திணைக்களம், வீதி அபிவிருததித் திணைக்களம் ஆகியவை இணைந்து செயலாற்றவுள்ளன.

யாழ் - கண்டி வீதிப் புனரமைப்புக்கான நிதியுதவியை ஆசிய அபிவிருத்தி வங்கி, 'கார்ப்' திடடம் மூலம் ஒதுக்கியுள்ளது.

ஏனைய 5 வீதிகளுக்குமான நிதியை ஜப்பான நாட்டின் 'சீரூப்' (Sirup) அமைப்பு ஒதுக்கியுள்ளது. இந்த வீதிகள் புனரமைப்பின் போது ரயில் பாதை அமைப்பிலும் கவனம் செலுத்தப்படும். இதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டு காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டம் தொடர்பாகவும் காணி சுவீகரிப்புத் தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்கள் ரீதியாகக் கூட்டங்கள் நடத்தப்பட்டு மக்களுக்கு விளக்கங்கள் அளிக்கப்படும்.

(ஐ-ஒ-202-203)

## மின்சாரசபை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திபதி கலந்துகொள்ளவில்லை. முதலில் அவர் வருவார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் பின்னர் அவர் வரமாட்டாரென அறிவிக்கப்பட்டது.

முன்னதாக மின்சாரசபையை மறுசீரமைத்தல் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பங்குகளை விற்றல் ஆகியவை தொடர்பான அரசின் திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஜே.வி.பி.நிபந்தனைகளை விதித்திருந்தது.

இந்த இரண்டு துறைகளும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தனியார் மயப்படுத்தப்படமாட்டா என்பதை உறுதிப்படுத்தும் சட்டம் ஒன்றை நிறைவேற்றிய பின்னர் வேண்டுமானால் மறுசீரமைப்புப் பணிகளை அரசு மேற்கொள்ளலாம் என்று ஜே.வி.பி. நிபந்தனை விதித்தது.

தற்போது இந்த நிபந்தனைக்கு அரசு அடி பணிந்துள்ளது.

இந்த விவகாரம் குறித்து மின்சக்தி எரிபொருள்துறை மற்றும் நிதித்துறை ஆகியவற்றின் அமைச்சர்களிடம் ஜே.வி.பி.தலைவர்கள் சுட்டிக்காட்டித் தமது கடும் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருக்கின்றனர். அதற்கமைய மின்சாரசபை தனியார் மயப்படத்தப்படாது என்பதை உறுதிப்படுத்தும் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் நேற்றைய கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனை ஆராய்ந்த அமைச்சரவை, அந்தப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அனுமதியளித்தது.

(எ-க)

## அரசுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ள உயர்மட்ட அமைச்சுப் பொறுப்பொன்றும் ஜூனியர் தொண்டமானுக்கு வழங்கப்படுமென்றும் ஜனாதிபதி சந்திரிகா உறுதியளித்திருக்கிறார்.

தமது அரசியல்த் திட்டங்கள் குறித்து இ.தொ.கா.தலைவருக்கு இந்தச் சந்திப்பில் நாசூக்காக விளங்கப்புடுத்தியிருக்கும் ஜனாதிபதி, நாடாளுமன்றத்தில் இதற்கான ஆதரவை இ.தொ.கா. முழுமையாக வழங்கவேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்.

இதற்கமைய இ.தொ.கா. வெளியிலிருந்து அரசுக்கு வழங்கும் ஆதரவை நிறுத்திவிட்டு முற்றுமுழுதாக அரசுடன் இணைந்துகொள்ள வேண்டுமெனவும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

இ.தொ.காவை அரசின் நிரந்தரப் பங்காளியாக்கத் தாம் ஆர்வம் கொண்டுள்ளார் எனவும், அடுத்த அமைச்சரவை மறுசீரமைப்பின் போது முக்கியமான அமைச்சுப் பதவியொன்று ஆறுமுகன் தொண்டமானுக்கு வழங்கப்படுமென்றும் ஜனாதிபதி அப்போது மேலும் தெரிவித்தாராம்.

ஜனாதிபதி உடனான இந்தச் சந்திப்புக் குறித்துத் தமக்கு நெருக்கமானவர்களுடன் ஆறுமுகன் தொண்டமான் கலந்துரையாடியிருக்கிறார்.

எவ்வாறாயினும் சித்திரைப் புதுவருடத்தின் பின்னர் இதுவிடயத்தில் ஜனாதிபதிக்குச் சாதகமான ஒரு முடிவை எடுப்பதென்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது எனத்தெரிகிறது.

(எ-க)


இலவசம்
புதுவருடத்தை முன்னிட்டு
ANDRA வழங்கும் இலவச
டிஜிற்றல் பிளெக்ஸ் பனர் பிறிண்ட்
◆ உங்கள் வர்த்தக நிலைய விளம்பரங்கள் அடங்கிய அழகிய வர்ண 3, 5 அடி (15 சதுர அடி) பிளெக்ஸ் பனர் பிறிண்டுகளை எம்மிடம் இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.
◆ உங்கள் பிறிண்டுகளை கொழும்பிலிருந்து யாழ் வரை கொண்டுவர ஏற்படும் சிறு செலவுத் தொகை மட்டுமே அறவிடப்படும்.
◆ டிஜிற்றல் போர்ட்டுகளுக்கு 20% கழிவு வழங்கப்படும் .
◆ பாரிய பிளெக்ஸ் கட்டவுட்டுக்களுக்கு 50% கழிவு வழங்கப்படும்.

இச்சலுகை ஏப்ரல் 13 வரை மட்டும்
உங்கள் நிறுவனங்களை விளம்பரப்படுத்த இது ஒரு அரிய சந்தர்ப்பம் என்பதை மறந்து விடாதீர்கள்!
ANDRA DIGITAL IMAGE
K.K..S றோட்,கோண்டாவில்.
T.P:021-4590268

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.